மேலே... உயரே... உச்சியிலே 1
பெட்டிக்கு வெளியே..!
- வெ.இறையன்பு

மனம் எப்போதும் பழகியதை இறுக்கமாகப் பிடித்துக் கொள்கிறது. வழக்கமாய்ச் சிந்திப்பது வசதியாய் இருக்கிறது. புதிய பிரச்னைகளுக்கும், பழைய சவால்களைச் சந்தித்தது போன்றே தீர்வு காண நினைக்கிறது உள்ளம்.

அறிவு என்பதும், மொழி என்பதும் பல நேரங்களில் வசதியாக இருந்தாலும், சில நேரங்களில் நம்மை வழுக்க வைத்துவிடுகின்றன. அப்போது சமயோசித புத்தி என்கிற ஊன்றுகோல் அவசியம்.

வித்தியாசமாகச் சிந்தித்தவர்களே வெற்றிகளைக் குவித்திருக் கிறார்கள். கற்றவற்றை மட்டுமே உபயோகிக்கத் தெரிந்தவர்களுக்கு தலைமைப் பொறுப்பைத் தருவது, உவர் நிலத்தில் விதை விதைப்பதைப் போன்று பயனற்றது.

நேர்க்கோட்டுச் சிந்தனையை முன்மொழிந்தது, மேற்கு. பக்கவாட்டுச் சிந்தனையைப் பகிர்ந்தளித்தது, கிழக்கு. தர்க்கம் என்பது ஒரு கோணத்தில் சிந்திப்பதால் உருவாவது. சாக்ரடீஸ், ப்ளேட்டோ, அரிஸ்டாட்டில் மூவரும் நேர்க்கோட்டுச் சிந்தனையே சிறந்தது என்று நூறு சதவிகிதம் நம்பினார்கள். அவர்களைப் பொறுத்தவரை, இரண்டும் இரண்டும் எப்போதும் நான்குதான். விவாதிப்பதாலும், பிரித்தறிவதாலும், செங்குத்தான சிந்தனையாலும் அத்தனைக் கேள்விகளுக்கும் விடை கண்டுவிட முடியும் என்பதில் அவர்கள் உறுதியாய் இருந்தார்கள்.

அண்மையில், மேற்கு விழித்துக்கொண்டது. தர்க்கத்துக்கு அகப் படாதவை நிறைய இருக்கின்றன என்பதை அது உணர்ந்து கொண்டது.



தர்க்கமே பெரிதென்று ஒருபோதும் இந்தியச் சிந்தனை மரபு நினைக்கவில்லை. தன்னை எதிர்கொண்டவர்களைத் தர்க்கத்தால் வென்றாலும், வாழ்வியல் உண்மை தர்க்கத்தைத் தாண்டியது என்று சாக்ரடீஸுக்கு முன்பே முன்வைத்தவர் புத்தர். அறிவால் அடுத்தவர் வலியை ஒருபோதும் உணர முடியாது என்பதில் அவருடைய அன்பு மார்க்கம் உருவானது. அதனால்தான் 'கடவுள் இருக்கிறாரா?' என்கிற ஒரே கேள்விக்கு, கேட்பவர்களைப் பொறுத்து வெவ்வேறு

விதமாக அவர் விடையளித்தார். விடை வினாவில் இல்லை, விடுப்பவர்களிடமே இருக்கிறது என்பதை அறிந்தவர் அவர். அதனாலேயே விழிப்பு உணர்வு பெற்றவராக அவர் கருதப்படுகிறார்.

இந்திய இதிகாசங்கள் எத்தனையோ சவால்களுக்குச் சாதுர்யமாக விடை கண்டுபிடிக்கும் வழியை உணர்த்தியிருக்கின்றன. அவற்றை வாசிக்கும்போது, உருவகக் கதை முதல் நகைச்சுவை கதை வரை நீண்டு... செங்குத்தாகச் செல்வதால் மட்டும் விடை கிடைக்காது; வளைய வேண்டிய இடத்தில் வளைவதும், குனிய வேண்டிய இடத்தில் பதுங்குவதும், சவாலில் நீள அகலங்களைத் தாண்டி உள்ளுணர்வைச் செலுத்துவதும் அவசியம் எனக் கிழக்கத்திய மரபு உணர்த்துவதை அறிந்துகொள்ள முடியும்.

கம்ப ராமாயணத்தில் ஒரு காட்சி...

அனுமன் சீதை இருக்கும் இடம் அறிந்துவர, கடல் தாவும் படலம். தனியரு நபராகப் புறப்பட்டுச் செல்லும் அனுமனின் வலிமையை அறிவதற்குத் தேவர்கள் விரும்புகிறார்கள். அதற்கு சுரசை என்பவளின் உதவியை நாடுகிறார்கள். சுரசை, அகன்று திறந்த வாயோடு அரக்கியின் உருவம் தரித்தாள். அனுமனை விழுங்க வழிமறித்து நின்றாள். வானத்தைத் தலை முட்டும்படி விசுவரூபம் எடுத்து நின்றாள்.

அனுமனோ, 'ராமனின் செயல் முடித்து வருவேன். அப்போது என்னை விழுங்கிக் கொள்!' என்று விண்ணப்பிக்கிறார். அவள் மறுக்கிறாள். உடனே அனுமன், 'சரி, உன் கோரமான பெரிய வாயின் வழியே புகுந்து செல்கிறேன். வல்லமை இருந்தால் என்னை விழுங்கு!' என்கிறார்.

சுரசை, அண்டங்கள் பல புகுந்தாலும் நிரம்பாத அளவுக்குத் தன் வாயை அகலத் திறந்தாள். அனுமனோ, எல்லாத் திசைகளிலும் பரவிய அவள் வாய் கடுகளவே எனும்படி, வானளாவ வளர்ந்து நின்றார். அதற்கேற்ப சுரசை, மேலும் தன் வாயை அகலப்படுத்தினாள். அடுத்த நொடியே, மிகச் சிறிய வண்டின் உருவம் எடுத்து, சுரசை எதிர்பார்க்காத நேரத்தில் அவள் வாயினுள் புகுந்து, அவள் சுவாசிக்கும் முன்னர் காதின் வழியே வெளிவந்தார். தேவர்கள் அசந்துபோனார்கள். 'இந்த அனுமன் எங்களைக் காப்பான்' எனப் பூமாரி பொழிந்தார்கள்.


நீண்டான் உடனே சுருங்கா நிமிர்வாள் எயிற்றின்
ஊண்தான் என உற்று ஓர்உயிர்ப்பு உயிராத முன்னா
மீண்டான் அதுகண்டனர் விண்உறைவோர்கள் எம்மை
ஆண்டான்வலன் என்று அலர் தூஉய்நெடிது ஆசி சொன்னார்

அனுமனின் இந்தப் பக்கவாட்டுச் சிந்தனை, பக்காவான சிந்தனை.

நம் முன்னோர், மரபுவழியில் மட்டும் சிந்தித்தல் பயன் தராது என்பதைக் கதைகள் வழியாகவும், கணக்குகள் வழியாகவும், கவிதைகள் வழியாகவும் எடுத்துச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

ஆன்மிக இலக்கியங்கள் பக்தி செலுத்த மட்டுமல்ல; புத்தி மேம்படவும் தான் என்பது, அவற்றை வாசிக்கும்போது உன்னிப்பாய் உற்றுநோக்கினால் புலப்படும்.

புதிய முறையில் சிந்திப்பதை, நவீன சிந்தனையாளர்கள் 'பெட்டிக்கு வெளியே சிந்தித்தல்' என்று வரையறுத்தார்கள். 1970-களில் மேலாண்மை நிபுணர்கள், பயிற்சியாளர்களை ஒன்பது புள்ளிகள் கொடுத்து, அவற்றைக் கையெடுக்காமல் நான்கே கோடுகளில் இணைக்கும்படி சவால்விட்டார்கள். இதை, ஜான் அடேர் என்பவர் அறிமுகப்படுத்தியதாகக் குறிப்பிடுவார்கள்.



இந்த ஒன்பது புள்ளிகளுக்குள்ளேயே அதை இணைக்க முயல்பவர்கள் முடியாமல் தடுமாறு வார்கள். புள்ளிக்கு வெளியே செல்லும்போது தான் இதற்கான விடையை அறிய முடியும்.

நம் மனம் சதுரத்துக்கும், செவ்வகத்துக்கும் பழக்கப்பட்டது. எனவே, அந்தப் பாதையிலேயே விடை கண்டுபிடிக்கப் பிரயத்தனப்படும். அதைத் தாண்டுகிறபோதுதான் இது சாத்தியம்!

ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம், "11 ஆப்பிள்களை 12 சிறுவர்களுக்கு எப்படிச் சரிசமமாகப் பிரித்துக் கொடுப்பீர்கள்?" என்று கேட்டார். உடனே, மாணவர்கள் நோட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு, 11-ஐ 12-ஆல் வகுத்து விடை காண முயன்றார்கள். திணறினார்கள். அவர்களைப் பார்த்து, "ஏன் அத்தனைச் சிரமப்படுகிறீர்கள்? 11 ஆப்பிள்களையும் பழரசமாக்கினால் 12 சமமான குவளைகளில் ஊற்றிப் பகிர்ந்து தரலாமே?" என்று கேட்டுச் சிரித்தார் ஆசிரியர்.

'பெட்டிக்கு வெளியே சிந்திப்பது' என்பது இதுதான்!

ஆப்பிள்களைப் பிரிப்பது என்றால், அவற்றின் வடிவத்திலேயே பிரித்துத் தரவேண்டும் என்று நினைக்கிறோம். அதைப் பழக்கூழாக உருவகப்படுத்திப் பார்க்க நமக்குத் தோன்றவில்லை. அதனால்தான் இந்தத் தொல்லை நமக்கு ஏற்படுகிறது.

இது, ஆப்பிள்களைப் பிரிப்பதில் மட்டுமல்ல; ஒரு நிறுவனத்தின் லாபத்தைப் பகிர்ந்து தருவதிலும் சிக்கலை உண்டாக்குகிறது. நாட்டுக்கான ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டுவதிலும் குழப்பங்களை ஏற்படுத்துகிறது. ஏனென்றால், நாம் மூலாதாரங்களை அப்படியே விநியோகிக்கும் வழிமுறைகளில் கவனத்தைச் செலுத்துகிறோமே தவிர, யாருக்கு என்ன தேவை என்பதை வசதியாக மறந்துபோகிறோம்.

சூஃபி மரபில் ஒரு கதை உண்டு.


ஒரு பெரியவர் வசம் 17 ஒட்டகங்கள் இருந்தன. 'பாதி ஒட்டகங்கள் முதல் மகனுக்கும், மூன்றில் ஒரு பங்கு 2-வது மகனுக்கும், ஒன்பதில் ஒரு பங்கு 3-வது மகனுக்கும் சொந்தம்' என விசித்திரமாக ஓர் உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துபோனார் அவர்.

பதினேழு ஒட்டகங்களைப் பாதியாகப் பிரிப்பது எப்படி என்பதிலேயே குழப்பம் ஏற்பட்டது. ஊரில் இருக்கும் கணித மேதை களிடம் உயிலையும் ஒட்டகங்களையும் எடுத்துச் சென்றார்கள் பிள்ளைகள். அனைவருமே, 'வேறு வழியில்லை; கொன்றுதான் பிரிக்க முடியும்' என்று கருத்துச் சொன்னார்கள். அப்போது, பள்ளிப் படிப்பு அதிகம் படிக்காத, ஆனால் அனுபவப் படிப்பில் தேர்ந்த பெரியவர் ஒருவர், "ஒட்டகங்களைக் கொல்லத் தேவையில்லை. நான் பிரித்துத் தருகிறேன்' என்றார். அவர் எப்படிப் பிரிக்கப் போகிறார் என்பதைப் பார்க்க, ஊரே ஒன்று திரண்டது.

அவர் தன்னிடமிருந்த ஒரு ஒட்டகத்தை அந்த 17 ஒட்டகங்க ளோடு சேர்த்து, எண்ணிக்கையைப் பதினெட்டு ஆக்கினார். முதல் மகனுக்குப் பாதியல்லவா? எனவே, ஒன்பதைக் கொடுத்தார்; இரண்டாம் மகனுக்கு மூன்றில் ஒரு பங்காக 6 ஒட்டகங்களைக் கொடுத்தார்; மூன்றாம் மகனுக்கு ஒன்பதில் ஒரு பங்கென இரண்டைக் கொடுத்தார். எஞ்சியிருந்த தனது ஒரு ஒட்டகத்தைத் திரும்ப எடுத்துக்கொண்டார்.

இதுதான் பெட்டிக்கு வெளியே சிந்தித்தல்!

இன்று நம் முன்னால் பல புதுப் புதுப் பிரச்னைகளும், சவால் களும் காத்திருக்கின்றன. புத்தகங்களை வாசித்தோ, முற்காலத்தில் தீர்த்துவைத்ததைப் போல வழக்கமான அணுகுமுறையில் தீர்வு காண முயன்றோ அவற்றைச் சரிசெய்துவிட முடியாது. முற்றிலும் புதியதொரு அணுகுமுறை தேவை!



இன்றைய இளைஞர்கள் பெரும்பாலும் இரண்டாம் தலைமுறையைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நேரடியாக ஏமாற்றங்களையும், அதிர்ச்சிகளையும் சந்திப்பதில்லை. மனரீதியாகப் பெற்றோரின் கருவறைக்குள்ளேயே அவர்கள் பத்திரமாக இருக்க விரும்புகிறார்கள். எல்லாவற்றுக்கும் தயாரித்துவைத்த விடைகள் கிடைக்காதா என்று எதிர்பார்க்கிறார்கள். சந்திக்கிற மனிதர்கள் எல்லாம் கணினியைப் போல இயங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். முதல் முறையிலேயே கணக்கின் விடையைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்பது அவர்கள் அவா!

தேர்வு வேறு, வாழ்வு வேறு! புதிய புதிய சிக்கல்களோடு புலப்படுவது தான் வாழ்க்கை. இன்று பல நிறுவனங்களில் முன்னனுபவம் என்பது எதிர்மறையாகக் கருதப்படுகிறது. அனுபவம் உள்ளவர்கள் ஆபத்துடன் வாழ முயலமாட்டார்கள்; நிச்சயமற்ற தன்மையை அவர்கள் சந்திக்க பயப்படுவார்கள்; ரிஸ்க் எடுப்பது அவர்களுக்குக் கடினம் என்பதால், இளைய தலைமுறையினரே அதிகம் தேவைப்படுகிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் தங்கள் அறிவைக் கூர்தீட்டிக்கொண்டு, விடைகாணும் பக்குவத்துடன் திகழ்வது அவசியம். இலக்கியங்களி லிருந்தும், இதிகாசங்களிலிருந்தும் இதை நாம் கற்றுக்கொள்ளலாம். சரித்திர நாயகர்களும் அவதார புருஷர்களும் செக்குமாடாகச் சிந்திக்காமல், கட்டவிழ்த்த காளையாகத் தங்களது சிந்தனைகளைத் தட்டிவிட்டதால் மட்டுமே மேலே... இன்னும் மேலே... உயரே... உச்சியிலே சிகரத்தை அடைந்து செம்மாந்திருந்தார்கள்! நம்மையும் அப்பாதையில் பயணப்படச் செய்வதற்காகவே இந்தத் தொடர்.

இத்தொடரில், மரபு வழி இலக்கியங்கள் வாயிலாகவும், கர்ணவழிக் கதைகள் மூலமாகவும், நவீன புதிர்களின் மூலமாகவும் தமிழக இளைஞர்களை மாறுபட்ட கோணத்தில் 'பெட்டிக்கு வெளியே' யோசிக்க வைப்பதே என் நோக்கம்.

வாருங்கள், மாற்றி யோசிப்போம். நம் மரபைப் போற்றி வாசிப்போம். மேலே... உயரே... உச்சியை எட்டுவோம்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 2

பூனைக்கு எவ்வாறு மணி கட்டுவது?

வெ.இறையன்பு, ஓவியங்கள்: அனந்த பத்மநாபன்

கடினமான பிரச்னைகளுக்கு எளிதான விடைகளை அளிப்பது சகஜம். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்துவது இயலாத காரியம் என்பதை வலியுறுத்துவதற்கு நம்மிடம் பல கதைகள் உண்டு. திட்டத்தைச் செயல்படுத்துபவர்களுக்கு, வழியிலே செல்பவர்கள் ஆயிரம் விதமான யோசனைகளைக் கூறுவது வழக்கம். எதையும் விமர்சிப்பது சுலபம். நடைமுறைப்படுத்துவது எளிதல்ல.

இன்று நாட்டின் பல பிரச்னைகளுக்கு யார் யாரோ யோசனை சொல்கிறார்கள். அவர்கள் வீட்டிலிருக்கும் சின்னப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல்தான் அவர்கள் திண்டாடுகிறார்கள். அவர்களது சட்டை பிரிந்திருப்பது தெரியாமல், பாராளுமன்றக் கட்டடத்தின் ஓட்டைகளைப் பற்றியும், அதில் ஒட்டடை படிந்திருப்பதைப் பற்றியும் மணிக்கணக்கில் விவாதிக்கிறார்கள்.

இதுகுறித்த பழங்கதை ஒன்று உண்டு...

ஒரு வீட்டில் இருந்த எலிகள், அடிக்கடி பூனைத் தொந்தரவால் புண்பட்டன. தலைதப்பத் தாவி ஓடுவதிலேயே அவற்றின் இதயத் துடிப்பு எகிறியது. ஒருநாளும் நிம்மதியாக தானியங்களைத் தின்னவும் முடியவில்லை, பத்திரமாகக் கொண்டு சென்று பதுக்க வும் முடியவில்லை. 'இப்படியே போனால் என்ன செய்வது?' என்று நடுங்கி, இதுகுறித்து அவை வட்டமேசை மாநாடு கூட்டின!

எந்த வட்டமேசை மாநாடும் உருப்படியான தீர்வில் முடிந்ததாகச் சரித்திரம் இல்லை. எலிகள் மாநாட்டில் ஓர் எலி, 'இந்தப் பூனை திடீரென்று ஓடிவந்துவிடுகிறது. அதன் மென்மையான பாதங்களால், வருகிற சத்தமும் நமக்குக் கேட்கவில்லை. எனவே, அது தொலைவிலே வரும்போதே அறிய முடிந்தால் நாம் தப்பித்து ஓடிவிடலாம்' என்று ஆலோசனை சொன்னது.



உடனே, மற்ற எலிகளெல்லாம் அந்த யோசனை சரி என்று ஆமோதித்து, பூனை தூரத்தில் வருவதை எப்படிக் கண்டு கொள்வது என்று விவாதிக்கத் தொடங்கின.

ஓர் எலி, 'பூனையின் கழுத்தில் மணி இருந்தால் அது ஒலிக்கும். எனவே, பூனை தொலைவில் வரும்போதே கண்டுபிடிக்கலாம்' என்று தீர்வைச் சொன்னது. எல்லா எலிகளும் "ஆகா! அருமையான யோசனை!' என்று அந்த எலியைப் பாராட்டின. ஆனால், பூனையின் கழுத்தில் யார் போய் தைரியமாக மணி கட்டுவது என்பதுதான் பிரச்னையாகி விட்டது. அதனால் இன்னமும் எலிகள் பாதுகாப்பில்லாமல் இருக்கின்றன என்று அந்தக் கதை கூறுகிறது. உண்மையிலேயே பூனையின் கழுத்தில் மணியே கட்ட முடியாதா?. இதற்குத் தீர்வே இல்லையா என்று யோசிப்போம்.

ஒரு மாணவன் சிந்தித்தான். 'பூனையின் கழுத்தில் மணி கட்ட முடியாது என்பதை எலிகள் உணர்ந்துகொண்டன. ஆனால், பூனை குட்டி போட்டிருக்கிறது. அந்தக் குட்டி இன்னும் கண் விழிக்கவில்லை. அதன் கழுத்தில் மணியைக் கட்டலாம் என்று எலிகள் முடிவு செய்தன. அதன்படியே, தாய்ப் பூனை வேட்டையாடச் சென்றிருக்கும் போது, எலிகள் ஒன்றுசேர்ந்து கண் விழிக்காத குட்டியின் கழுத்தில், சிறியதொரு மணியைக் கட்டின. இப்போது, பூனை குட்டியோடு வரும்போது மணிச் சத்தம் கேட்டு தப்பி ஓடிவிடுகின்றன' என்று இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு சொன்னான்.

இன்னொரு இளைஞன் இதுகுறித்துச் சிந்தித்தான். 'பூனையின் கழுத்தில் யார் மணி கட்டுவது என்று எலிகள் விவாதித்தன. பெரிய எலிகள் மணி கட்டுவதை நினைத்தே பயந்து நடுங்கின. அப்போது, ஒரு குட்டி எலி, "நாளைக்குள் நான் கட்டிவிடுகிறேன்" என்று சொன்னது. மற்ற எலிகள் அதைப் பார்த்து கை கொட்டிச் சிரித்தன. அடுத்தநாள் பூனை வரும்போது மணியோசை கேட்டது. எலிகள் ஓடி ஒளிந்தன. பூனைக்கு ஏமாற்றம். அதற்குப் பிறகு, பூனையால் அந்த வீட்டில் ஓர் எலியைக்கூட பிடிக்க முடியவில்லை. எல்லா எலிகளும் வியந்தன. யாரால் இந்தச் செயலைச் செய்ய முடிந்தது என்று அவற்றுக்கு ஆச்சரியம். அப்போது குட்டி எலி சொன்னது:

'நான்தான் மணியைக் கட்டினேன்.'

மற்ற எலிகள், "எப்படிக் கட்ட முடிந்தது?' என்று கேட்டன.

'நான் இரவு நேரத்தில் பக்கத்து மருந்துக்கடையிலிருந்து தூக்க மாத்திரைகளை எடுத்து வந்தேன். பூனை குடிக்கும் பாலில் அவற்றைப் போட்டேன். அது, அயர்ந்து தூங்கும்போது மணியைக் கட்டினேன்' என்று சொன்னது.

எந்தப் பிரச்னைக்கும் தீர்வு உண்டு. இன்று பூனையின் கழுத்தில் மணியைக் கட்டிவிட்டு, எலிகள் சுதந்திரமாக எல்லாவற்றையும் அபகரித்து பதுக்கிக்கொண்டிருப்பதுதான் நாம் அன்றாடம் காணும் காட்சி.

எந்த ஒரு நிறுவனத்திலும், ஒரு புது யோசனையை யாராவது தெரிவித்தால், அது சாத்தியமில்லை என்றே முதலில் சொல்லப்படுகிறது. ஏனென்றால், புதியன செய்வதற்கு நிறைய சிந்திக்க வேண்டும், திட்டங்கள் வகுக்க வேண்டும். மனத்தயாரிப்புகள் தேவை. என்னென்ன மாதிரி இடைஞ்சல்கள் வரும் என்பதை முன்கூட்டியே யோசிக்க வேண்டும். அதற்கு உழைப்பும், பொறுமையும், முயற்சியும் தேவை. புதிய நடைமுறையை அமல்படுத்தினால் சிலநேரங்களில் இழப்புகள் ஏற்படும். அதைத் தாங்கிக்கொள்ளும் துணிச்சல் எல்லோருக்கும் இருப்பதில்லை.

எனவே, பழக்கப்படாத புதிய ஒன்றைச் செயல்படுத்து வதைவிட, வழக்கமான ஒன்றைச் செயல்படுத்தி சராசரியாக வாழ்வதையே மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். எடுத்த எடுப்பில் 'இது சிரமம்', 'இது சாத்தியமில்லை', 'இது வெள்ளை யானை', 'இது யுடோபியா' என்று சொல்வதுதான் நாம் சந்திக்கின்ற பதில்கள்.

நம்மைத் தாண்டி யாரும் வித்தியாசமாகச் சிந்திக்க முடி யாது என்பதில் நாம் திடமாக இருக்கிறோம். நல்ல கருத்துகள் கடைநிலை ஊழியரிட மிருந்துகூட வர முடியும் என்பதை அறிந்தவர்கள், யார் யோசனை கூறுகிறார் என்று ஆராயாமல், யோசனை எப்படிப் பட்டது என்பதை மட்டுமே சிந்திக்கிறார்கள்.

எதற்கும் வழியுண்டு என்பதற்கு ஒரு வரலாற்றுச் சம்பவம் உண்டு.

பேராசிரியர் நியூக்லிட், தன் பேராசிரிய நண்பர்களுடன் எகிப்து நாட்டிலுள்ள பிரமிடுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அந்தத் தருணத்தில் ஒரு நண்பர், 'நியூக்லிட்! எல்லோரும் உங்களை அறிஞர் என்று சொல்கிறார்கள். இந்த பிரமிட் சரியாக எவ்வளவு உயரம் என்று சொல்ல முடியுமா? உங்களிடம்தான் அளவு நாடா உள்ளதே!" என்றார்.

யாராலும் பிரமிட் மேல் ஏறி உயரத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால், அதன் அடிப்பகுதி மிகவும் அகலமாகவும், போகப்போகக் குறுகியும் செல்கிறது. அங்கிருந்து நாடாவை தொங்கவிட்டு அளக்க முடியாது என்பது நியூக்லிட்டுக்குப் புரிந்தது. எல்லோரும் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள்.

உடனே நியூக்லிட், 'நண்பர்களே! இயலாத செயல் என்று எதுவும் இல்லை. எதற்கும் ஒரு சுலபமான வழி உண்டு' என்றார். பிறகு அவர், தன் கையிலிருந்த அளவு நாடாவினால் பிரமிட்டின் நிழலை அளந்தார். அதைக் குறித்துக்கொண்டார். பிறகு, தனது நிழலை அளந்தார். தன் நிழலையும், தன் உயரத்தையும் வைத்துக் கணக்கிட்ட அவர், பிரமிட்டின் உயரத்தைக் கணக்கிட்டுச் சொன்னார்.

நியூக்லிட் சொன்னது பிரமிட்டின் துல்லியமான உயரமாக இருப்பதைக் கண்டு, அவருடன் வந்த பேராசிரியர்கள் யாவரும் வியப்படைந்து, அறிஞர் நியூக்லிட்டை பாராட்டினார்கள்.

எல்லாப் பிரச்னைகளையும் ஒரே மாதிரி அபுக முடி யாது. சிலவற்றை பிரித்துப் பார்க்க வேண்டும், சிலவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்க்க வேண்டும். எவற்றைப் பிரித்துப் பார்ப்பது, எவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்ப்பது என்பதில்தான் ஒருவரின் நிபுணத்துவம் அடங்கியிருக்கிறது.

ஒரு மருத்துவர், உடலை ஒட்டுமொத்தமாகப் பார்க்க வேண்டும். காலின் வலியை மட்டும் அகற்றுவதற்காக அவர் தருகிற ஆன்ட்டி பயோடிக் மிகச் சக்தி வாய்ந்ததாக இருந்தால், காலின் வலி உடனே சரியாகிவிடும். ஆனால், அது சிறுநீரகத்தை பழுதாக்கிவிடக்கூடும். அதனால்தான் இன்றைய மருத்துவம், அறிகுறிகளை வைத்து மட்டும் நோயைத் தீர்க்க முயற்சி செய்வதில்லை. அடிவேரையே அறிந்து கொள்ள ஆசைப்படுகிறது.



பொறியாளர் ஒருவருடைய பணியே வேறுவிதமானது. அவர் ஒவ்வொரு பொருளிலும் உறுதி இருக்கவேண்டும் என்று விரும்புவார். பலவீனமான செங்கல்லை பலமான சிமென்டால் ஈடுகட்ட அவர் ஒருபோதும் நினைப்பதில்லை. ஒரு நீண்ட பணியை கையிலெடுக்கும்போது, அவர் அதிலிருக்கும் சிறு சிறு பணிகளை, தனித்தன்மை உடையவையாகப் பிரிக்கிறார்.

ஒவ்வொரு சிறு பணிக்கும் எவ்வளவு நாள் ஆகுமென்று முடிவு செய்கிறார். இதில் எந்தப் பணிகள் ஒரே நேரத்தில் செய்யப்படக் கூடியவை... எவற்றை, வேறொரு பணி முடிந்தபிறகுதான் தொடங்க முடியும் என்று வரையறுக்கிறார்.

உதாரணமாக, கூரை வரை கட்டுமானம் ஆனபிறகுதான் முட்டடிக்க முடியும். ஆனால் கட்டுமானம் நடக்கிறபோதே கதவுகள், ஜன்னல்கள் போன்றவற்றைச் செய்துவிட முடியும். சுற்றுச்சுவர் எழுப்பிவிட முடியும், தோட்டத்தில் மரங்களை நட்டுவிட முடியும். இவ்வாறு அவர் திட்டமிடும்போது, எந்தப் பணிகள் ஒட்டுமொத்த பணியின் காலஅளவை தீர்மானிக்கின்றன என்பதை அறிந்து, அதை முடுக்கிவிடுவதில் முயற்சியையும், மும்முரத்தையும் காட்டுகிறார்.

இப்போது கட்டுமானத்தை விரைவு படுத்துவதற்கு, ஏற்கெனவே முன் வடிவமைக்கப் பட்ட பொருட்களைக் கையாளலாம் என்பது மாறுபட்ட சிந்தனை. இவ்வாறு செய்வதன் மூலம் மொத்த கட்டடத்தையே பத்துப் பதினைந்து நாட்களில் எழுப்பிவிடும் வசதி வந்துவிட்டது.

எனவே, எதை எவ்வாறு கையாள வேண்டும் என்பதில், அந்தப் பணியின் தன்மையும், அதில் உள்ள நுட்பக்கங்களும் முற்றிலுமாக யோசிக்கப்படவேண்டியவை. அப்போதுதான் நமது முயற்சிகள் விரைவில் பலனைத் தரும். சிரமத்தைக் குறைக்கும்.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 3

மரணத்தையும் வெல்லலாம்!

வெ.இறையன்பு

மாற்றி யோசிப்பவர்கள் மிகப்பெரிய நெருக்கடியையும் நொறுக்கித் தள்ளிவிடலாம். அதைத்தான் நமது புராணங்களும், இதிகாசங்களும் சொல்லி, நம்மை உற்சாகப்படுத்துகின்றன.

அஸ்வபதி என்றொரு மன்னர். அவருக்கு ஓர் அழகான ஆரணங்கு. அவள் பெயர் சாவித்திரி. திருமணப் பருவம் வந்தது. அவள் விரும்புகிறவனைக் கணவனாகத் தேர்ந்தெடுக்க தந்தை அவளுக்கு வாய்ப்பு தந்தார். சாவித்திரி தனக்கேற்ற கம்பீரத்துடன் ஒருவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினாள். எனவே, தங்க ரதத்தில் ஏறி சிப்பாய்களோடு தூர தேசங்களுக்கு எல்லாம் பயணம் செய்தாள். ஆனால், பயனில்லா பயணம்.

ஓர் இளவரசனைக்கூட சாவித்திரிக்குப் பிடிக்கவில்லை. அவள் ஒரு புனித ஆசிரமத்துக்கு வந்தாள். அங்கு அன்பும், அமைதியும் தவழ்ந்ததால் விலங்குகளுக்குக்கூட பயம் இல்லை. அந்த அமைதிப் பிரதேசத்தில் த்யுமத்சேனா என்ற மன்னன் சடாமுடியுடன் வசித்திருந்தான். இப்போது அவன் ராஜ்ஜியம் இல்லாத ராஜா. எதிரிகளால் தோற்கடிக்கப்பட்டு, அரசையும் இழந்து, பருவம் கடந்ததால் பார்வையையும் இழந்து வறுமையோடு அங்கு வாழ்ந்தான். அவன் மனைவியும், மகனும் அங்கு கடுந்தவத்தில் காலத்தைக் கழித்தனர். அந்த இளைஞனின் பெயர் சத்தியவான்.

சாவித்திரி அந்த ஆசிரமத்தைக் கடக்கும்போது, முனிவராய் இருக்கும் த்யுமத்சேனாவுக்கு மரியாதை செலுத்தத் தோன்றியது. அவள் அவ்வாறு செய்யும்போது, அவள் பார்வை சத்தியவான் மீது பட்டது. மாட- மாளிகைகளில் இருந்த இளவரசர்களால் ஈர்க்கப்படாத அவள், மடத்திலே இருந்த சத்தியவானிடம் இதயத்தைக் கொடுத்தாள். மடத்தைக் கொடுத்தால் இடத்தைப் பிடிப்பது இதுதான்!

சாவித்திரி, அப்பாவின் அரண்மனைக்குத் திரும்பி வந்தாள். அஸ்வபதி, "மகளே, நீ யாரையாவது மணக்க விரும்புகிறாயா?" என்று கேட்டார். சாவித்திரியின் கன்னங்கள் நாணிச் சிவந்தன. மன்னர் புரிந்துகொண்டார்.

'அந்த இளவரசனின் பெயர் என்ன?"

"அவர் இளவரசன் அல்ல; அரசை இழந்த மன்னனின் மகன். அரச வாழ்க்கையில் இல்லாமல் ஆசிரம வாழ்க்கையில் இருக்கும் சந்நியாசி. அறுசுவையை உண்ணாமல் வேர்களையும், தழைகளையும் தின்னும் ஏழை"

அரசன் விவரத்தை அறிந்து, அங்கு எதேச்சையாக வந்திருந்த நாரத முனிவரிடம் அறிவுரை கேட்டான். நாரத முனிவர், அது மிகவும் அபசகுனமான தேர்வு என்று குறிப்பிட்டார். மன்னன் துருவித் துருவிக் கேட்டான்.

'இன்னும் பன்னிரண்டு மாதங்களில் அந்த இளைஞன் இறந்துவிடுவான்' என்றார் நாரதர்.

அரசன் சாவித்திரியிடம், 'கணவன் இறந்தால் நீ கைம்பெண்ணாகிவிடுவாய். நன்றாக யோசித்துப் பார்.. உன் தேர்விலிருந்து விலகு' என்று வற்புறுத்தினார்.

'கவலைப்படாதீர்கள் தந்தையே! வேறொருவரைத் திருமணம் செய்துகொண்டு வாழ என் கற்பு இடம் தராது. ஒரு பெண் ஒருமுறையே கணவனைத் தேர்ந்தெடுக்க முடியும். அதற்குப் பின் விலக முடியாது!' என்று அவள் வலியுறுத்தினாள். அடம்பிடித்தாள்.

அரசன், அவள் சொல்லைக் கடைப்பிடித் தான். அவள் சத்தியவானைக் கைப்பிடித்தாள்.

நாரதர் சொன்னது நடப்பதற்கு மூன்று நாட்களே கெடு இருந்தது. சத்தியவான் எந்த நாளில் இறப்பான் என்பது அவளுக்குத் தெரிந்தும், அவனிடமிருந்து அதை மறைத்தாள். கடுமையான விரதம் இருக்க ஆரம்பித்தாள். கெடு விதிக்கப்பட்ட நாள் வந்தது. அவளும் கணவனோடு உணவைச் சேகரிக்கச் சென்றாள். சத்தியவான் தலை சுழல சாய்ந்தான். அவள் அவனைத் தன் மடியில் கிடத்திக் கொண்டாள்.

மரணத்தின் தூதுவர்கள் அவன் உயிரைக் கவர வந்தார்கள். ஆனால், சாவித்திரி இருந்த இடத்தைச் சுற்றி நெருப்பு வளையம் இருந்ததால், அவர்கள் பயந்து ஓடினார்கள். யமனே அங்கு வந்தான். அவன் அந்த நெருப்பு வளையத்துக்குள் நுழைந்தான்.



'மகளே! இந்த உடலுக்கு உரிய உயிரைக் கொடுத்துவிடு. மரணம் என்பது நிகழ்ந்துதான் தீர வேண்டும்'' என்று யமன் கூறினான். அவன், சத்தியவானின் ஆத்மாவை எடுத்துக்கொண்டு செல்லும்போது, யாரோ பின்தொடர்ந்து வருவதைக் கண்டான். பார்த்தால் சாவித்திரி.

'மகளே, ஏன் என்னைப் பின்தொடர்கிறாய்?' என்று கேட்டான்.

'கணவனைப் பின்தொடர்வது மனைவியின் கடமை' என்றாள் அவள்.

'நீ, உன் கணவனின் உயிரைத் தவிர, வேறு என்ன வரம் வேண்டுமானாலும் கேள்; தருகிறேன்' என்றான் யமன்.

உடனே சாவித்திரி வரம்கேட்டாள். 'யமதர்ம ராஜாவே! என் மாமனார் அவர் இழந்த கண் பார்வையைத் திரும்பப் பெற்று மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!'

'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு யமன் சென்றான். மறுபடியும் யாரோ பின்தொடரும் ஓசை.

'மகளே, ஏன் இன்னும் பின்தொடர்கிறாய்?'

'என் மனம் என் கணவன் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறது. அவர் ஆத்மாவோடு என் ஆத்மாவும் கலந்துவிட்டது. எனவே, என் உடல் அதைப் பின்தொடர்கிறது'' என்றாள் சாவித்திரி.

அவள் சாதுரியத்தைக் கண்டு மகிழ்ந்த யமன், 'இன்னொரு வரம் கேள், உன் கணவனின் உயிரைத் தவிர' என்றான்.

'என் மாமனார் இழந்த அரசையும், செல்வத்தையும் திரும்பப் பெறவேண்டும்' என்றாள் சாவித்திரி.

'நீ கேட்ட வரத்தைத் தந்தேன். கவர்ந்த உயிரை மட்டும் நான் திருப்பித் தர முடியாது' என்று சொல்லிவிட்டு யமன் செல்லத் தொடங்கினான். மறுபடியும் சாவித்திரி தொடர்ந்தாள்.

'இப்போது என்ன வரம் வேண்டும்?' என்று யமன் கேட்டபோது, 'என் மாமனாரின் ராஜ மரபு துண்டிக்காமல் தொடர வேண்டும். அவர் ராஜ்யம் சத்தியவானின் மகன்களுக்குச் சென்று சேர வேண்டும்' என்றாள் அவள்.

அவளுடைய சாமர்த்தியத்தைக் கண்டு யமனே வியந்தான். அவள் கேட்ட வரத்தைத் தருவதைத் தவிர, அவனுக்கு வேறு வழியில்லை. நேரடியாகக் கணவனின் உயிரைக் கேட்காமல் வாரிசு வேண்டுமென்று கேட்டு கணவனின் உயிரையும், ராஜ்ஜியத்தையும், மாமனாரின் பார்வையையும், பகைவர்கள் வெல்ல முடியாத அளவுக்கு பலத்தையும் ஒருங்கே பெற்றாள் சாவித்திரி.

மதியோகிகள் மரணத்தையும் வெல்வார்கள் என்பதற்கு இந்தப் புராணக் கதை சான்று. மாற்றி யோசிப்பது ஆபத்துகளில் இருந்து காப்பதுடன், ஏற்பட்டிருக்கும் விபத்தையும் வெல்ல உதவும்.

வித்தியாசமாகச் சிந்திப்பவர்கள் கருங்கல் பாறையையும் கசிய வைப்பார்கள் என்பதற்கு நாட்டுப்புறக் கதையன்று சான்றாக இருக்கிறது.

போஜராஜனைப் பார்ப்பதற்கு, கவி ஒருவர் நீண்டநாட்களாக முயன்று கொண்டிருந்தார். காவலாள் ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணத்தைச் சொல்லி அவரைத் தடுத்து வந்தான். 'இப்போது அரசர் குளியல் அறையில் இருக்கிறார், இப்போது சாப்பிடுகிறார், இப்போது தூங்குகிறார், இப்போது அந்தப்புரத்தில் இருக்கிறார்!' என்று ஏதாவது ஒரு காரணத்தை அவன் சொல்லுவான்.

ஒருநாள், அரசன் உள்ளூர்க் கோயிலுக்குச் சென்றிருந்த நேரம் பார்த்து, அந்தக் கவியும் அங்கே போனார். கோயிலில் எல்லோருக்குமே அந்தக் கவியின் புலமையில் மோகம் உண்டு. எனவே, அவரை உள்ளே அனுமதித்தார்கள். அரசன் சிவபெருமானைத் துதித்துக்கொண்டிருந்தபோது, கவி அவர் பின்னால் போய் நின்றார். குருக்கள் ஆரத்தி எடுத்தார். அப்போது கவி, 'அங்கே சிவபெருமான் இல்லை!' என்று கத்தினார். பின்னாலிருந்து வந்த ஒலியைக் கேட்டு அரசன் திடுக்கிட்டான். கவியைத் திரும்பிப் பார்த்து, 'எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?'

என்று கண்டிப்போடு கேட்டான். 'வெகு நாளைக்கு முன்பே சங்கரனார் தமது உடலில் பாதியை நாராயணனுக்குக் கொடுத்துவிட்டார். மற்றொரு பாதியை மலைமகளுக்குக் கொடுத்துவிட்டார். அதனால் அவருடைய அடையாளத்தைச் சுட்டிக்காட்ட ஏதுமில்லை!' என்றார் கவி. 'அவர் தலையில் இருந்த கங்கை எங்கே போயிற்று?' என்று போஜராஜன் கேட்டான். 'அது கடலில் கலந்துவிட்டது!' என்றார் கவி.

உடனே ராஜா, 'அவர் தலையில் அணியாகத் திகழ்ந்த வெண்மதி என்னவாயிற்று?' என்று கேட்டார். அதற்குக் கவி, 'அது வானத்துக்குச் சென்று, இப்போது அங்கேயே நிலவுகிறது!'

என்றார். அதற்கு போஜராஜன், 'ஆனால், அவருடைய சக்தி மட்டும் கட்டாயம் இருக்க வேண்டுமே?' என்றார். 'அதுவும் இல்லை! அதையும் அவர் தங்களுக்குத் தந்துவிட்டாரே!' என்றார் கவி.

கவியின் இந்த பேச்சைக் கேட்டு அரசன் போஜராஜன் மகிழ்ந்து, புன்னகை பூத்தபடியே, 'எல்லாம் போனாலும் அவருடைய பிச்சைப் பாத்திரம் மட்டும் அவசியம் இருக்குமே!'

என்றான். 'அதுவும் அவரிடம் இல்லை! அதை அவர் எனக்குத் தந்துவிட்டார்!' என்றார் அந்தக் கவி. இதன் மூலம் கவியின் வறுமையை உணர்ந்த போஜராஜன், அவரது வறுமையை அறவே துடைத்து, அவருடைய காவியம் மலரவும் வழி செய்தான்.

எதையும் பக்குவமாகச் சொன்னால், உருகாத மனத்தையும் உருகவைத்துவிடலாம். கடினமான பாறையையும் நெக்குருக வைத்துவிடலாம்.

எப்போதும் ஒருவரிடம் கருத்துச் சொல்கிறபோது, சாதகங்களை முதலில் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு பாதகங்களைச் சொல்லவேண்டும். அப்போதுதான், எதிராளி நம் கருத்தை முழுவதுமாக ஏற்றுக்கொள்வார். எடுத்தவுடன் குறைகளைப் பட்டியலிட்டால், நம் கருத்து குறைப்பிரசவமாகிவிடும்.

எந்த ஒரு திட்டத்தைப் பற்றியும் குறிப்பு எழுதும்போது, முதலில் அதிலிருக்கும் நல்ல அம்சங்களைக் குறிப்பிடவேண்டும். பிறகு, அதிலுள்ள பழுதுகளை நயமாகக் கூறுவதோடு, அவற்றை எவ்வாறு களைய வேண்டும், களைந்தால் என்ன நன்மை ஏற்படும் என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். அப்போதுதான், கேளாதாரும் அதைக் கேட்பமொழிபவராக நாம் இருப்போம்.

(இன்னும் மேலே)

மேலே... உயரே... உச்சியிலே 4

அன்றே சொன்னார்கள்!
வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

பல நேரங்களில் நமக்குள் சில கேள்விகள் எழுவது உண்டு. 'சேவல்கள் ஏன் முட்டையை அடைகாப்பது இல்லை? ஏன், கோழிகள் மட்டுமே குஞ்சுகளைப் பராமரிக்கின்றன? கன்றைப் பார்க்கும் பொறுப்பு ஏன் பசுவிடம் மட்டுமே இருக்கிறது? மனிதர்களில்கூட, எப்போதும் தாய்தானே குழந்தையைத் தொடக்கக் காலத்தில் அதிகம் கவனிக்கிறாள்?' இப்படியான கேள்விகள் எழாமல் இல்லை.

'குழந்தை நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே' என்று சொன்னால் பெண்ணிய அமைப்பினர் கோபம் அடைகிறார்கள். பொன்முடியார் என்றொரு சங்க காலப் புலவர்; 'மகனைச் சான்றோன் ஆக்குவது தந்தையின் கடமை' என்கிறார் அவர். எல்லா உயிரினங்களிலும் தாய்க்கே பொறுப்பு என்று சொல்ல முடியாது. 'ஃபேலரோப்' என்கிற பறவையினத்திலும், புள்ளியுள்ள 'சாண்ட்பைப்பர்' என்னும் பறவையினத்திலும் முட்டையை அடைகாக்கும் பொறுப்பை ஆணே கவனிக்கிறது. குஞ்சுகளை வளர்ப்பதும் ஆண்தான். அதைப் போலவே, கடற்குதிரைகளிலும் முட்டைகளை ஆண்களே அடைகாக்கின்றன. சிலவகைத் தேரைகளில் முட்டைகளை வாயில் வைத்து, அவை பொரியும்வரை காத்திருப்பது ஆணினம்தான்.

'இப்படிப்பட்ட வித்தியாசங்கள் உயிரினங்களில் ஏன் இருக்கின்றன?' என்கிற கேள்விக்குப் பரிணாம வளர்ச்சி பதில் சொல்கிறது. அல்பட்ராஸ்களில் ஆணும் பெண்ணும் உணவைக் கொண்டு வந்து தருகின்றன. நெருப்புக் கோழிகளிலோ ஆண்தான் உணவு தருகிறது. ஹம்மிங் பறவைகளில் பெண்தான் உணவைக் கொண்டு வந்து ஊட்டுகிறது.

'குழந்தைகளை ஆண் பாதுகாக்க வேண்டுமா? பெண் வளர்க்க வேண்டுமா?' என்ற கேள்விக்கு விடை காண, ஓர் உதாரணத்தை நாம் பார்க்க வேண்டும். இரண்டு பேர் சேர்ந்து ஒரு பொருளை வாங்குகிறார்கள். ஒருவர் அதற்கு 500 ரூபாய் முதலீடு செய்கிறார், இன்னொருவர் 50 ரூபாய் முதலீடு செய்கிறார் என்றால், அதிகம் முதலீடு செய்தவரே அந்தப் பொருளை அதீத கவனத்துடன் பாதுகாப்பார். ஏனென்றால், பொருள் தொலைந்துபோனால் அதிக நட்டம் அவருக்கே! அதைப் போலவே சினையூட்டப்பட்ட முட்டையில் யார் அதிகம் முதலீடு செய்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே பாதுகாப்பு நடக்கிறது. பல நேர்வுகளில் பெண்ணினமே அதிக முதலீடு செய்வதால், அவை அதிகம் பாதுகாப்பை வழங்குகின்றன.

முழுமையடைந்த பெண் சினை முட்டை ஓர் உயிரணுவைவிட பத்து லட்சம் மடங்கு அதிக கனபரிமாணத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு மாதத்துக்கு ஒரு சினை முட்டைதான் உற்பத்தியாகும். எனவே, மனித இனத்திலும் தாய் அதிகப் பங்கை வகிக்கிறாள். 280 நாட்கள் கர்ப்ப காலம் இருப்பதால், தன் குழந்தையை மிக உன்னிப்பாகக் கவனித்துக் காப்பாற்றுவது, மனரீதியான பொறுப்பாகவும் தாய்க்கே அமைந்துவிடுகிறது.

சில மீன் இனங்களில் வித்தியாசமான இனப்பெருக்கம் நடக்கிறது. பெண் இனமும், ஆண் இனமும் முட்டைகளையும், உயிரணுக்களையும் ஒரே நேரத்தில் தண்ணீரில் வெளியிடுகின்றன. அங்கே சினை உடலுக்கு வெளியே உண்டாகிறது. அப்போது இரண்டு பெற்றோருமே அதைக் கவனிப்பதில்லை. அது, தானாக தன்னைப் பார்த்துக்கொள்கிற கட்டாயம் ஏற்படுகிறது. புள்ளியுள்ள சாண்ட் பைப்பர் பறவை இனத்தில், தாயின் எடையில் ஐந்தில் ஒரு பங்கு, அதன் ஒரு

முட்டை இருக்கிறது. நான்கு முட்டைகள், எண்பது சதவிகித எடையை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அவற்றைப் பாதுகாக்கும்போது தாய்ப் பறவை முழுவதுமாக வலுவிழந்து போய்விடும். எனவே, ஆணை அடைகாக்கச் செய்துவிட்டு, இழந்த எடையை மீண்டும் அடைவதற்கு அது இரை தேடச் சென்றுவிடுகிறது.

மனித இனத்தைப் பொறுத்தவரையில், குழுவாக வேட்டையாட வெளியே செல்லுகை யில், தன் இணையை வேறொருவர் கவர்ந்து கொள்ளாமல் இருக்க, ஓர் அமைப்பு தேவைப்பட்டது. வேட்டையாடுவது கூட்டுறவால் மட்டுமே சாத்தியம். எனவே, கர்ப்பம் தரித்திருக்கும்போதும், குழந்தை பிறந்த பிறகும் தாயையும், குழந்தையையும் உணவு தந்து பாதுகாப்பதுதான் மரபுக்கூறுகள் செழிப்பதற்கான வழிமுறை. அப்படிப்பட்ட கூட்டுப் பராமரிப்பு, 'குடும்பம்' என்கிற அமைப்பை உருவாக்கியது. தாய்வழிச் சமூகம் மருவி, கணவன்- மனைவி என்ற அமைப்பைச் சிறிது சிறிதாகப் பெற்றது. ஆனாலும், குழந்தை வளர்ப்பில் அதிக முதலீடு பெண்ணைப் பொறுத்தே இருக்கிறது.

மகாபாரதத்தில் ஒரு கதை உண்டு... அரசன் ஒருவன் வேட்டையாடக் கிளம்பினான். பிம்பவனம் என்னும் வனத்தில் பிரவேசித்து, வழி தவறினான். அப்போது, அங்கே அதிசய மரம் ஒன்றைக் கண்டான். அந்த மரத்தின் நிழலும் பச்சையாய் இருந்தது. 'வழக்கமாக நிழல்கள் கருமையாய் இருக்கும். இங்கு பச்சையாய் இருக்கிறதே!' என்று அரசனுக்கு வியப்பு. அதன் நிழலில் தங்கினான். தன்னையே மறந்து, அதன் குளிர்ச்சியில் உச்சி குளிர்ந்தான்; உறங்கி எழுந்தான்.

விழிகளிலிருந்து தூக்கம் விடைபெற்றபோது, தான் ஒரு பெண்ணாக மாறியிருப்பதை உணர்ந்தான். ஏற்கெனவே எட்டுக் குழந்தை களுக்கு அவன் தகப்பன். பெண்ணாக ஆனதும், வெட்கம் அடைந்தான். எனவே, சொந்த ஊர் திரும்பாமல் அந்த வனத்திலேயே அலைந்து திரிந்தான்.

அப்போது, வேடுவன் ஒருவன் எதிர்ப்பட் டான். இவனைக் கண்டு மோகத்தில் தவித் தான். சங்கமம் நடந்தது. பெண்ணாக மாறிய மன்னன், எட்டுப் பிள்ளைகளுக்குத் தாயானான். வேடுவனுக்கு விதி பாம்பு ரூபத்தில் வந்தது. அது தீண்டவே, அவன் மாண்டான்.

அரசன், வேடுவனுக்குப் பிறந்த குழந்தை களோடு, தன் தேசத்துக்குப் புறப்பட்டான். அரண்மனைக்கும் திரும்பினான். விஷயத்தைச் சொன்னான். தந்தையாக இருந்து பெற்ற எட்டு பிள்ளைகளையும், தாயாக இருந்த பிரசவித்த எட்டு பிள்ளைகளையும் ஒன்றாக வளர்த்தான்.

சில காலத்துக்குப் பின், மறுபடியும் பயணம் சென்றான். பிம்பவனத்தைக் கடக்க ஆசை கொண்டான். அதே மரத்தின் அதே பச்சை நிழலில் மறுபடி உறங்கினான். இம்முறை விழித்தபோது, ஆணாகி இருந்தான். அவன் நாடு திரும்பிய பின்னர், அவனது பிள்ளைகள் தாய் வகை, தந்தை வகை என இரண்டு வகையாகப் பிரிந்து, ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டார்கள். தீராத வன்மம், மாறாத கோபத்துடன் சண்டையிட்டு, பதினாறு பேரும் பலியாகினர்.

பிள்ளைகள் மடிந்த வேதனையைத் தாளாமல், அரசன் மீண்டும் பிம்பவனம் வந்தான். அந்த அதிசய மரத்திலேயே தூக்கிட்டுச் சாக முனைந்தான். அப்போது மரம், "உனக்கு ஏன் இத்தனை சோகம்?' என்று கேட்க, "என் அத்தனை பிள்ளைகளும் அழிந்தனரே!' என்றான் அவன்.

'சரி, உனது எந்தப் பிள்ளைகள் உயிரோடு மீள வேண்டும் என விரும்புகிறாய்? நீ பெண்ணாக இருந்தபோது பிறந்தவர்களா? ஆணாக இருந்தபோது பிறந்தவர்களா? சொன்னால், அவர்களை மட்டும் உயிர்ப்பித்துத் தருகிறேன்' என்றது மரம்.

சற்றும் தயக்கமின்றி, 'நான் பெண்ணாக இருந்தபோது பிறந்தவர்களே எனக்கு வேண்டும்' என்றான் அரசன். மரம் அவர்களை உயிர்ப்பித்தது. கூடவே, தனக்கு ஆண் உருவம் வேண்டாம்; பெண் உருவே தேவை எனக் கேட்டான்.



'ஏன்?' என்றது மரம். 'ஆணை விடவும் பெண்ணே பலசாலி. அவளே வலியவள்; வளர்பவள்' என்றான் மன்னன். மரம் அவனைத் திரும்பவும் பெண்ணாக்கியது.

இன்று பரிணாம வளர்ச்சியும் விலங்கியலும் குறிப்பிடுவதை இந்தக் கதை அப்போதே குறிப்பிட்டிருக்கிறது.

எக்ஸ் - ஒய் என்னும் மரபுக்கூறுகளே (ஜீன்) குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தீர்மானிக்கின்றன. அதைக் கண்டுபிடித்தவர்கள் லோவல் பேட்ஜ், பீட்டர் குட்ஃபெல்லோ ஆகியோர். இந்த மரபுக்கூறே ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் இடைவெளிக்குக் காரணம். எல்லாச் சமூகங்களிலும் பெண்ணே ஆணைவிட அதிக ஆண்டுகள் உயிர் வாழ்கிறாள். ஆண்களின் உடலில் இருக்கும் அதிக டெஸ்டோஸ்டிரான், அதிக ரிஸ்க் எடுத்து ஆபத்துகளைச் சந்திக்கத் தூண்டுகிறது. அதுதான் வேகமாகக் கார் ஓட்டுவது, கோபமாகச் சண்டை போடுவது, புகைப்பது, மது அருந்துவது போன்றவற்றுக்குக் காரணமாக இருக்கிறது. பெண்களின் ஈஸ்ட்ரோஜன் இதய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

பெண்களில் இருக்கும் எக்ஸ் குரோமோசோம், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரபுக்கூறுகளை வைத்திருக்கிறது. அவற்றில் சில, உடலின் இயக்கத்தை இருபாலிலும் தீர்மானிக்கின்றன. ஆனால், குழந்தை ஆண் என்று தீர்மானிக்கும் ஒய் குரோமோசோமில் நூற்றுக்கும் குறைவான மரபுக்கூறுகளே இருக்கின்றன.

ஒருகாலத்தில், ஒய் குரோமோசோமிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜீன்கள் இருந்தன. ஆனால், 300 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மாற்றம் தொடங்கியது. இப்போது அது தனிமைப்பட்டதோடு, குறைந்த ஜீன்களோடும் சுருங்க ஆரம்பித்துவிட்டது. பெண்களில் இரண்டு எக்ஸ் குரோமோசோம்கள் இருப்பதால், ஒன்று பழுதடைந்தாலும் மற்றொன்று பயன்படும். பல நேரங்களில் எக்ஸ் குரோமோசோம்கள் குறைபாடுகளைத் தாங்குவதாக இருக்கின்றனவே தவிர, வெளிப்படுத்துபவையாக இல்லை. அதனால் ரத்தப்போக்கு நோய், எதிர்ப்புச் சக்தி குறைவு, வழுக்கைத் தலை, வண்ணப் பார்வையின்மை போன்றவற்றால் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

'ஒய்' குரோமோசோம்கள் பாதிக்கப்பட்டதற்கு திடீரென ஏற்பட்ட மரபணு மாற்றங்களே காரணம். இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த மரபியல் விஞ்ஞானி 'ப்ரியன் ஸைக்ஸ்' என்பவர், 'ஆதாமின் சாபம்' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இதுபோல் தொடர்ந்து 'ஒய்' குரோமோசோம்களில் ஜீன்கள் குறைந்தால், ஆண் இனம் இன்னும் 1,25,000 ஆண்டுகளில் முற்றிலுமாக அழிந்துபோய்விடும் என்று எச்சரிக்கிறார் அவர்.

ஒரு வகையில், மகாபாரதத்து பிம்பவனம் உண்மையாகிவிடுமோ என்கிற அச்சம் ஆண்களுக்கு எழவே செய்கிறது.

(இன்னும் மேலே...)

கொலம்பஸ் முட்டை


மேலே... உயரே... உச்சியிலே 5

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

ஒரு முட்டை வேக வைக்கப்பட்டதா, இல்லையா என்பதை, ஓட்டை உடைக்காமல் எப்படிக் கண்டுபிடிப்பது? அதைச் சமமான தளத்தில் வைத்துச் சுற்றுங்கள். வேக வைக்கப்பட்ட முட்டையாக இருந்தால், அது அதிக நேரம் சுழலுவதுடன், வேகமாகவும் சுழலும். பச்சை முட்டையைச் சுழற்றுவது கடினம். வேக வைக்கப்பட்ட முட்டை ஒரு முழுமையைப் பெற்றதாக இருப்பதால் சுற்றுகிறது. ஆனால், பச்சை முட்டைக்குள் இருக்கும் பல்வேறு விதமான திரவங்கள் அதைச் சுழலவிடாமல் தடுக்கின்றன.

அத்துடன், வேகவைக்கப்பட்ட முட்டை சுற்றும்போது, விரலால் தொட்டால், அது உடனடியாக நின்றுவிடும். பச்சை முட்டையை நிறுத்த முயன்றாலும் சுற்றிக்கொண்டிருக்கும். இவை இயற்பியல் தொடர்பான உண்மைகள்.

ஒருவர், வழக்கமான கோணத்தில் இல்லாமல் மாற்றிச் சிந்திப்பவராக இருந்தால்தான் புதியவற்றைக் கண்டுபிடிக்க முடியும். கொலம்பஸ் இந்தியாவைக் கண்டுபிடிக்கவேண்டும் என்பதில் தீராத ஆர்வம் கொண்டவராக இருந்தார். அந்தப் பயணத்துக்காக 18 ஆண்டுகள் மெனக்கிட்டார். ஆனால், கடைசியில் புதிய உலகம் என்று கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்காவை அடைந்தார். அவர், தனது பயணத்தைப் பற்றிய விஷயத்தை முன்வைத்தபோது, 'முட்டாள்தனமான கனவு காண்பவர்' என்றே பலராலும் கருதப்பட்டார். ஆனால், பயணத்தை முடித்துத் திரும்பி வந்தபோது, பெரிய சாதனையாளர் என மதிக்கப்பட்டார். கொலம்பஸின் சாதனை சிலருக்குப் பொறாமையை ஏற்படுத்தியது.



ஸ்பெயின் நாட்டு கனவான்கள் அவருக்கு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். அவர்களில் சிலர் ஆணவம் பிடித்தவர்கள். அவர்களில் ஒருவர் கொலம்பஸிடம், 'யார் வேண்டுமானாலும் கடல் வழியாகப் பயணம் செய்து மற்றொரு நிலப்பரப்பை அடையலாமே! இது ஒரு சாதனையா?' என்று கேட்டார். கொலம்பஸ் உடனே அருகிலிருந்த வேகவைத்த முட்டை ஒன்றை எடுத்துக் காட்டி, "உங்களில் யாராவது இந்த முட்டையை நிற்க வைக்க முடியுமா?' என்று கேட்டார். ஒவ்வொருவராக முயற்சித்தனர். எவராலும் முடியவில்லை. கடைசியில் கொலம்பஸ் அந்த முட்டையை வாங்கி, அதன் முனைப் பகுதியை லேசாக மேசையில் ஒரு தட்டுத் தட்டி, அதன் ஓட்டை நுனியில் சற்று உடைத்து, நிற்க வைத்துக் காட்டினார். அவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தார்கள். 'முதலில் ஒன்றைச் செய்துகாட்டுவது கடினம். அதற்குப் பிறகு யார் வேண்டுமானாலும் அதை எளிதாகக் காப்பியடிக்க முடியும்' என்றார் கொலம்பஸ்.

நுட்பமாகச் சிந்திப்பது வேறு; வித்தியாசமாகச் சிந்திப்பது வேறு. நுட்பமான கணக்குகள் உண்டு. ஆனால், அவற்றில் மாற்றிச் சிந்திப்பதற்கு வழியில்லை. முறையாகச் சிந்திப்பதே சரியான தீர்வு தரும்.

உதாரணமாக... உங்களிடமும், என்னிடமும் சம அளவு பணம் இருக்கிறது. நான் உங்களுக்கு எவ்வளவு கொடுத் தால், என்னை விட உங்களிடம் பத்து ரூபாய் அதிகம் இருக்கும்?

பெரும்பாலானோர் சட்டென்று 10 ரூபாய் என்பார்கள்.

என்னிடமும் உங்களிடமும் தலா 50 ரூபாய் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், நான் உங்களுக்கு 10 ரூபாய் கொடுத்தால், என்னிடம் 40 ரூபாய் இருக்கும். உங்களிடம் அறுபது ரூபாய் இருக்கும். ஆகவே, வித்தியாசம் இருபது ரூபாய் ஆகும். எனவே, '10 ரூபாய்' என்பது தவறான

பதில். நான், ஐந்து ரூபாய் கொடுத்தால், என்னிடம் மீதி நாற்பத்தைந்து இருக்கும்; உங்களிடம் ஐம்பத்தைந்து இருக்கும். எனவே, ஐந்து ரூபாய்தான் சரியான பதில்.

இன்னொரு கேள்வி.

என்னிடம் பூனையும், நாயுமாக பத்து வளர்ப்பு மிருகங்கள் இருக் கின்றன. 56 பிஸ்கட்டுகளை நான் அவற்றுக்கு பகிர்ந்தளிக்க வேண் டும். நாய்க்கு 6, பூனைக்கு 5 எனப் பகிர்ந்து கொடுத்தால், எத்தனை நாய்கள், எத்தனை பூனைகள் என்னிடம் இருக்கின்றன?

இந்தக் கேள்விக்கு அல்ஜீப்ராவை உபயோகப்படுத்தி 6 நாய்களும், 4 பூனைகளும் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்துவிடலாம். ஆனால், பொது அறிவைப் பயன்படுத்தினால் இன்னும் சுலபமாக இதற்கு விடை காண முடியும்.

நாய், பூனை எல்லாமாக மொத்தம் 10 மிருகங்கள். ஒவ்வொன்றுக்கும் 5 பிஸ்கட்டுகள் கொடுத்தால், 50 தீர்ந்துவிடும். இப்போது மீதம் 6 பிஸ்கட்டுகள் இருக்கும். எனவே, நாய்களின் எண்ணிக்கை 6 என எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

இவையெல்லாம் கணிதப் புதிர்கள். என்னதான் மாற்றி யோசித்தாலும், எளிதில் விடை காணலாமே தவிர, ஒரே ஒரு சரியான விடைதான் இவற்றுக்கு உண்டு.

இன்னொரு புதிர் பார்ப்போம். குள்ளமான மனிதர் ஒருவர் மழைக்காலத்தில் மாத்திரம், தான் வசிக்கும் 10-வது மாடிக்குத் தனியாகச் செல்லும்போது, லிஃப்டில் கடைசி வரை செல்கிறார்.

மற்ற நேரங்களில் 2-வது மாடி வரை மட்டுமே லிஃப்ட்டில் சென்று, பிறகு படியேறிச் செல்கிறார். ஏன்?

வித்தியாசமாக யோசித்தால், இதற்குப் பல விடைகளைக் காண முடியும். குள்ள மனிதர் மழைக்காலத்தில் குடை எடுத்துவருவார் அல்லவா? அந்தக் குடையைக் கொண்டு 10-வது மாடிக்கான பட்டனைத் தட்டுவார். மற்ற நேரங்களில், தன் கைகளுக்கு எட்டும் 2-வது மாடிக்கான பட்டனையே அவரால் தட்ட முடியும். எனவே, 2-வது மாடி வரை லிஃப்ட்டில் சென்று, பிறகு படியேறுவார். இது ஒரு விடை.

ஒரு சிறுவன் ஆறு ஆப்பிள்கள் வாங்கிவந்தான். வீட்டுக்கு வந்தபோது அவனிடம் இரண்டு பழங்கள்தான் இருந்தன. எனில், எவ்வளவு பழங்களை வழியில் தொலைத்தான்?

இதைக் கணிதப் புதிராகக் கருதினால், 4 என பதிலளிக்கலாம். ஆனால், மாற்றி யோசித்தால், வேறு பல விடைகள் கிடைக்கும்.

அவன் எதையும் தொலைக்கவில்லை. 4 பழங்கள் திருடுபோய்விட்டன.

தொலைத்தவை மூன்று. ஒன்றை அவன் வழியில் தின்றுவிட்டான்.

எந்தப் பழமும் தொலையவில்லை; திருடுபோகவில்லை; எதையும் அவன் தின்னவும் இல்லை. நான்கு பழங்களையுமே பழரசமாக்கிக்கொண்டு வந்தான்.

நம் வாழ்க்கையில் வரும் பிரச்னைகளும் இப்படித்தான். அவற்றுக்குப் பல விடைகள், பல தீர்வுகள் இருக்கின்றன. எனவே, கணிதத்தைப் போல அவற்றைக் குறிப்பிட்ட வழிமுறையில் தீர்க்க முடியாது. சூழலுக்குத் தகுந்த மாதிரி தீர்வைத் தேடிக் கண்டுபிடிப்பது அவசியம் என்பதை நம்முடைய இலக்கியங்களும், இதிகாசங்களும் வலியுறுத்துகின்றன.

கிடைக்கும் தடயங்களை மட்டும் வைத்துக்கொண்டு புலன் விசாரிப்பது ஒரு வகை. இல்லாததையும் வைத்துக்கொண்டு துப்பு துலக்குவது இன்னொரு வகை. இதுதான் மாற்றி யோசிப்பது. ஒரு கொலையில் எது விடுபட்டது என்பதை ஆராய்வார் ஷெர்லாக் ஹோம்ஸ்.

உதாரணமாக, வீட்டுக்குள் ஒரு கொலை நடந்துள்ளது. கொலை நடந்த நேரத்தில், தோட்டத்தில் இருந்த நாய் குரைக்க வில்லை என்பது விசாரணையில் தெரிய வருகிறது. நாய் குரைக்காததுதான் விடுபட்ட சங்கிலி. எனவே, நாய்க்குப் பழக்கமான ஒருவர்தான் குற்றவாளியாக இருக்கவேண்டும் என யோசித்து, அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்து போகும் நபர்களை ஆராய்ந்து குற்றவாளி யைக் கண்டுபிடிப்பார் ஷெர்லாக் ஹோம்ஸ். இதுதான் மாற்றி யோசிக்கும் யுத்தி.

வித்தியாசமாகச் சிந்திப்பதில் மன்னன் என பெர்னார்ட்ஷாவைச் சொல்லலாம்!

பெர்னார்ட்ஷாவை ஒரு பிரபல போட்டோ கிராபர் படம் பிடித்தார். அதற்காகத் தமக்கு 200 பவுன் கொடுக்க வேண்டும் என்று அவர் கேட்டார்.

உடனே, பெர்னார்ட்ஷா அவருக்கு 20 செக்குகளில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். ஒவ்வொரு செக்கும் 10 பவுனுக்கு இருந்தது. அதற்கான காரணம் புரியாமல் போட்டோ கிராபர் குழப்பத்துடன், "எதற்காக இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்க, பெர்னார்ட்ஷா சொன்னார்...

"இதனால் உமக்கும் லாபம்; எனக்கும் லாபம்! எப்படி என்கிறீர்களா? என் கையெழுத்துக்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. என் ஒவ்வொரு கையெழுத்துக்கும் 25 பவுன் விலை கிடைக் கிறது என்று சொல்கிறார்கள்.

ஆகவே, ஒவ்வொரு செக்கும் உங்களுக்கு 25 பவுனுக்கு விற்றுப்போய்விடும். உங்களுக்கு மொத்தம் 500 பவுன் கிடைக்கும். ஆனால், செக்கை வாங்கிக் கொள்கிறவர்கள், அதைப் பணமாக மாற்றாமல் அப்படியே வைத்துக்கொண்டு விடுவார்கள். ஆக, எனக்கும் லாபம்தான்!"

இப்படி, 'வின்வின்' சூழலைத் தனது சாதுர்யத்தால் ஏற்படுத்துகிறார் பெர்னார்ட்ஷா.

புத்தரிடம் ஓர் இளம்பெண் வந்தாள். இறந்துபோன தன் குழந்தையை உயிர்ப்பித்துத் தருமாறு கதறினாள். புத்தர் அதிசயங்கள் நிகழ்த்துவதில் ஆர்வம் கொண்டவர் அல்லர். செத்தவர் களைப் பிழைக்கவைக்க முடியாது என்பதை எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவளுக்குப் புரியாது என்பதால், அவர் ஓர் உத்தி செய்தார்.

அந்தப் பெண்ணிடம், "உன் குழந்தையைப் பிழைக்க வைக்கவேண்டும் என்றால், இதுவரை சாவு விழாத வீட்டிலிருந்து ஒரு பிடி எள் வாங்கிக் கொண்டு வா!" என்றார்.

"அவ்வளவுதானே! இதோ வாங்கிக்கொண்டு வருகிறேன்" என்று அவள் மகிழ்ச்சியாகக் கிளம்பினாள்.

முதலில் தென்பட்ட ஒரு வீட்டுக்குச் சென்று, "கொஞ்சம் எள்ளு இருந்தால் கொடுங்கள்" என்று கேட்டாள். "இதோ எடுத்து வருகிறேன்" என்று அந்த வீட்டு அம்மாள் உள்ளே சென்று, ஒரு பிடி எள் கொண்டு வந்தாள்.

எள்ளை வாங்கப் போன நேரத்தில் தான் அந்தப் பெண்ணுக்கு புத்தர் சொன்ன நிபந்தனை ஞாபகம் வந்தது.

"உங்களை ஒன்று கேட்க மறந்துவிட்டேனே! உங்கள் வீட்டில் இதுவரையில் யாரும் இறந்தது கிடையாதே?" என்று கேட்டாள் அவள்.

அவ்வளவுதான்... "ஐயோ! அதை ஏன் கேக்கறேம்மா? போன மாதம்தான் என் தம்பி இறந்துபோனான்" என்று சொல்லி, அந்த அம்மாள் தம்பியை நினைத்து அழத் தொடங்கிவிட்டாள்.

இப்படியே அந்தப் பெண் எந்த வீட்டுக்கு எள் கேட்கச் சென்றாலும், அங்கே ஏதேனும் ஒரு மரணம் நிகழ்ந்திருந்தது. கடைசியில் அந்தப் பெண் தோல்வியுடன் திரும்பி வந்து புத்தரிடம், "மரணமில்லாத ஒரு வீடும் இல்லை ஐயனே!" என்றாள். உடனே புத்தர், "அதுதான் வாழ்க்கையின் யதார்த்தம். உலகில் எதுவுமே நிலையில்லை. அனைத்தும் அழிபவையே! எனவே, உன் குழந்தையின் மரணத்தைப் பற்றிக் கவலைப்படாதே! " என்றார்.

மாற்றி யோசித்ததன் மூலம், எவ்வளவு எளிதாக அந்தப் பெண்ணின் மனத்தில் ஒரு தெளிவை புத்தர் ஏற்படுத்தி விட்டார், பாருங்கள்!

(இன்னும் மேலே...)

பலத்தை பலவீனமாக்குதல்!
மேலே... உயரே... உச்சியிலே 6
வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

சிலர் அசாத்தியமான பலத்தை ஒரு கோணத்தில் பெற்றிருப்பார்கள். அது அவர்களுக்கு அவாவையும், ஆணவத்தையும் தந்துவிடும். இறுதியில் அவர்களின் பலமே அவர்களை வீழ்த்திவிடும்.

நம்மிடமிருந்து ஒன்றைக் கற்றுக்கொண்டு நம்மையே எதிர்க்கத் துணிபவர்கள் இருப்பார்கள். நாம் வளர்த்துவிட்டவர்களே நம் மார்பில் பாயக் காத்திருப்பார்கள். யார் எப்போது எப்படி மாறு வார்கள் என்பது புரியாத புதிராக இருப்பதுதான் வாழ்க்கை. அந்தச் சூழலைச் சமாளிக்க மாற்றி யோசிப்பது அவசியம் என்பதைப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

பஸ்மாசுரன் என்கிற அரக்கன் இருந்தான். இரக்கமில்லாதவர்கள் அனைவரும் அரக்கர்களே! அவன், சிவனை எண்ணிக் கடுமை யான தவம் இருந்தான். சிவபெருமானே நேரில் தோன்றினார். அவர் கால்களில் விழுந்து துதித்தான் பஸ்மாசுரன். அவரிடம் வரமும் கேட்டான். "நான் யார் தலையில் கை வைத்தாலும், அவர்கள் பஸ்பமாக வேண்டும்!" என்பதே அந்த வரம். சிவனும் அவன் விரும்பிய வரத்தைத் தந்தார்.

அசுரனுக்கு அளவில்லா மகிழ்ச்சி!

'எனக்கு ஒரு சந்தேகம்' என்றான்.

'என்ன சந்தேகம்?'

'எனக்கு நீங்கள் கொடுத்த வரம் பலிக்குமா?'

'கண்டிப்பாகப் பலிக்கும்!'

பஸ்மாசுரன் வரத்தைப் பரிசோதித்துப் பார்க்க, அதைக் கொடுத்த சிவனாரின் தலையிலேயே கை வைக்க நெருங்கினான். அவர் மறைந்தார். இந்தத் தகவலைக் கேள்விப்பட்டு, திருமால் அழகான மோகினியாக உருவெடுத்து வந்தார். அழகியைக் கண்டு மயங்கிய அசுரன், அவளை அடையத் துடித்தான். மோகினியோ 'நான் ஆடும் நடனத்தை அப்படியே நீ ஆடினால் உன்னை மணப்பேன்' என்றாள். பஸ்மாசுரன் ஒப்புக்கொண்டு மோகினியின் நடன அசைவுகளை அச்சு அசலாக அபிநயம் பிடித் தான். ஒரு கட்டத்தில் மோகினி தன் கையைத் தலைமேல் வைத்து ஓர் அபிநயம் செய்ய, அதை அப்படியே செய்த பஸ்மாசுரன் சாம்பலானான். இதுதான் வரமே சாபமான கதை.

கடவுளேயானாலும் மாற்றி யோசித்தால்தான் அரக்கர்களை அழிக்கமுடியும். இப்படித்தான், மனிதனாலும் மரிக்கக்கூடாது, விலங்கினாலும் அழியக்கூடாது என்று வரம் பெற்று மக்களைத் துன்புறுத்திய ஹிரண்யகஸிபுவை மகாவிஷ்ணு நரசிம்ம அவதாரம் எடுத்து... மனிதனாகவும் இல்லாமல், விலங்காகவும் இல்லாமல், பகலும் இரவுமற்ற அந்திம வேளையில், பூமியிலும் படாமல் ஆகாயத்திலும் இல்லாமல் மடியில் கிடத்தி அவனை ஆயுதமில்லாமல் தனது கூரிய நகங்களால் கிழித்துக் கொன்றார்.

பஸ்மாசுரனின் கதையைப் போலவே அழிந்த, அரக்க குணம் கொண்ட ஒரு மனிதனின் கதைதான், ஆர்.கே. நாராயண் எழுதிய 'மால்குடியின் மனிதக் கொல்லி' என்கிற நாவல்.

வாசு என்பவன் விலங்குகளின் தோல்களில் வைக்கோலைத் திணித்து 'மாதிரி'களைச் செய்கிறவன். இரக்கமில்லாதவன். நன்றியுணர்வு துளியும் இல்லாத நயவஞ்சகன். தொடக்கத்தில் நல்லவனைப்போல நடித்து மால்குடியிலிருக்கும் நடராஜன் என்பவனுடன் சிநேகிதம்

செய்துகொள்கிறான். ஐந்நூறு விசிட்டிங் கார்டுகள் அடிக்க வேண்டுமென்று நடராஜனின் அச்சகத்துக்கு வரும்போது, அவன் அறிமுகமாகிறான். கெஞ்சிக் கேட்டு கொஞ்ச நாட்கள் இருப்பதாக மட்டும் சொல்லி, நடராஜனின் அச்சகத்தில் ஒரு பக்கத்தில் குடியிருக் கிறான். அதற்குப் பிறகு, அந்த இடத்தை காலி செய்ய மறுக்கிறான். அவன் விலங்குகளை வேட்டையாடிக்கொண்டு வந்து அந்த இடத்தையே நாறடிக்கிறான். வாடகை கட்டுப்பாட்டுக் குழுமத்திடம் நடராஜனுக்கு எதிராகப் புகார் செய்து, வீட்டைக் காலி செய்ய மறுக்கிறான். மொத்தத்தில் அவன் ஒரு மனிதக்கொல்லியாக இருக்கிறான்.

வாசுவின் பலமே அவனுடைய உறுதியான கைதான். அவன் யாரை அறைந்தாலும் அந்த நபரின் மண்டை பிளந்துவிடும். அந்த அளவுக்கு வலிமை! ஒருநாள் அவன் இறந்துகிடக்கிறான். பிரேதப் பரிசோதனை செய்தபோது அவன் உடலில் விஷமோ, கொலை செய்யப்பட்டதற்கான அறிகுறியோ இல்லை. அவன் தனது நெற்றியில் அமர்ந்த கொசுவை பலமாக அடித்தபோது, நெற்றிப்பொட்டில் இருந்த நாடி சேதமாகி, அவன் இறந்துவிட்டான் என்பது தெரிய வருகிறது. கிட்டத்தட்ட வாசுவின் கதையும் பஸ்மாசுரனின் கதை போலத்தான். ஆனால், இது இயல்பாக நடந்தது. யாரும் அவன் மறைவுக்காக மாற்றி யோசிக்கவில்லை.

கிரேக்கப் புராணத்தில் ஹெர்குலஸ் என்கிற பெயர் பிரபலம். வலிமைக்கு அடையாளமான பெயர். மகத்தான காரியத்தைச் செய்தால், ஹெர்குலியஸ் சாதனை என்று அழைப்பார்கள். ஹெர் குலஸின் பிறப்பு சுவாரசியமானது. ஜீயஸ் என்கிற ஜூபிடர் தேவன், அல்க்மெனே என்கிற ராணியிடம் அவள் கணவனின் உருவில் உறவுகொண்டதால் பிறந்தவன் ஹெர்குலஸ். கிட்டத்தட்ட இந்திரன்- அகலிகை கதைபோலத்தான்! இந்தச் செய்தி ஜீயஸின் மனைவி ஹீராவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. அவனைக் கொல்ல எட்டாவது மாதத்திலேயே விஷப் பாம்புகளை அனுப்பினாள். ஹெர்குலஸ் பயமின்றி அவற்றைப் பிடித்துக் கழுத்தை நெரித்துக் கொன்றான். ஹீரா அதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. பன்னிரண்டு விதமான கடுமையான இலக்குகளைத் தீர்மானித்து அவற்றை அவன் சாதிக்கவேண்டும் என்று தூண்டிவிடுகிறாள்.

அந்த நிபந்தனைகளில் ஒன்றுதான், ஹைட்ரா என்கிற பாம்பை அவன் கொல்லவேண்டும் என்ப தும்! ஹைட்ரா என்பது தண்ணீரில் இருக்கும் ஒரு விசித்திரப் பாம்பு. அதற்கு எக்கச்சக்க தலைகள்.

ஒரு தலை துண்டிக்கப்பட்டால், அந்த இடத்தில் இரண்டு தலைகள் முளைக்கும். அதன் மூச்சுக் காற்றே நச்சுத்தன்மை கொண்டது. அதைச் சுவாசித்தால் மரணம் நிச்சயம். அதன் ரத்தமும் விஷத்தன்மை வாய்ந்தது. அது போகிற தடமெல் லாம் ஆபத்தை விதைத்துவிட்டுப் போகும்.



ஹெர்குலஸ் வீரத்துடன் அதை வீழ்த்த நெருங்குகிறான். ஒரு தலையை வெட்டினால், இரண்டு தலைகள் முளைக்கின்றன. உடனே, அவன் தன் உறவினன் அயோலஸை உதவிக்கு அழைக்கிறான். ஹெர்குலஸ் தலையை வெட்டியதும், அயோலஸ் ஒரு தீப்பந்தத்தால் அந்தக் கழுத்தைப் பொசுக்கிவிடுவான். அதனால் இரண்டு புதிய தலைகள் முளைக்க வழியில்லாமல் போய்விடுகிறது.

ஹெர்குலஸ் வெற்றி பெறுவதைப் பார்த்த தும், அவனைத் துன்புறுத்துவதற்காக ஹீரா ஒரு ராட்சத நண்டை

அனுப்புகிறாள். ஹெர்குலஸ் அந்த நண்டைத் தன்னுடைய கால்களால் மிதித்து நசுக்குகிறான். ஹைட்ராவுக்கு இன்னமும் சாகாத ஒரு தலை மிச்சம் இருக்கிறது. அந்தத் தலையை அதீனா என்கிற தேவதை கொடுத்த தங்க வாளால் வெட்டி நிபந்தனையைப் பூர்த்தி செய்யும் ஹெர்குலஸ், அந்த ஹைட்ராவை யும், நண்டையும் வானத்தில் எறிந்து நட்சத்திரக் கூட்டங்களாக ஆக்கினான் என்று சொல்லுவார்கள்.

ஹெர்குலஸின் இந்தச் சாதனை ஓர் உண்மையை உணர்த்துகிறது. எப்போதும் பிரச்னையைப் பாதியில் விடாமல், அதை முழுவதுமாகப் பொசுக்கி அழிப்பதுதான் மிகச் சிறந்த வழி. அரைகுறையாகக் கையாளப்படுகிற பிரச்னைகள் மீண்டும் மீண்டும் தலைதூக்கிக்கொண்டுதான் இருக்கும். எதிரி என்று வந்துவிட்டால், சுவடே இல்லாமல் அழிப்பதுதான் ராஜதந்திரம். இதில் எந்தவிதமான பாரபட்சமும் காட்டக்கூடாது என்பதற்கு இந்தியச் சரித்திரம் சான்று!

மாற்றி யோசிப்பது மற்றவர்களின் கவனத்தைத் திசைதிருப்பி, நம் விழிப்பு உணர்வைச் சரியான திசைநோக்கிச் செலுத்துவதில் அடங்கியிருக்கிறது. சதுரங்க விளையாட்டில், எதிராளியின் கவனத்தைத் திசை திருப்ப, எளிதாக ஒரு காயை வெட்டுக் கொடுப்பார்கள். எதிராளியும் 'ஆகா! நமக்கு ஒரு காய் கிடைத்தது!' என்று நினைத்து, ஆட்டத் தையே இழந்துவிடுவார்.

முல்லாவின் கதையன்று உண்டு.முல்லா தினமும் அண்டை நாட்டுக்கு ஒரு கோவேறு கழுதையின்மீது செல்வார். சோதனைச் சாவடியில் இருப்பவர்கள், முல்லா எதையாவது கள்ளக்கடத்தல் செய்கிறாரா என்று அவருடைய கழுதை யின் மேலிருக்கும் கோணியைச் சோதனை போடுவார்கள். வைக்கோலைத் தவிர, வேறு எதுவும் இராது. இப்படியே ஒரு மாதம் நடந்தது. ஒருநாள், முல்லா வெறுமனே பக்கத்து நாட்டுக்கு நடந்து சென்றுகொண்டி ருந்தார். அப்போது சோதனைச் சாவடியில் இருந்தவர்கள் அவரிடம், 'இத்தனை நாளாக எதற்குக் கழுதையில் போய்க்கொண்டிருந்தீர்? எங்களுக்கே தெரியாமல் அப்படி என்னதான் கடத்தினீர்?' என்று கேட்டார்கள்.

"நான் கழுதைகளைத்தான் கடத்தினேன். அந்த ஊரில் கோவேறு கழுதைக்கு கிராக்கி அதிகம்!' என்று முல்லா சொன்னபோது, அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

நீதியரசர் நாகமுத்து அவர்கள் ஒருமுறை என்னிடம் ஒரு புதிர் போட்டார். 'இரண்டு சகோதரிகள்; இருவருக்குமே திருமணம் ஆகவில்லை. அவர்களுடைய விதவைத் தாயார் மட்டுமே உடன் இருக்கிறார். ஒரு நாள், தாய் இறந்துவிடுகிறாள்.ஈமச்சடங்கு நடக்கிறது. அதில் அழகான ஒரு வாலிபன் கலந்துகொள்கிறான். அவனைப் பார்த்ததும் பெரிய மகளுக்குப் பிடித்துப் போகிறது. மணந்தால் அவனைத்தான் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறாள். ஆனால், அதற்குப் பிறகு எந்த இடத்திலும் அவனைக் காணவே முடியவில்லை. ஒருநாள், அவள் தன்னுடைய தங்கையையே கொலை செய்துவிடுகிறாள். ஏன்?'

பெரும்பாலானோர், 'ஒருவேளை தங்கை அவனை நேசித்ததாலோ?' என்று நினைக்கக் கூடும். ஆனால், விடை வேறு!

'அந்த அழகான வாலிபனை ஈமச்சடங்கின் போது மட்டும்தான் அவள் கண்டாள். அதற்குப் பிறகு, அவன் அவள் கண்ணில் படவேயில்லை. எனவே, இன்னோர் ஈமச் சடங்கு நடந்தால்தான் அவனை மறுபடி சந்திக்க முடியும் என்கிற எண்ணத்தில், தங்கையையே கொலை செய்துவிட்டாள்!'

மனித மனம் எப்படியெல்லாம் பிறழ்வுடன் சிந்திக்கிறது என்பதை நீதியரசர் இந்தப் புதிரின் மூலம் எனக்கு விளக்கினார். **(இன்னும் மேலே...)**

மேலே... உயரே... உச்சியிலே 7

விவேகமும் வெற்றியே!
வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

மகாபாரதம் மகத்தான இதிகாசம். அது ஹோமர் எழுதிய இலியட், ஒடிஸி என்கிற இரண்டு காவியங்களைவிட நீளமானது. ஏராளமான கிளைக் கதைகள் கொண்டது. அதை இதிகாசமாக மட்டும் பார்க்காமல், மேலாண்மைப் பாடமாகவும் வாசிக்க முடியும். மாற்றி யோசிப்பதற்கான பல உத்திகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

'கத்தியின்றி ரத்தமின்றி ஒருவரை வெற்றி பெறமுடியும்' என்பதை முதலில் உரைத்தது மகாபாரதம்தான். அதற்குப் பயன்பட்டது சகுனியின் பகடை.

தர்மரை சூதாட்டத்தின் மூலம் வெல்லலாம் என்பதைச் சகுனி அறிந்த சந்தர்ப்பம் சுவையானது.

ஒருவனுக்கு யாகம் செய்ய நூறு வெண் பசுக்கள் தேவைப்பட்டன. பால் வெள்ளை நிறத்தில் எந்தப் புள்ளியும் இல்லாமல் பசுக்கள் இருந்தால்தான், யாகம் நிறைவேறும். அப்படியான பசுக்களைத் தேடி அலைந்த அவன் கண்களில், இந்திரப்ரஸ்தத்தின் வாசலில் இருந்த 21 பசுக்கள் பட்டன. ஒரே இனத்தில் பிறந்த மரபு வெண் பசுக்கள் அவை.

ஆனால், அவற்றை யாசகம் கொடுக்க யுதிஷ்டிரனுக்கு மனமில்லை.

வந்தவன் சொன்னான்... "நான் உன் பசுக்களை வெல்லப் போவது அஸ்திரத்தால் அல்ல; வாக்கினால்!"

"எனக்கு வாதம் செய்வதில் விருப்பம் இல்லை.'

"நாம் பகடையால் விளையாட முடியும்.'

"உன்னிடம் பணயம் என்ன இருக்கிறது?'

"யாசகமாக நீங்கள் ஒரே ஒரு மலரைக் கொடுங்கள். அதையே பணயம் வைத்து நான் விளையாடுகிறேன்.'

தர்மர் அவனிடம் மஞ்சள் நிற மலரைக் கொடுத்தார். இருவரும் பகடை விளையாடினார்கள். ஏழு வெண் பசுக்கள் தர்மன் தரப்பில் பணயமாக வைக்கப்பட்டன. தர்மர் தோற்றார். மூன்று முறையும் தோற்றார். 21 வெண் பசுக்களும் வந்தவனுக்குச் சொந்தமாயின. அதற்குப் பிறகு, இப்படியே பல்வேறு இடங்களில் அவன் 87 பசுக்களை திரட்டிவிட்டான். இன்னும் 13 தேவையாக இருந்தன.

துரியோதனனின் கொட்டிலில், 13 தூய வெண் பசுக்கள் இருப்பதை அவன் அறிந்தான். எனவே, துரியோதனனின் கவனத்தை ஈர்க்க விழைந் தான். அவன் பார்வையில் படும் வண்ணம், கறுப்பு நிறக் குதிரை ஒன்றில், நகர வீதிகளில் வலம் வந்தான். துரியோதனனுக்குக் குதிரைகள் என்றால், அபார மோகம். அந்தக் கறுப்புக் குதிரை அற்புதமாக இருக்கிற செய்தி, ஒற்றர்கள் மூலம் அவனுக்கு எட்டியது. துரியோதனனுக்கு அந்த அழகிய குதிரையைத் தன்வசமாக்கிக்கொள்ள ஆசை பிறந்தது. யாசகனை அழைத்துவரச் சொன்னான். யாசகனும் வந்தான். துரியோதனனின் விருப்பத்தை அறிந்து, சூதாட்டத்தின் மூலம் குதிரையை அவன் பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னான் யாசகன். சூது தொடங்கியது.



யாசகனின் பகடைகள் உருள ஆரம்பித்தன. குதிரையின் வாலிலிருந்து ரோமம் ஒன்றைக் கிள்ளிப் பணயமாக வைத்தான் அவன். அதற்குச் சமமாக துரியோதனன் ஏழு குதிரைகளை வைத்தான். ஆனால் யாசகனோ, தன் குதிரைக்குச் சமமானவை 13 வெண் பசுக்கள் என்றான். துரியோதனனும் ஆசையின் பிடியில் தலையசைத்தான். கைநொடிக்கும் நேரத்தில் யாசகன் வென்றான். குதிரையை இழுத்துக்கொண்டு, பசுக்களையும் ஓட்டிக்கொண்டு அரண்மனையைவிட்டு வெளியேறினான்.

அந்த யாசகனின் மார்பைப் பிளக்கவேண்டும் எனும்படியாக உக்கிரம் கொண்டான் துரியோதனன். ஆறுதல் தேடி சகுனியிடம் சென்றான்.

துரியோதனனின் உடலசைவு மொழிகளைக்கூடத் துல்லியமாக அறிந்தவன் சகுனி. நடந்தவற்றைக் கேட்டறிந்தான். "மருமகனே! நீ நினைப்பதுபோல உன்னோடு பகடை ஆடியவன் சாதாரணமானவன் அல்ல. உன்னைப் போரில் சிக்கவைத்து வெற்றி பெற்றிருக்கிறான். ஆயினும், கவலைப்படாதே! உனக்குப் பக்கபலமாக நான் இருக்கிறேன்' என்று துரியோதனனை அமைதிப்படுத்தினான்.

இருட்டுவதற்கு முன்பு அந்த யாசகனை மீண்டும் அரண்மனைக்கு அழைத்து வரச்செய்தான். வந்தவனை சகுனி வெகுவாகப் பாராட்டினான்.

"நீ எத்தனை பசுக்களை வென்றிருக்கிறாய்?'

"பதின்மூன்று!'

"ஆனால், நீ அழைத்துச் சென்றது 14 என்று துரியோதனன் சொல்லு கிறான். உன்னிடம் அதிகமாக உள்ள ஒரு வெண் பசுவை திருப்பித் தந்துவிடு!'

"இல்லை. நான் 13 பசுக்களைத்தான் சூதில் வென்றேன்!'

சகுனி துரியோதனனிடம் கேட்டான்... "நிஜமா?'

துரியோதனன் பதில் பேசவில்லை.

"நீ ஓட்டிச் சென்ற ஒரு பசுவின் கர்ப்பத்தில் வளரும் கன்றைக் கணக்கில் சேர்க்க மறந்துவிட்டாய். அது எங்களுக்கு உரியது. அதைத் தந்துவிட்டு, பசுவை அழைத்துப் போ!' என்றான் சகுனி.

யாசகன் தடுமாறினான். "கர்ப்பத்தில் உள்ள பசுங்கன்றை எப்படித் தருவது?'

"காத்திரு! அது கன்று ஈனும் வரை காத்திரு. அல்லது, உனக்குத் திறமை இருந்தால், அதையும் சூதில் வென்றுவிடு!"

சகுனியுடன் அந்த யாசகன் சூதாடுவதாக ஒப்புக்கொண்டான். பகடை உருண்டது. அவன் கேட்ட எண்ணில் பகடை விழுந்தது. ஒரு பசுவைத் தோற்றான் யாசகன். இப்படியே நூறு வெண் பசுக்களையும், தனது குதிரையையும்கூட அவன் சகுனியிடம் இழந்துவிட்டான்.

அவனிடம் சகுனி, "நீ யாரிடம் அதிகப் பசுக் களைச் சூதாடி வென்றாய்?' என்று கேட்டான்.


"தர்மரிடம்.'

"எத்தனை?'

"இருபத்தொன்று.'

சகுனிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. நூறு பசுக்களையும் அவனுக்கு யாசகம் தந்து அனுப்பி வைத்தான். துரியோதனன் புரியாமல் விழித்தான்.

சகுனி சொன்னான்... "ஒரு யாசகனால் தர்மனோடு சூதாடி அரிய 21 வெண் பசுக்களை வெல்ல முடிந்திருக்கிறது. அவன் நமக்கு வழிகாட்டியிருக்கிறான். தர்மனைச் சூதாட விருந்துக்கு அழைக்கவேண்டும். நீயல்ல; உன் தந்தை. நாம் எந்தச் சிரமமும் இல்லாமல், அவர் கள் நாட்டையே வென்றுவிடலாம். நீ பட்ட அவமானங்களுக்குப் பழி தீர்த்துவிடலாம்."



பாண்டவர்களைப் போரில் வெல்வது கடினம், சூதில் வெல்வது எளிது என்பதை சகுனி உணர்ந்தது அப்போதுதான்.

எவ்வளவு உயர்ந்த நெறிபடைத்தவனாக இருந்தாலும், ஒரு சின்ன பலவீனம் ஒருவனை வீழ்த்திவிடும் என்பதற்கு தர்மன் சாட்சி!

பாரிஜாத மலர் பற்றி ஒரு கதை உண்டு.

ஒரு நாள், நாரதர் துவாரகைக்கு வந்தார். அவர் கையில் ஒரு பாரிஜாத மலர் இருந்தது. கிருஷ்ணரிடம் அவர் அதைக்

கொடுத்து, "இந்த மலர் மிகவும் அழகாக இருக்கிறது. மலர்களை மிகவும் விரும்புகிற ருக்மிணிக்கு தாங்கள் இதைத் தரலாம், அல்லவா?" என்று கேட்டார்.

கிருஷ்ணர் ரொம்பவும் சந்தோஷமாக அந்த மலரை எடுத்துக்கொண்டு ருக்மிணியின் மாளிகைக்குப் போனார். அதற்குள் குறும்புக்கார நாரதர், கிருஷ்ணரின் மற்றொரு மனைவியான சத்யபாமாவின் இல்லத்துக்கு ஓடினார். முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டார்.

"முனிவரே! ஏன் வேதனையோடு இருக்கிறீர்கள்?' என்று கேட்டாள் பாமா.

"இந்திரன் தோட்டத்திலிருந்து ஒரு பாரிஜாத மலரை கிருஷ்ணனுக்காகக் கொண்டு வந்தேன். 'உங்களுக்குப் பிரியமான மனைவிக்கு இதைத் தாருங்கள், பிரபுவே!' என்று சொன்னேன். அதை அவர் உனக்குத் தருவார் என்று நினைத்தே அப்படிச் சொன்னேன். ஆனால், அவரோ அதை ருக்மிணியிடம் கொண்டு போய்க் கொடுத்துவிட்டார்!" என்று கோள் மூட்டினார் நாரதர்.



ஆத்திரம் அடைந்தாள் சத்யபாமா. "அந்த மலரை நான் கைப்பற்றாமல் விடமாட்டேன்" என்றாள். "அமைதியாக இரு! ஒற்றை மலரை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்? உன் மீது கிருஷ்ணருக்கு உண்மையான பிரியம் இருந்தால், தேவலோகத்திலிருந்து அந்த மரத்தையே அல்லவா உன்னிடம் கொண்டு வந்து தரவேண்டும்?" என்றார் நாரதர்.

சத்யபாமா கிருஷ்ணரிடம் சென்று, அவரை உலுக்கியெடுத்தாள். "உங்களுக்கு என்னைவிட ருக்மிணியைத்தானே அதிகம் பிடித்திருக்கிறது?" என்று கோபப்பட்டாள். கிருஷ்ணரால் அவளைச் சமாதானம் செய்ய முடியவில்லை.

"உங்கள் சமாதானம் எதுவும் எனக்கு வேண்டாம். என் மீது உங்களுக்குப் பிரியம் இருந்தால், அந்தப் பாரிஜாத மரத்தையே கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் பட்டினி கிடப்பேன்" என்றாள்.

கிருஷ்ணர் அமராவதிக்குப் பறந்தார். இரவு நேரத்தில் திருட்டுத்தனமாகத் தோட்டத்தில் நுழையும்போது, காவலர்கள் அவரைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டார்கள். தேவேந்திரன் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

இந்திரன் அவரைப் பார்த்ததும் ஆச்சரியப் பட்டான். நடந்ததைச் சொன்னார் கிருஷ்ணர். இந்திரன், "சரிதான்... மனைவிகள் சமாசாரமா?' என்று சொல்லிச் சிரித்துவிட்டு, மரத்தைக் கொடுக்க ஆணையிட்டான்.

'இந்த மரத்தைக் கொண்டுபோய் பாமா வுக்குக் கொடுத்தால், ருக்மிணிக்கு கோபம் வரும். இன்னொரு மரத்துக்கு நான் என்ன செய்வேன்!' என்று கிருஷ்ணர் யோசித்தார். அவருக்கு ஒரு தீர்வு தோன்றியது.

கிருஷ்ணன் வெகு தந்திரசாலி! அவருடைய இரு மனைவியரின் தோட்டங்களும் அருகருகே இருந்தன. சத்யபாமாவின் தோட்டத்தில் மரம் இருக்கும்படியும், பூக்கள் உதிரும் கிளைகள்

ருக்மிணியின் தோட்டத்தில் இருக்கும்படியும் சாமர்த்தியமாகப் பாரிஜாத மரத்தை நட்டு வைத்தார். காலையில் பொழுதுவிடிந்ததும் பாரிஜாத மலர்களைச் சேகரித்தவள் ருக்மிணிதான்.

புனைவாக இருந்தாலும், எவ்வாறு சாதுர்யமாக ஒரு பிரச்னையைத் தீர்ப்பது என்பதை இந்தக் கதை விளக்குகிறது.

தீர்க்கமுடியாத பிரச்னைகளையும், கொஞ்சம் மாற்றி யோசித்தால் சுலபமாகத் தீர்க்க முடியும்.

ஒரு சீமாட்டி தன் ஓவியத்தைப் பெரிதாக வரைந்து வீட்டில் மாட்டவேண்டும் என்று ஆசைப்பட்டு, பிரபல ஓவியர் ஒருவரிடம் சென்றாள். அவரும் அவளைத் தத்ரூபமாக வரைந்தார். ஆனாலும், அவளுக்குத் திருப்தி இல்லை. "இந்த உருவம் என்னைப் போலவே இல்லை. அப்படி இருந்திருந்தால், என்னுடைய நாய் அந்த ஓவியத்தைப் பார்த்ததுமே அடையாளம் கண்டு வாலாட்டியிருக்குமே?" என்றாள். பின்பு ஓவியர் அந்தப் படத்தில் சில நுட்பமான மாறுதல்களைச் செய்து கொடுத்து அனுப்பினார்.

ஒரு வாரம் கழித்து, அவள் மீண்டும் வந்தாள். "என் நாய் இப்போதும் வாலாட்டவில்லை. சரியில்லாத இந்த ஓவியத்தை நான் வாங்கிக் கொள்ள மாட்டேன்" என்று அடம் பிடித்தாள். தான் அந்த ஓவியத்தை இன்னும் மெருகேற்றி வைப்பதாகவும், மறு வாரம் வந்து பார்க்குமாறும் அந்த ஓவியர் சொன்னார்.

அதன்படி, அடுத்த வாரமும் அவள் தனது நாயோடு வந்தாள். இந்த முறை அவளின் நாய் வேக வேகமாக வாலாட்டிக்கொண்டு, ஓவியத்தின் அருகில் சென்றது; அந்தச் சட்டங்களை நக்கியது. அந்தப் பெண்மணிக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. திருப்தியான திருப்தி! பேசிய தொகைக்கு மேலேயே பத்தாயிரம் ரூபாய் அதிகம் கொடுத்து, அதை வாங்கிச் சென்றாள்.

ஓவியரின் உதவியாளர், "இந்த ஒரு வாரத்தில் நீங்கள் ஓவியத்தில் எந்த மாற்றமும் செய்ததாக எனக்குத் தெரியவில்லையே! பின்பு எப்படி, அந்த நாய் அதைப் பார்த்து வாலாட்டியது?' என்று குழப்பத்துடன் கேட்டார்.

"நாய்க்கு வண்ணங்கள் எல்லாம் தெரியாது. அந்தச் சீமாட்டி முட்டாள்தனமாகப் பேசு கிறாள். இப்படிப்பட்டவர்களைத் தந்திரமாகத்தான் எதிர்கொள்ளவேண்டும். நான் ஓவியத்தின் சட்டத்தில் மாமிசத்தைத் தடவி வைத்திருந்தேன். அந்த மணத்துக்காகத்தான் நாய் ஓடிவந்து அந்த ஓவியத்தை நக்கியது. அதை அவள், தனது நாய் தன்னை ஓவியத்தில் அடையாளம் கண்டுகொண்டதாக எண்ணி விட்டாள்!' என்றார் ஓவியர்.

புரியாதவர்களுக்குப் புரிய வைக்க மாற்றி யோசிப்பது அவசியம்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 8

மனைவியும் மாமியாரும்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

கலைகளிலும் மாற்றி யோசிப்பது நிகழ்ந்து வந்திருக்கிறது. 1915-ஆம் ஆண்டு, 'பக்' என்னும் அமெரிக்கக் கேளிக்கை இதழில், இங்கிலாந்தைச் சேர்ந்த கார்ட்டூனிஸ்ட் வில்லியம் எலி ஹில் என்பவர், 'என் மனைவியும், என் மாமியாரும்' எனும் தலைப்பில் கேலிச் சித்திரம் ஒன்றை வரைந்து, "இருவரும் இதே படத்தில் இருக்கிறார்கள். கண்டுபிடியுங்கள்' என்று குறிப்பு வெளியிட்டார்.

அந்தப் படத்தை உற்றுப் பார்த்தால், ஒரு கோணத்தில் இளம் பெண்ணாகவும், மற்றொரு கோணத்தில் வயதான பெண்ணாகவும் தெரியும். அந்தப் படத்தை ஸ்டீபன் கோவே, 'வெற்றிக்கு ஏழு படிகள்' எனும் தனது நூலில் பயன்படுத்தியிருப்பார். எந்தக் கோணத்தில் பார்க்கிறோம் என்பதே நம் சிந்தனையைத் தீர்மானிக்கிறது. எல்லாவற்றிலும் இரண்டு கோணங்கள் உண்டு என்பதை வெளிப்படுத்தும்விதமாக, இந்தப் படம் மனவியல் வகுப்புகள் பலவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

இதை அண்மைக் காலத்தில் மேற்கு கண்டுபிடித்ததைப் போலத் தோன்றினாலும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த உத்தியை நம் தமிழகத்தில் பயன்படுத்தியிருக்கிறார்கள். கும்பகோணம் தாராசுரம் என்கிற ஊரில் உள்ள ஐராவதேஸ்வரர் கோயிலில் யானை, காளை ஆகியவற்றைக் கொண்ட ஒரு சிற்பம் இருக்கிறது. ஒரு பக்கத்திலிருந்து பார்த்தால் யானையைப் போலவும், இன்னொரு பக்கத்திலிருந்து பார்த்தால் காளையைப் போலவும் தோன்றும் அற்புதச் சிற்பம் இது.

இதைப் போன்ற நுணுக்கங்களைத் தமிழர்கள் தொன்றுதொட்டுப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். சேலம் தாரமங்கலத்தில் ஈஸ்வரன் கோயில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோயிலில் வாலி, ஸ்ரீராமன் ஆகிய இருவரின் சிற்பங்களும் இருக்கின்றன. ஸ்ரீராமன் வாலியைக் குறி பார்ப்பதைப் போன்ற அந்தச் சிற்பத்தில், ஸ்ரீராமனின் இடத்திலிருந்து பார்த்தால், வாலி தெரிவான்; ஆனால், வாலி சிற்பத்திலிருந்து பார்த்தால், ஸ்ரீராமன் தெரியமாட்டார். வாலியை ஸ்ரீராமன் மறைந்திருந்து தாக்கினார் என்கிற புராண சம்பவத்தை வெகு அழகாக உணர்த்தும் அற்புதச் சிற்பம் இது. மாற்றி யோசித்ததால் கிடைத்த சிற்பம்.



இன்னொரு சிற்பம், ரதி மன்மதன் இருவரையும் சித்திரிக்கிறது. ரதி சிற்பம் இருக்கிற இடத்திலிருந்து பார்த்தால், மன்மதன் தெரிவான்; ஆனால், மன்மதன் இருக்கிற இடத்திலிருந்து பார்த்தால் ரதி தெரியமாட்டாள். காரணம், பெண்கள் ஆண்களை அவர்கள் அறியாமல் பார்ப்பார்கள் என்பதுதான். எவ்வளவு

அழகாக இந்தச் செய்தியை இந்தச் சிற்பம் உணர்த்திவிடுகிறது. கல்லிலே கவிதைகள் வடிப்பது என்பது இதுதான் போலிருக்கிறது.

கண்கள் ஏமாற்றக்கூடியவை. வரிசை விளக்குகளில் முதல் விளக்கு அணைந்து, அடுத்த விளக்கு எரிகிறது; பிறகு, இரண்டாவது அணைந்து, மூன்றாவது விளக்கு எரிகிறது; இதேபோல் தொடர்ச்சியாக அடுத்தடுத்த விளக்குகள் அணைந்து எரிகிற மாதிரி செய்தால், விளக்குகள் ஓடுவதைப் போன்ற ஒரு மாயத் தோற்றம் விழிகளுக்குத் தெரியும். இந்தக் கோட்பாட்டுக்கு 'ஃபை கோட்பாடு' என்று பெயர். இதைக் கல்லிலே செய்து காட்டியவர்கள் தமிழர்கள்.

சுசீந்திரம் போன்ற கோயில்களில் இசைத் தூண்கள் இருக்கின்றன. தட்டுகிற இடத்தைப் பொறுத்து சப்த சுரங்களும் ஒலிக்கின்றன. இந்தக் கோயில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது என்பதிலிருந்தே, இந்த மண்ணுக்கென்று பண்கள் இருந்தன என்பதை அறியமுடியும்.

எந்தப் புதுச் சிந்தனையும் திடீரென்று உதித்துவிட முடியாது. பழைய சிந்தனை கூட்டுப்புழுவாக மாறுகிறபோதுதான், அதிலிருந்து புதுச் சிந்தனை பட்டாம்பூச்சியாக கிளம்பிவருகிறது. இதை டி.எஸ்.எலியட் 'மரபும் தனித்துவமும்' என்கிற கட்டுரையில் தெளிவாக்கியிருப்பார். இன்றைய கலை வடிவங்கள் நம் முன்னோர்களுடைய கலை வடிவத்தின் தொடர்ச்சியாகவே இருக்கின்றன.

பாரம்பரிய சிந்தனை என்பது வலிமையானது. இன்று நாம் 'விழியியல் காட்சிப்பிழை' என்கிற ஒன்றை விளக்குகிறோம். நாம் தவறான அனுமானத்துக்கு வருகிறோம் என்பதை உணர்த்தக்கூடிய பல படங்களும் நிகழ்வுகளும் இருக்கின்றன. இப்படியரு சிந்தனையை 2500 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கத்தில் செய்தார்கள்.

அதீனா என்கிற தேவதைக்காக, பார்த்தினான் என்கிற கோயில் ஏதென்ஸ் நகரத்தில் அமைக்கப்பட்டது. அதீனா ஏற்படுத்தியதே ஏதென்ஸ் என்பது ஐதீகம். கி.மு. 447-ம் வருடம் கட்டத் தொடங்கப்பட்ட அந்தக் கோயில், வித்தியாசமான அமைப்பைக் கொண்டது. உண்மையில் அதன் தூண்கள் சாய்ந்திருந்தாலும், நேராக இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்துபவை.



மனிதர்களின் புத்திக்கூர்மையைப் பரிசீலிக்கும் நிகழ்வுகள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன. அவற்றின் வடிவங்கள்தான் மாறுகின்றன. எல்லோருமே வெந்ததைத் தின்று வந்ததைப் பேசி வாழ்ந்துவிட்டுப் போகவில்லை. வித்தியாசமாக ஏதேனும் சிந்திக்க வேண்டும் என்று நினைத்தார்கள். தஞ்சை பெரிய கோயிலின் கூம்பு வடிவ அமைப்பு, இன்றைக்கும் பல வெளிநாட்டுக் கட்டடக் கலைஞர்களை ஆச்சரியத்துக்குள்ளாக்குகிறது. தமிழக மன்னர்கள் வெளிநாட்டை வெற்றி கொண்டதன் அடையாளமாக அங்கு கோயிலையே கட்டினார்கள். ராஜேந்திர சோழன் மைசூரில் கட்டிய சிவன் கோயிலை இன்றைக்கும் பார்க்கலாம்.

அகமதாபாத்தில் ரயில் நிலையத்துக்கு அருகில், ஸாதி பஷீர் பள்ளிவாசல் இருக்கிறது. அதில் நான்கு கோபுரங்கள் இருந்தன. அவற்றை 'ஆடும் மினார்கள்' என்று அழைப்பார்கள்.

அங்கு இப்போது மூன்று மினார்கள் மட்டுமே இருக்கின்றன. ஒரு கோபுரத்தின் மீது ஏறி 90 அடி உயரத்துக்குப் போனால், நகர் முழுவதும் தெரியும். 60 அடிக்கு அப்பால் இன்னொரு கோபுரம் இருக்கிறது. அந்தக் கோபுரத்துக்குச் சென்று, அதை யாராவது பலமாக ஆட்டினால், இந்தக் கோபுரமும் லேசாக அசைவதை உணர முடியும். கட்டடக் கலை ஆச்சரியம் இது!

சூயஸ் கால்வாயை வெட்டிய, பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த பெர்ட்டினான்ட் என்பவரின் பேரன், இந்தியாவை வெள்ளையர்கள் ஆண்ட போது, இந்த மினார்களைப் பற்றிக் கேள்விப்பட்டு, வைஸ்ராயிடம் அனுமதி கேட்டு, அந்த நுட்பத்தை

அனுபவித்து அறியவேண்டும் என்று ஆவல் கொண்டார். எனவே, ஒரு கோபுரத்தை இடித்துப் பார்த்து, ஆராய்ச்சி செய்ய விரும்பினார். மறுபடியும் அந்தக் கோபுரத்தைக் கட்டித் தருவதாக வாக்குக் கொடுத்தார். மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இருந்தாலும், அவரது ஆர்வத்தையும், அவர் கொடுத்த உறுதிமொழியின் வேகத்தையும் பார்த்துச் சம்மதித்தார்கள். ஆனால், இடித்தவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இடித்த கோபுரத்தை மீண்டும் கட்டித் தரவும் இல்லை. அப்படியே போட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார். எனவே, இப்போது மூன்று மினார்கள் மட்டுமே இருக்கின்றன.

தமிழ்நாட்டின் கோயில்களில், யாளி என்கிற கற்பனை மிருகம் ஒன்று இருப்பதைப் பார்க்கலாம். அதன் வாயில், கல்லொன்று உருளும். கல்லை உருட்ட லாம்; ஆனால், வெளியே எடுக்க முடியாது. எப்படி அந்தக் கல்லை உள்ளே வைத்திருப்பார்கள் என்பது இன்றைக்கும் நாம் ஆச்சரியப்படுகிற சிற்ப நுட்பம்.

விழியியல் காட்சிப்பிழையைப் பற்றி 2300 ஆண்டுகளுக்கு முன்பே கன்ஃபூஷியஸுக்கும் லாவோட்ஸுவின் சீடர்களுக்கும் இடையே வாக்குவாதம் நடந்தது.

கன்ஃபூஷியஸ் மேம்போக்கான அறிவுடையவர் என்பது லாவோட்ஸு வின் எண்ணம். அவருடைய அறிவின் விசாலத்தைக் கண்டு கன்ஃபூஷியஸ் மிரண்டது உண்டு. ஒருமுறை, லாவோட்ஸுவின் சீடர்கள் கன்ஃபூஷியஸிடம், 'காலையில் சூரிய உதயத்தின்போது சூரியன் பெரிதாகத் தெரிகிறது. ஆனால், மதியம் சிறிதாகத்தான் தெரிகிறது. காலையிலும் மாலையிலும் பெரிதாகத் தெரியும் சூரியன் சுடுவதில்லை. அருகில் இருக்கிற பொருள்கள்தான் பெரிதாக இருக்கும். எனில், காலையிலும் மாலையிலும்தான் வெயில் அதிகம் சுட்டெரிக்கவேண்டும். ஆனால், மதிய வேளையில்தான் வெயில் கொதிக்கிறது. இது எப்படிச் சாத்தியம்?' என்று கேட்டார்கள்.

கன்ஃபூஷியஸ் பதில் சொல்ல முடியாமல் திகைத்தார். இது விழியியல் காட்சிப்பிழையால்தான் நிகழ்கிறது. காலையில் உண்மையில் சூரியன் உதயத்தின்போது பெரிதான வடிவத்தில் இல்லை. தரையையட்டி உதயம்

நிகழ்வதுபோல் தோன்றுவதால், நாம் அதைப் பார்க்கிற பொருட்களின் ஊடாக அது பெரிதுபோல் நமக்குத் தோன்றுகிறது. மரங்களின் ஊடாக, அலைகளின் ஊடாக, மலைகளின் ஊடாக அதைக் காண்கிறபோது, அதன் மொத்த வடிவம் நமக்குத் தோன்றி, பெரிதுபோலத் தோன்றுகிறது. தூரத்தில் இருப்பதால்தான் காலைச் சூரியனையோ, அஸ்தமனச் சூரியனையோ எளிதில் பார்க்க முடிகிறது. நண்பகலில் சூரியனை உற்றுப்பார்த்தால், விழித்திரை எரிந்துவிடும்.

இந்த நுட்பத்தை அப்போதே லாவோட்ஸுவின் சீடர்கள் தெரிந்துவைத் திருந்தார்கள். பழைமையை மறுஉருவாக்கம் செய்கிறபோதுதான் புதுமைக்குப் பல பரிமாணங்கள் புலப்படுகின்றன.



எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கத் தெரிந்தவர்களால்தான் உண்மையை உணரமுடியும். கிருஷ்ணதேவராயரிடம் அப்பாஜி என்கிற அமைச்சர் இருந்தார். அவருடைய புத்திக்கூர்மை பலருக்கும் தெரியும். அவரை தில்லி பாதுஷா தனது சபைக்கு வரவழைத்து, அவரின் அறிவாற்றலைச் சோதித்துப் பார்க்க விரும்பினார். ஒரு காவலாளியை தன்னைப் போலவே வேஷமிடச் செய்து, அரியாசனத்தில் அமர்த்தி வைத்துவிட்டு, தான் ஒரு சாதாரண வேலைக்காரனைப் போல வேடமணிந்து, ஒரு மூலையில் ஒதுங்கி நின்றிருந்தார்.

அவைக்குள் நுழைந்த அப்பாஜி அரியணையில் இருந்தவரை ஒரு பார்வை பார்த்தார்; பிறகு, அவையைப் பார்த்தார். பின்னர், காவலாளி உருவத்தில் நின்றிருந்த பாதுஷாவிடம் நேராகச் சென்று வணக்கம் தெரிவித்துவிட்டு, 'பாதுஷா அவர்களே! எதற்காகச் சிரமப்பட்டுக்கொண்டு இங்கே நிற்கிறீர்கள்?' என்று கேட்டார்.

அப்பாஜியின் திறமையைக் கண்டு பாதுஷாவும் சபையோரும் வியப்பும் திகைப்பும் அடைந்தார்கள். பாதுஷா தனது வேடத்தைக் களைந்துவிட்டு, அரியாசனத்தில் அமர்ந்தார். அப்பாஜியையும் ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமர வைத்தார்.

'அப்பாஜி! சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தது நானல்ல என்று எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?' என்று வியப்பு மேலிடக் கேட்டார் பாதுஷா.

'பாதுஷா அவர்களே! தங்களை அடையாளம் கண்டுகொள்ள நான் அதிகம் சிரமப்படவில்லை. அரியணையில் அமர்ந்திருந்தவரை யாருமே லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. காவலாளி வேடத்தில் நின்று கொண்டிருந்த தங்கள் பக்கமே அவர்கள் பயபக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதை வைத்துத்தான் கண்டுபிடித்தேன்' என்றார் அப்பாஜி.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 9

ஆயுளை அதிகரிக்கலாம்!
வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

ஒரு சின்ன புதிர்... சட்டென்று பதில் சொல்லுங்கள், பார்ப்போம்!

சில நாய்கள் ஏகாந்தமான சாலையில் சென்று கொண்டிருக்கின்றன. ஒரு நாய்க்குப் பின்னால் இரண்டு நாய்களும், ஒரு நாய்க்கு முன்னால் இரண்டு நாய்களும், ஒரு நாய் நடுவிலும் சென்றுகொண்டிருக்கிறது. அப்படியென்றால், இந்த வரிசையை அமைக்க மிகக் குறைவாக எத்தனை நாய்கள் தேவைப்படும்?

பெரும்பாலானோர் 'ஐந்து நாய்கள்' என்றுதான் பதிலளிப்பார்கள். ஆனால், மூன்று நாய்கள் என்பதுதான் சரியான விடை. எனவே, கணிதமாக இருந்தாலும் சரி, பொருளாதாரமாக இருந்தாலும் சரி... குறைந்த எண்ணிக்கையில் அதிக பயனைப் பெறுவதுதான் சரியான விடையாக இருக்கமுடியும்.

எதையும் அவசரப்பட்டுச் செய்துவிடக்கூடாது. ஆழ்ந்து யோசிக்க வேண்டும். எந்தப் புதிருக்கும் எளிதான விடை இருக்கக்கூடும். ஆனால், ஏதோ நுட்பம் இருப்பதால்தான், அந்த விடை எளிதாகத் தெரிந்துவிடாதபடி, புதிராக ஆக்கப்பட்டுள்ளது. எனவே, சரியான விதத்தில் யோசித்து, சரியான விடையைக் கண்டுபிடிக்க வேண்டும். தொடர்ந்த பயிற்சியின் மூலம், இதை நம்மால் சாதிக்க முடியும்.

இந்தியாவில், விக்கிரமாதித்தன் கதைகள் மிகவும் புகழ் வாய்ந்தவை. அதில் சொல்லப்பட்டிருக்கும் புதிர்கள் பலவற்றுக்கு விடை காண்பது சிரமம். வழக்கமான யோசனை யில் இருப்பவர்களால் அந்தப் புதிர்களுக்கு விடைகாண முடியாது.

விக்கிரமாதித்தன் கன்னியாபுரி மன்னன். அவனது பிரதம மந்திரி, பட்டி என்பவன். தேவலோகத்தில் இந்திரன் சபையில் ஊர்வசி, ரம்பை இருவரில் யார் அதிக சிறப்பு வாய்ந்த நடன மாது என்கிற போட்டி ஏற்பட்டது. தீர்ப்பு வழங்க விக்கிரமாதித்தன் அழைத்துச்செல்லப்பட்டான்.

முதலில், ரம்பையின் நடனம் ஆரம்பமாயிற்று. அவள் ஆடல் கண்டு அனைவரும் மயங்கினர். அடுத்து, ஊர்வசியும் அனைவரையும் ஈர்க்கும் விதத்தில் சிறப்பாகவே ஆடினாள்.

இருவரின் நடனத்தையும் கண்டுகளித்த விக்கிரமாதித்தன், இருவரும் இணைந்து நடனமாடவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அதன்படி, மறுநாள் இருவரின் நடனமும் நடப்பதாக முடிவானது.

இதனிடையில், நந்தவனம் சென்று, தேவலோக புஷ்பங்களைப் பறித்து வந்து, இரண்டு பூச்செண்டுகள் தயார் செய்தான் விக்கிர மாதித்தன். மறுநாள் நடனப் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக ரம்பை, ஊர்வசி இருவரிடமும் ஆளுக்கொரு பூச்செண்டைக் கொடுத்து, "நீங்கள் வெறும் கையோடு நடனமாடுவதைவிட, கையிலே பூச்செண்டைப் பிடித்துக்கொண்டு ஆடினால் அலங்காரமாக இருக்குமே!" என்றான்.

ரம்பையும் ஊர்வசியும் மிக மகிழ்ச்சியுடன் அந்தப் பூச்செண்டைக் கையில் பிடித்தபடி ஆடினார்கள். சிறிது நேரத்தில், ரம்பையின் நடனம் பிசகியது. கால்கள் தடுமாறின. அவள் பூச்செண்டைத் தூக்கியெறிந்துவிட்டாள். ஆனால், ஊர்வசியோ இறுதிவரை பூச்செண்டைப் பிடித்தபடி நேர்த்தியாக ஆடினாள்.



'ஊர்வசியின் நடனமே நுட்பமானது. ஊர்வசியே வென்றாள்' என்று தீர்ப்புக் கூறினான் விக்கிரமன்.

'அது எப்படி?' என்று இந்திரன் கேட்டான்.

ஊர்வசியிடமிருந்து பூச்செண்டைத் திரும்ப வாங்கி, அதனுள் தான் வைத்துத் தைத்த வண்டை எடுத்து அவையினரிடம் காண்பித்த விக்கிரமன், 'இந்தப் பூச்செண்டை ஊர்வசி மிருதுவாகக் கையாண்டதால், வண்டு கொட்டாமல் செம்மையாக ஆடினாள். ரம்பை இதை இறுக்கிப் பிடித்ததால், வண்டு கொட்டி, அவள் நடனம் தடுமாறியது; செண்டையும் தூக்கியெறிந்தாள்!' என்றான்.

விக்கிரமாதித்தனின் மதி நுட்பத்தை உணர்ந்து மகிழ்ந்த இந்திரன், ஒரு சிம்மாசனத்தை அளித்து, 'இதில் அமர்ந்தபடி, ஆயிரம் ஆண்டுகள் வரை ஆட்சி செய்து வருவாய்' என்று வரமளித்தான்.

இதை அறிந்த பட்டி, தானும் அதிக ஆண்டுகள் வாழ வேண்டுமென்று காளியை நோக்கித் தவம் இருந்தான்.

'நீ கேட்கும் வரம் கைகூட வேண்டுமென்றால், விக்கிரமாதித் தனின் தலையை இந்தப் பீடத்தில் வைக்க வேண்டும்' என்றாள் காளி. பட்டி உடனே அரண்மனைக்குச் சென்று, உறக்கத்திலிருந்த விக்கிரமனை எழுப்பி, 'அரசே! ஒரு காரியத்துக்காக உங்கள் தலை தேவைப்படுகிறது!' என்றான்.

'மகிழ்ச்சி! எடுத்துச் செல்!' என்றான் விக்கிரமன்.

விக்கிரமாதித்தனின் தலையை வாளால் வெட்டி எடுத்துச் சென்று, தேவியின் பலிபீடத்தில் வைத்தான் பட்டி. காளி மனம் மகிழ்ந்து, அவனுக்கு 2,000 ஆண்டு ஆயுளையும், மேலும் பல சிறப்புகளையும் அளித்தாள்.

பட்டி சத்தமாகச் சிரித்தான்.

காளியம்மன் காரணம் கேட்க, 'எங்கள் அரசன் தேவர் களிடம் ஆயிரம் ஆண்டு ஆட்சி புரிய வரம் வாங்கி வந்து சில மாத காலம்கூட ஆகவில்லை; அதற்குள் கழுத்து அறுபட்டு, அவன் தலை உன் பலி பீடத்தில் இருக்கிறது. தேவாதி தேவர்களின் வரம் இந்த நிலைக்கு உள்ளானால், நீ கொடுத்த வரம் எப்படிப் பலிக்கும் என்பதை எண்ணியே சிரித்தேன்' என்றான் பட்டி.

'பட்டி, என் வார்த்தைக்கு பங்கம் வராது. நான் சொல்கிறபடி செய். உன் அரசன் உயிர் பிழைப்பான்!" என்ற தேவி, எலுமிச்சம்பழமும் திருநீறும் தந்து, விக்கிரமனின் தலையை எடுத்துச் சென்று அவனது உடலில் பொருத்தி, கும்ப தீர்த்தத்தைத் தெளித்து, திருநீற்றைத் தடவுமாறு தெரிவித்தாள்.

பட்டி அவ்விதமே செய்ய, விக்கிரமாதித்தன் உயிர் பெற்றான். அவனிடம் பட்டி, தான் அம்மனிடம் 2,000 ஆண்டு ஆயுளைப் பெற்று வந்த தகவலைக் கூறினான்.

'பட்டி! தேவர்கள் எனக்குக் கொடுத்த ஆயுளோ ஆயிரம் ஆண்டு. நீ இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ ஆயுள் பெற்று வந்துள்ளாய். நாம் இருவரும் சம ஆயுள் வாழ வழியில்லாமல் போய்விட்டதே?' என்றான் விக்கிரமாதித்தன்.



'அரசே! வருந்தாதீர்கள். உங்கள் ஆயுள் ஆயிரம் ஆண்டு என தேவர்கள் உங்களுக்கு வரம் தரவில்லை. ஏறிய சிம்மாசனத்திலிருந்து இறங்காமல் ஆயிரம் ஆண்டுக் காலம் ஆட்சி புரிவீர்கள் என்றுதான் அருளியிருக்கிறார்கள். எனவே, நீங்கள் சிம்மாசனத்தில் அமர்ந்து, ஆறு மாதம் ஆட்சி புரியுங்கள். பின்பு, காடுகளில் சஞ்சரித்து ஆறு மாதங்களைக் கழியுங்கள். இப்படிச் செய்தால், தங்களுக்கு ஆயுள் 2,000 ஆண்டு ஆகிவிடும்' என்று யோசனை சொன்னான் பட்டி. அதன்படியே இருவரும் 2,000 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்கிறது கதை. மாற்றி யோசிப்பதற்கான கதையாக இது இருக்கிறது.

விக்கிரமாதித்தனின் கதையைப் படிக்கும்போது, பைபிளில் வருகிற சாலமன் மன்னன் நம் நினைவுக்கு வருகிறார். புத்திக் கூர்மையிலும், மாற்றிச் சிந்திப்பதிலும் இணையற்ற மன்னனாக இருந்தார் சாலமன்.

ஒருநாள், விலைமாதர்கள் இருவர் அரசர் முன்னிலையில் வந்து நின்றனர். அவர்களுள் ஒருத்தி, 'இந்தப் பெண்ணும் நானும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். சில மாதங்களுக்கு முன்பு, நான் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தேன். என் குழந்தை பிறந்த மூன்றாம் நாள், இவளும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்த வீட்டில் எங்கள் இருவரைத் தவிர, வேறு

யாரும் இல்லை. இரவில் தூங்கும்போது, இவள் தன் குழந்தைமீது புரண்டதில், அது மூச்சடைத்து இறந்துபோயிற்று. இவள் நள்ளிரவில் எழுந்து, என்னருகில் கிடந்த என் குழந்தையை எடுத்துத் தன் அருகில் கிடத்திக்கொண்டுவிட்டு, இறந்துவிட்ட தன் குழந்தையை என் அருகில் போட்டுவிட்டாள். விடியற்காலையில் பிள்ளைக்குப் பால் கொடுக்க நான் எழுந்தபோது, ஐயோ... அது செத்துக்கிடந்தது. வெளிச்சத்தில் பிள்ளையை உற்றுப்பார்த்தபோதுதான், அது நான் பெற்ற குழந்தை அல்ல என்று தெரிந்தது. இவளிடம் இருப்பதே என் குழந்தை. என் குழந்தையை இவளிடமிருந்து மீட்டுத் தாருங்கள்!' என்று கதறினாள். 'இல்லை! இவள் பொய் சொல்கிறாள். இது என் குழந்தைதான்! செத்துப்போனது இவள் பிள்ளை!' என்றாள் மற்றவள். இவ்வாறு, உயிரோடு இருக்கும் அந்தக் குழந்தை தன்னுடையதுதான் என்று இருவருமே சாதித்தனர்.

அரசர், 'சரி, இருவருமே இது உங்கள் குழந்தை என்கிறீர்கள். எனவே, வேறு வழியில்லை" என்றவர், படை வீரன் ஒருவனை அழைத்து, 'உயிரோடிருக்கும் இந்தக் குழந்தையை சரிபாதியாக வெட்டி, ஆளுக்கொரு பாதியாகக் கொடுத்துவிடு!" என்று ஆணையிட்டார்.

உடனே, ஒருத்தி பதறித் துடித்து, 'வேண்டாம் அரசே! குழந்தையைக் கொல்ல வேண்டாம். அதை அவளிடமே கொடுத்துவிடுங்கள்' என்று வேண்டினாள். மற்றவளோ, 'அது எனக்கும் வேண்டாம்; உனக்கும் வேண்டாம். மன்னரின் தீர்ப்பே சரியானது. அதை இரண்டாக வெட்டுங்கள்' என்றாள். உடனே அரசர், 'அந்தக் குழந்தையை முதல் பெண்ணிடம் ஒப்படையுங்கள்! அவள்தான் அதன் தாய்!' என்றார்.

இப்படி, வேறுபட்டுச் சிந்திப்பதே அறிவாளிகளின் இலக்கணம்.

நவீன சாலமன் கதை ஒன்றும் உண்டு.

இரண்டு பெண்கள் ஓர் இளம்பெண்ணுடன் அவைக்கு வந்து, "இவள் என் மருமகள். என்னோடு அனுப்பிவைக்க வேண்டும்" என்று வாதாடினார்கள். சாலமன் போலவே இந்த நவீன சாலமனும், அந்தப் பெண்ணை இரண்டாக வெட்டித் தரும்படி ஆணையிட்டான். அப்போது ஒருத்தி 'வேண்டாம்' என்று பதற, மற்றொருத்தியோ சிரித்துக்கொண்டிருந்தாள்.

உடனே, 'மருமகள் வெட்டுப்பட வேண்டும் என விரும்பியவளே உண்மையான மாமியார்' என்று நவீன சாலமன் தீர்ப்பளித்ததாக, மாற்றி யோசித்த ஒருவர், இணையத்தில் நகைச்சுவைக் கதை ஒன்றை உலவவிட்டிருக்கிறார். நகைச்சுவையை ரசிக்கலாம். மற்றபடி, இந்தக் கதையில் நமக்கு உடன்பாடு இல்லை.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 10

தோல்வியும் வெற்றியாகும்; வெற்றியும் தோல்வியாகும்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

எதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், கேள்வி மேல் கேள்வி கேட்பவர்கள்தான் வெற்றி பெற முடியும். அவ்வாறு கேள்வி கேட்பதற்கான சுதந்திரத்தை குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் உருவாக்கித் தரவேண்டும். இல்லாவிட்டால் மனப்பாடம் பண்ணும் இயந்திரங்களாக குழந்தைகள் மாறிவிடுவர். புதுமையாகச் சிந்திப் பவர்கள் மனப்பாட சக்தியில் கெட்டிக்காரர்களாக இருப்பதில்லை. ஐன்ஸ்டீனால் தனது தொலைபேசி எண்ணைக்கூட ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இயலவில்லை என்று படிக்கிறோம்.

1944-ம் வருடம், இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்ற 'ஐ சிடார் ராபி' என்பவர், தனது சாதனைக்குத் தாயாரே காரணம் என்று தெரிவித்தார். 'நான் பள்ளியிலிருந்து வெளிவரும்போது எல்லாத் தாய்மார்களும் அவர்களின் குழந்தைகள் அன்று என்ன கற்றுக்கொண்டார்கள் என்று கேட்பார்கள். என் தாயார் மட்டும், 'நீ இன்று வகுப்பில் என்ன கேள்வி கேட்டாய்?' என்று கேட்பார். அதுவே என்னை நோபல் பரிசு பெறும் அளவுக்குத் தூண்டியது" என்று குறிப்பிட்டார்.

முரண்பாடுகளிடையே உண்மை இருக்கிறது. ஒருவன் ரொட்டிக்கடைக்குச் சென்று, இரண்டு ரொட்டிகள் கேட்டான்.

'50 ரூபாய் தாருங்கள்' என்றார் ரொட்டிக் கடைக்காரர்.

'ஐம்பதா? எதிர்க் கடையில் 25 ரூபாய்தானே சொன்னார்?' என்று கேட்டான் வாங்க வந்தவன்.

'அப்படியென்றால், அங்கேயே வாங்கிக் கொள்ளவேண்டியதுதானே?'

'ஆனால், அவரிடம் ஸ்டாக் இல்லை!'

'நான் என்னிடம் ஸ்டாக் இல்லாதபோது 10 ரூபாய்க்குத்தான் விற்கிறேன்' என்றார் கடைக்காரர்.

இருப்பு இல்லாதபோது எவ்வளவு குறைவாக வேண்டுமானாலும் விலை சொல்லலாம்.

பெர்னாட்ஷா அதி புத்திசாலி என்பது அனைவருக்கும் தெரியும். அவருடைய நாடகங்களில் அடித்தட்டு மக்களின் உணர்வுகள் பிரதிபலிக்கும். அடிப்படையில் அவர் ஒரு பொதுவுடைமைவாதி. அவரை ஒருமுறை ஷேக்ஸ்பியரின் ரசிகர்கள், தாங்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேச வைத்தார்கள்.

ஷாவிற்கு ஷேக்ஸ்பியர்மீது விமர்சனங்கள் உண்டு. ஷாவை எப்படியாவது மட்டம் தட்ட வேண்டுமென்பதற்காகவே ஷேக்ஸ்பியரின் ரசிகர்கள் அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, ஷாவைப் பேசச் சொன்னார்கள்.

ஷா பேசி முடிந்ததும், அந்த ரசிகர்கள் ஒருவர் மாறி ஒருவர் எழுந்து, அவருடைய பேச்சைக் கடுமையாகக் குறை கூறினார்கள். விமர்சித்தார்கள். அவரோ சிரித்துக்கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தார்.



இறுதியில், 'அவ்வளவுதானா? வேறு ஏதும் விமர்சனம் இல்லையா?" என்று கேட்டார் ஷா. அனைவரும் அமைதியாக இருக்க, 'இங்கே நான் பேசிய அனைத்துமே ஷேக்ஸ்பியருடைய நாடகங்களிலிருந்து எடுத்தவைதான்' என்று புன்னகையோடு சொல்லி, அனைவரையும் வெட்கப்பட வைத்தார் ஷா. இதுதான் தோல்வியைக்கூட வெற்றியாக்கிக்கொள்கிற சாமர்த்தியம். எப்போது, எப்படி சுதாரித்துக் கொள்ளவேண்டும் என்பது ஒரு கலை. அதற்கு நுட்பம் தேவை.

சில நேரங்களில், வெற்றிகூட தோல்வியில் வந்து முடிந்துவிடும். அது நம் உள்ளுணர்வை இழக்கும்போது நிகழ்வது.

கிரேக்கப் புராணத்தில் ஆர்ஃபியஸ் என்கிற இணையற்ற பாடகனைப் பற்றி ஒரு புனைக் கதை உண்டு. யாழை மீட்டிக்கொண்டு அவன் பாடும் பாடல், உயிரின் உந்துசக்தியாக மாறியது. அது ஆறுகளின் போக்கை மாற்றக் கூடியதாகவும், மரங்களையும் மலைகளையும் அசைக்கக்கூடியதாகவும் இருந்தது.

யூரிடைஸ் என்கிற பெண்ணை அவன் மணந்தான். அவளோ ஒருமுறை, காமுகனான அரிஸ்டயோஸ் என்பவனிடமிருந்து தப்பி ஓடும்போது, பாம்பின் வாலை மிதித்துவிட்டாள். அது அவள் கணுக்காலில் கடிக்க, விஷம் ஏறி இறந்துவிட்டாள்.

ஆர்ஃபியஸ் பாதாள உலகுக்குச் சென்று மனைவியைத் திரும்ப மீட்டுக்கொண்டு வர முடிவு செய்தான். கீழ் உலக அரசவையை அடைந்தான். இனிய குரலால் பூமி கரையும்படி பாடினான். அங்கிருந்தவர்கள் மனமும் உருகியது. கீழ் உலக அரசன், யூரிடைஸை அழைத்துச் செல்ல ஆர்ஃபியஸுக்கு அனுமதி கொடுத்தான். ஆனால், 'நீ திரும்பிப் பார்க்கக் கூடாது. அவள் உன்னைப்

பின் தொடர்ந்து காற்று உலகுக்கு வருவாள். தப்பித் தவறி ஒருமுறை பின்னால் திரும்பி நீ அவளைப் பார்த்தால்கூட, அவள் காணாமல் போவாள். நீங்கள் புவி உலகுக்கு முழுவதும் போய் விட்டால்கூட அவள் காணாமல் போய்விடு வாள்' என்று நிபந்தனை விதித்தான். இதற்கு ஆர்ஃபியஸ் ஒப்புக்கொண்டான். ஆனால், செங்குத்தாக மேலே ஏற ஆரம்பிக்கும்போது, மனைவி வழுக்கிவிடுவாளோ என்கிற பதைபதைப்பில் அவன் திரும்பிப் பார்க்க, அவள் காணாமல் போனாள்.

இறுதியாக, ஆர்ஃபியஸின் முடிவு கோரமாக அமைந்தது. கொலைக் கும்பல் ஒன்று அவனைத் தாக்கியது. அவன் தலையைப் பறித்து, யாழுடன் ஆற்றில் வீசியது அது. அப்போதும் ஆர்ஃபியஸின் தலை பாடிக்கொண்டே ஆற்றில் மிதந்து சென்று, கடலை அடைந்தது.

'ஏன் ஆர்ஃபியஸ் திரும்பிப் பார்த்தான்?' என்பதுதான் இங்கே கேள்வி.

காதல் மனைவியைத் திரும்பிப் பார்க்காமல், அவள் உயிரோடு இருந்துதான் என்ன பொருள்? மனிதனின் நப்பாசை கடவுளுக்குத் தெரியாதா? அவனிடம் அப்படியொரு நிபந்தனையை விதித்து யூரிடஸை அனுப்பிவைத்ததன் காரணம் என்ன? 'கீழ் உலகம் வந்தவர்கள் யாரும் மீண்டு செல்லமுடியாது' என்பதுதானே உண்மை. இந்த இடத்தில், தேவர்கள் மாற்றி யோசித்தார்கள். மனிதன் வழக்கமாகச் சிந்தித்தான். அதனால், நிகரற்ற கலைஞனாக இருந்தும் அவன் தன் மனைவியை இழந்தான்.

கடற்கன்னிகள் பற்றி கிரேக்க ஐதீகம் ஒன்று உண்டு. அவர்கள் பாடல் மிக இனிமையாக இருக்கும். அதில் ஒரு மயக்கம் பிறக்கும். கடினப் பாறைகளில் அமர்ந்து, அவர்கள் பாடுவார்கள். அந்தப் பாடல், கப்பல்களில் செல்பவர்களை வசீகரிக்கும். அவர்களும் மெய்ம்மறந்து, பாடல் வந்த திக்கை நோக்கித் தங்கள் கப்பலைச் செலுத்த, அவை பாறைகளில் மோதித் தூள் தூளாகிவிடும். அனைவரும் பலியாகிவிடுவார்கள். இந்தக் கடற்கன்னிகளின் பாடலுக்கு மாற்று மருந்தாக, தெளிவான பாடலைப் பாடி, கடலோடிகளிடம் விழிப்பு உணர்வை ஏற்படுத்தி, அவர்களின் கப்பலைக் காப்பாற்றுபவன்தான் இந்த ஆர்ஃபியஸ்.

ஹோமர் எழுதிய ஒடிசியில், யுலிஸஸ் நாடு திரும்புகிறான். அப்போது, கடற் கன்னிகள் வாழும் பகுதியில், அவன் கப்பல்கள் செல்கின்றன. அவனுக்குக் கடற்கன்னிகளின் பாட்டைக் கேட்க வேண்டும் என்று ஆசை. அதே நேரம், பாறையில் கப்பல் மோதவும் கூடாது. அவன் இதுகுறித்துச் சிந்தித்தான். தன்னை வலிமையான கயிற்றால் கப்பல் தளத்தில் கட்டும்படி மாலுமிகளைப் பணித்தான். அவர்கள் எல்லோருடைய காதுகளிலும் மெழுகைக் காய்ச்சி ஊற்றினான். கப்பல்கள் சென்றுகொண்டிருந்தன. கடற்கன்னிகளின் இசை காற்றில் தவழ்ந்து வந்தது. அவ்வளவு அற்புதமான, மயக்கும் இசை!

கயிற்றிலிருந்து விடுவித்துக்கொள்ள முயற்சி செய்தான் யுலிஸஸ். முடியவில்லை. அவன் மாலுமிகளின் காதுகளில் கடற்கன்னிகளின் இசை விழவில்லை. எனவே, யுலிஸஸின் கப்பல் பத்திரமாக அந்தப் பகுதியைக் கடந்துவிட்டது.

யுலிஸஸின் மனைவி பெயர் பெனிலோப். கற்பின் இலக்கணமாகத் திகழ்ந்தவள். ட்ராய் நகரோடு நடந்த சண்டைக்காகச் சென்ற யுலிஸஸ், போர் முடிந்து திரும்பி வர, 20 ஆண்டுகள் ஆயின. பெனிலோப்பின் அழகில் மயங்கிய பலர், 'இனி யுலிஸஸ் திரும்பி வரமாட்டான். எங்களை மணந்துகொள்' என்று வற்புறுத்தினார்கள். அவளுக்கு அதில் சம்மதமில்லை.



தன்னை மணந்துகொள்ளப் போட்டி போடுபவர்களிடமிருந்து தப்பிப் பதற்காக, அவள் ஓர் உத்தியைக் கையாண்டாள். தனது மாமனாருக்காக ஒரு சால்வையை நெய்துகொண்டிருப்பதாகவும், அது முழுக்க நெய்து முடிந்த பிறகு திருமணம் செய்துகொள்வதாகவும் சொன்னாள். பகல் முழுவதும் சால்வையை நெய்வாள். அப்படி நெய்தவற்றையெல்லாம் இரவு பிரித்துவிடுவாள். இப்படியே அவள் காலத்தைக் கழித்தாள். எப்படியும் கணவன் ஒருநாள் வந்துவிடுவான் என்று அவள் திடமாக நம்பினாள்.

பெனிலோப்பிடம் ஒரு வேலைக்காரப் பெண் இருந்தாள். துரோகியான அவள் பெயர் மெலந்தோ. பெனிலோப்பை மணக்கப் போட்டி போட்டவர் களிடம் அவள் பெனிலோப்பின் உத்தியை உடைத்துக் கூறிவிட்டாள்.

போர் என்று புறப்பட்டு வந்து இத்தனை ஆண்டுகளாகிறதே, தன் மனைவி தனக்கு விசுவாசமாக இருக்கிறாளா என்பதை அறிய நினைத்தான் யுலிஸஸ். பிச்சைக்காரன்போல மாறுவேடம் பூண்டு ஊருக்குள் வந்தான்.

இங்கே, தன்னை மணக்கும்படி பெனிலோப்பை ஒவ்வொருவரும் நெருக்குகிறார்கள். கடைசியில் வேறு வழியின்றி, யுலிஸஸின் வில்லை எடுத்து யார் அம்பு எய்கிறார்களோ, அவரைத் திருமணம் செய்துகொள்வதாகச் சொல்கிறாள் பெனிலோப். மாறுவேடத்திலிருந்த யுலிஸஸும் அந்தப் போட்டியில் கலந்துகொள்கிறான்.

போட்டி தொடங்குகிறது. மற்றவர்களால் அந்த வில்லைத் தூக்கக்கூட முடியவில்லை. யுலிஸஸ் அந்த வில்லை எடுத்து நாணைப் பூட்டி, பெனிலோப்பை மணக்க வற்புறுத்தியவர்கள் மீது அம்பு மழை பொழிந்து, அவர்களை துவம்சமாக்குகிறான். பிறகு, நான்தான் யுலிஸஸ் என்று தன்னை வெளிப்படுத்துகிறான்.

பெனிலோப் நம்பவில்லை. ஏதோ ஒரு தேவன்தான் மாறுவேடத்தில் வந்து தன்னைப் பரிசோதிப்பதாக நினைக்கிறாள். அவள் தன் சேவகன் யூரிக்ளியாவை அழைத்து, திருமணக் கூடத்திலிருந்து தனது படுக்கையை அப்புறப்படுத்தும்படி ஆணை இடுகிறாள். யுலிஸஸ் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறான். 'எங்கள் படுக்கையை யாரும் வேறு இடத்துக்கு நகர்த்த முடியாது. அதன் கால்களில் ஒன்று, உயிருடன் உள்ள ஒலிவ மரம்" என்று பலமாக ஆட்சேபிக்கிறான்.

இந்த ரகசியம் அவனுக்கும் அவன் மனைவிக்கும் மட்டுமே தெரியும் என்பதால், அவன் தன் கணவன்தான் என்பதை அவள் கண்டுகொள்கிறாள்; அதன்பின், இருவரும் இணைந்து இனிமையாக வாழ்ந்தார்கள் என்று முடிகிறது கதை.

வெற்றி பெறுபவர்கள் எப்போதும் வித்தியாசமாகவே சிந்திக்கிறார்கள்.

(இன்னும் மேலே...)

மேலே...உயரே...உச்சியிலே 11

எண்ணம்... சொல்... செயல்..!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

எபிமெனிடஸ் என்கிற கிரேக்க அறிஞர் இருந்தார். அவருக்கு கிழக்கத்திய ஞானம் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வம் ஏற்பட்டது. எனவே, நீண்ட தீர்த்தயாத்திரை மேற்கொண்டார். புத்தரைச் சந்திக்க வேண்டும் என்பது அவருடைய ஆசை. அதேபோல், இறுதியாக புத்தரைச் சென்றடைந்தார்.

'நான் ஒரு கேள்வி கேட்பதற்காக உங்களிடம் வந்திருக்கிறேன். உலகத்திலேயே சிறந்த கேள்வி எது? சிறந்த பதில் எது?' என்று புத்தரிடம் கேட்டார் எபிமெனிடஸ்.

அதற்கு புத்தர், 'நீங்கள் கேட்டதுதான் மிகச் சிறந்த கேள்வி; இதற்கு நான் சொன்னதுதான் மிகச் சிறந்த பதில்' என்று குறிப்பிட்டார். சாதகமற்ற சூழலையும் சாதகமாக மாற்றிக் கொள்வதுதான் ஞானிகளின் சிறப்பு. புத்தரின் தந்தை சுத்தோதனருக்கு தொத்தோதனர், சக்கோதனர், சுக்லோதனர், அமிதோதனர் என நான்கு சகோதரர்கள். அமிதோதனரின் மகன் பெயர் ஆனந்தர். அவரும் துறவை மேற்கொண்டு, புத்தருடன் வாழ்ந்தார்.

ஆனந்தர் ஒருநாள் நீர் பருக ஆற்றுக்குச் சென்றார். அங்கே, பிராக்ரதி என்கிற பெண், குடத்தில் நீர் நிரப்பிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவளிடம் பருக நீர் கேட்டபோது, தான் தாழ்ந்த சாதி என்று சொல்லி, நீர் தர மறுத்தாள்.

'நான் நீரைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். உன் சாதியைப் பற்றிக் கவலைப்படவில்லை'' என்றார் ஆனந்தர். அதன்பின் அந்தப் பெண், தன் குடத்திலிருந்து அவருக்கு நீர் அளித்தாள்.

பின்னர் வீட்டுக்குத் திரும்பிய அந்தப் பெண், தன் தாய் மாதங்கியிடம் நடந்த விஷயங்களைச் சொல்லி, 'நான் மணம் செய்துகொண்டால், ஆனந்தரையே மணப்பேன்' என்றாள்.

மாதங்கி ஆனந்தர் பற்றி விசாரித்து அறிந்து, துறவியோடு திருமணம் நடக்க சாத்தியமில்லை என்றாள். ஆனால், பிராக்ரதியோ, 'தாயே! உங்களுக்குத்தான் வசியக்கலை தெரியுமே! என் நோக்கத்தை அடைய நீங்கள் ஏன் அதைப் பயன்படுத்தக் கூடாது?' என்று வற்புறுத்தினாள்.

மாதங்கி ஆனந்தரை விருந்துண்ண அழைத்தாள். அப்போது திருமணம் பற்றிப் பேச்செடுத்தாள். ஆனந்தரோ, தாம் எந்தப் பெண்ணையும் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். 'நீங்கள் என் மகளைத் திருமணம் செய்து கொள்ளவில்லையாயின், அவள் தற்கொலை செய்து கொள்வாள். தங்கள்மீது அவள் அத்தனை பற்று கொண்டுள்ளாள்' என்றாள் மாதங்கி. 'மன்னிக்கவும். என்னால் ஏதும் செய்ய இயலாது' என்று உறுதிபடச் சொன்னார் ஆனந்தர். மாதங்கி உள்ளே சென்று தன் மகளிடம், ஆனந்தர் மணக்க மறுத்த விவரத்தைக் கூறினாள்.

அந்தப் பெண் அழுதாள். 'தாயே! உன் வசியக்கலை என்ன ஆயிற்று?' என்று கேட்டாள். 'ததாகதருக்கு எதிராக என் வசியக்கலையைப் பயன்படுத்தி வெல்ல முடியாது' என்றாள் மாதங்கி.

பின்பு அவள், தனது வசியக்கலையைப் பயன்படுத்தி ஆனந்தரின் உடைகளில் தீப்பற்றச் செய்தாள். அப்போதும் ஆனந்தர் மசியவில்லை. திரும்பி வந்த அவர், புத்தரிடம் நடந்தவற்றை விவரித்தார்.

மறுநாள் அந்தப் பெண், ஆனந்தரைத் தேடி ஜேத வனத்துக்கு வந்தாள். அது மட்டுமல்ல, அவர் எங்கு சென்றாலும் அவரைப் பின்தொடர்ந்தாள் அந்தப் பெண். இதையும் ஆனந்தர் புத்தரிடம் தெரிவித்தார்.

புத்தர் அந்தப் பெண்ணை அழைத்துக் காரணம் கேட்டபோது, 'ஆனந்தர் மணமாகாதவர் எனக் கேள்விப்பட்டேன். நானும் திருமணமாகாதவள்தான். அவரை நான் மணக்க விரும்புகிறேன்' என்றாள் அவள்.

புத்தர், 'ஆனந்தர் ஒரு பிக்கு. அவர் தலையில் முடியே இல்லை. நீயும் உன் தலையை முழுமையாக மழித்துக்கொண்டால், என்ன செய்யவேண்டுமோ அதை நான் செய்வேன்' என்று சொன்னார். அவள் தன் தாயிடம் சென்று, இதைச் சொன்னாள்.



மாதங்கி கோபத்துடன், 'நீ அப்படிச் செய்யக்கூடாது! ஆனந்தரைப் போன்ற ஒரு பிக்குவை மணப்பதில் ஏன் அவ்வளவு ஆர்வமாக இருக்கிறாய்? அவரைவிடச் சிறந்த மனிதருக்கு உன்னைத் திருமணம் செய்துவைக்கிறேன்' என்றாள்.

ஆனந்தரோடு மணம் அல்லது மரணம் என்பதில் உறுதியாக இருந்தாள் பிராக்ரதி. வேறு வழியின்றி, முடியை மழித்துக்கொள்ள மகளுக்குச் சம்மதம் தெரிவித்தாள் மாதங்கி. பிராக்ரதி மீண்டும் புத்தரிடம் சென்றாள்.

புத்தர் அவளிடம், 'ஆனந்தரின் உடலில் எந்தப் பகுதியை நீ நேசிக்கிறாய்? எதை நீ போற்றுகிறாய்?' என்று கேட்டார்.

'நான் அவருடைய நாசியை நேசிக்கிறேன்; வாயை நேசிக்கிறேன்; செவியை நேசிக்கிறேன்; குரலை நேசிக்கிறேன்; நடையை நேசிக்கிறேன்' என்றாள் பிராக்ரதி.

'அவருடைய கண்கள் கண்ணீரின் இருப்பிடம்; நாசி, தூசியின் இருப்பிடம்; வாய் உமிழ்நீரின் இருப்பிடம்; செவி, அழுக்கின் இருப்பிடம்; அவருடைய உடலோ மலம், சிறுநீர் ஆகியவற்றின் பாத்திரம்' என்றார் புத்தர்.

பிராக்ரதி ஆழ்ந்து யோசித்தாள். ஆனந்தரை மணந்துகொள்வதில் எந்தப் பயனும் இல்லை என்பதை அறிந்தாள். 'அறியாமை காரணமாக நான் ஆனந்தரைப் பின்தொடர்ந்தேன். இப்போது என் மனம் தெளிவுற்றது. விபத்துக்குள்ளான பிறகு, கடலில் நீந்தி மறு கரையைச் சேர்ந்துவிட்ட ஒரு மாலுமியைப்போல் நான் இப்போது இருக்கிறேன். காப்போர் இல்லாத மூதாட்டிக்குக் காப்பு கிடைத்ததுபோல் உள்ளேன். பார்வை பெற்ற குருடி போல உணர்கிறேன். புத்தர் தம் மெய்யறிவுரைகளால் உறக்கத்தினின்று என்னை எழுப்பிவிட்டார்' என்றாள். பிறகு, பிராக்ரதி பிக்குணியாக மாறினாள்.

இதுபோன்ற ஒரு சம்பவம், குருநானக் வாழ்விலும் நடந்தது. நானக் ஹரித்துவார் சென்றார். அங்கே கங்கைக் கரையில் நின்றுகொண்டு, பலரின் செய்கைகளைக் கவனித்தார். அவர்கள் தங்கள் கைகளை இணைத்து ஆற்றுக்குள் விட்டு, தண்ணீரை எடுத்து இடப் பக்கமாகத் தெளித்துக் கொண்டிருந்தார்கள். 'ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்?' என்று அந்த யாத்ரீகர்களைக் கேட்டதற்கு, 'சொர்க்கத்தில் இருக்கும் எங்கள் முன்னோர்களைச் சென்று இந்தப் புனித நீர் அடைய வேண்டும். அதற்காகத்தான் சூரியன் உதிக்கும் கிழக்குப் பக்கமாகத் தண்ணீரை அள்ளி வீசுகிறோம்' என்றார்கள்.

குருநானக் உடனே தண்ணீரில் இறங்கி, தன் இரு கைகளையும் சேர்த்து தண்ணீரை அள்ளி மேற்கு நோக்கி வீசத் தொடங்கினார். 'அவர் ஏன் இப்படி எதிர்மறையாகச் செய்கிறார்?' என்று எல்லோரும் வியந்தார்கள். அவரிடம் கேட்டதற்கு, 'பஞ்சாபில் இருக்கும் என் பண்ணைக்கு நீர் பாய்ச்சுவதற்காக இப்படிச் செய்கிறேன்' என்றார் அவர்.

'உங்களுக்கென்ன பைத்தியமா? அவ்வளவு தொலைவில் இருக்கும் பண்ணைக்கு இந்த நீர் எப்படிப் போய்ச் சேரும்?' என்று கேலியாகக் கேட்டார்கள் அவர்கள்.

'நீங்கள் கிழக்கு நோக்கி வீசும் நீர், சொர்க்கத்திலிருக்கும் உங்கள் முன்னோர்களின் ஆவியை அடையுமானால், அதைவிட அருகில் இருக்கும் என் பண்ணையை இந்த நீர் அடையாதா என்ன?' என்று கேட்டார் குருநானக்.

ஒருமுறை குருநானக், முல்தான் என்கிற பகுதிக்குச் சென்றார். அப்போது அங்கே 'பிர்' என்கிற ஞானிகள் வசித்து வந்தார்கள். நானக் வருவதை அறிந்ததும், அவர்கள் ஒரு குவளையில் விளிம்பு வரை பாலை நிரப்பி அவருக்குக் கொடுத்தனுப்பினார்கள். அதன் பொருள், 'இந்த நகரம் ஏற்கெனவே புனித மனிதர்களால் நிரம்பி வழிகிறது. இங்கே இன்னொருவருக்கு இடமில்லை' என்பதுதான். குருநானக் அந்தப் பாலில் ஒரு மல்லிகை மலரை வைத்துத் திருப்பி அனுப்பினார். அந்த மலர், பால் துளியும் கீழே வழியாமல் மிதந்தது. அதற்குப் பொருள், 'நான் இந்த நகரத்தில் பூவைப்போல இருப்பேன்; என்னால் உங்களுக்கு எந்தக் குறையும் நேரிடாது' என்பதுதான்.



இந்தச் செய்திக்கு இன்னொரு பொருளும் உண்டு. 'பாத்திரத்தில் வைக்கப்பட்ட பால் திரிந்துவிடுவதைப்போல, உங்கள் அறிவு நாளடைவில் திரிந்துவிடலாம்; ஆனால், எங்கள் ஞானம் மல்லிகை மலர்போல எல்லாத் திசைகளிலும் பரவி, எப்போதும் வாழ்ந்திருக்கும்' என்பதுதான் அது.

'நீல மலைகளுக்கு அப்பால்' என்கிற புத்தகத்தில் பார்சிகளின் வரவைப் பற்றி ஒரு சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈரானிலிருந்து இந்தியாவை நோக்கி அவர்கள் வந்தார்கள். எல்லா மார்க்கங்களுக்கும் இடம் அளிப்பதாக, இந்தியா எப்போதும் இருந்துவந்திருக்கிறது. அவர்கள் வந்தபோது, வடமேற்கு மாகாணத்தைச் சார்ந்த ஒரு மன்னர், "எங்கள் இடம் ஏற்கெனவே நிரம்பியிருக்கிறது; உங்களுக்கு இடமில்லை' என்ற பொருளில் ஒரு குவளை நிறைய பாலை அனுப்பினாராம். உடனே பார்சிகளின் மூத்த குரு, அந்தப் பாலில் சர்க்கரையைக் கலந்து திருப்பி அனுப்பினாராம். அதன் பொருள், 'நாங்கள் உங்கள் இருப்பில் இனிப்பைச் சேர்க்கவே வந்திருக்கிறோம்' என்பதுதான். பாலைச் சுவைத்துப் பார்த்த மன்னன், அவர்களை அனுமதித்தான்.

மகத்தான மனிதர்கள் கோபப்பட்டு சொற்களை உதிர்ப்பதில்லை. அவர்கள் எடுத்த எடுப்பில் எதற்கும் மறுப்பு சொல்வதுமில்லை; எதிர்த்துப் பேசுவதுமில்லை; யாருடைய செய்கையையும் முட்டாள்தனம் என்று கடிந்துகொள்வதும் இல்லை. அவ்வாறு செய்வது எதிர் விளைவையே ஏற்படுத்தும் என்பதை அவர்கள் அறிவார்கள். அதனால் அவர்கள் பிரச்னையைப் பக்குவமாகக் கையாளுகிறார்கள். ஒருவரை அவர் வழியிலேயே சென்று திருத்துவதுதான் சரி என்று நினைக்கிறார்கள்.

'ஆயிரம் எண்ணங்களைவிட ஒரு சொல் மேலானது' என்றார் புத்தர். ஒருவரைப் பற்றி நம் மனத்துக்குள் எவ்வளவு இரக்கப்பட்டாலும், அதை அப்படியே வைத்துக் கொண்டிருந்தால் எதிராளிக்கு அது ஆறுதலை அளிக்காது. மாறாக, ஒரே ஒரு சொல்லை இனிமையாக உதிர்த்தால், அது காயம்பட்டவருக்கு வலியை மட்டுப்படுத்தும். 'ஆயிரம் சொற்களைவிட ஒரு செய்கை மேலானது' என்றும் புத்தர் சொன்னார். காரணம், செய்கைகளின் மூலமாகத்தான் பெரிய உண்மைகளை விளங்கச் செய்யமுடியும். சொற்கள் செய்யாததை செயல்கள் செய்யும். ஆம்... ஆயிரம் ஆறுதல் சொற்களை உதிர்ப்பவனைவிட காயத்துக்கு மருந்து தடவுபவனே மகத்தானவன்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 12

புதிய பாதை

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

பழக்கமான பாதையில் சென்றால், அது சுற்றுப்பயணம். புதிய பாதையில் சென்றால், அது சாகசப்பயணம். அப்போது நாம் பலருக்கு ஒரு புதிய வழியை ஏற்படுத்தித் தருகிறோம்.

நம்மிடம் வழக்கமாகக் கேட்கப்படும் ஒரு புதிர்க் கேள்வி... 'ஒரு துணி உலர இரண்டு மணி நேரமாகும் என்றால், நூறு துணிகள் காய எவ்வளவு நேரமாகும்?'



சிலர் இரண்டை நூறால் பெருக்கி விடை சொல்லுவார்கள். ஏனென்றால், கணிதத்துக்கு அவர்கள் பழக்கப்பட்டிருக் கிறார்கள். சிலர் இரண்டு மணி நேரம் என்பார்கள். அதுவும்கூட அத்தனை துல்லியமான விடை இல்லை. நூறு துணிகளைக் காயப் போடும்போது, நூறாவது துணியை எப்போது காயப் போடுகிறோமோ அதிலிருந்து இரண்டு மணி நேரம் கணக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் (இதில், காயப்போடுவது என்ன வகையான துணி என்பதெல்லாம் தனி!)

அதைப்போலவே, ஒரு கோட்டை வரைந்துவிட்டு, இதை அழிக்காமல் எப்படிச் சிறிதாக்குவது என்று கேட்பதும் நமக்குப் பழக்கமான கேள்வி. உடனே, அந்தக் கோட்டின் பக்கத்தில் அதனினும் பெரிய கோட்டைப் போட்டுவிட்டு, இந்தக் கோடு சின்ன கோடு என்று சொல்லிவிடுவார்கள்.

ஒரு புதிய கேள்வி. ஒரு கோடு வரையப்பட்டுள்ளது. அதை நீளப்படுத்தாமலோ, அதன் அருகில் வேறெந்த கோடும் வரையாமலோ, அதை எப்படிப் பெரிதாக்குவது?

விடை எளிது. வரைபடங்களைப் பார்த்திருக்கலாம். உலக வரைபடத்தை அல்லது இந்திய வரைபடத்தைப் பார்த்தால், அதில் ஒரு மில்லி மீட்டர் எத்தனை கிலோ மீட்டருக்குச் சமம் எனக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும். அதேபோல, வரையப்பட்டிருக்கும் கோட்டுக்குக் கீழே, ஒரு சென்டி மீட்டர் ஒரு கிலோ மீட்டருக்குச் சமம் என்று குறிப்பு எழுதினால் போதும்; கோடு மிகப் பெரிய கோடாகிவிடும்.

குதிரைகளை நேசிக்கும் மன்னர் ஒருவர், ஓர் ஊருக்குச் சென்றிருந்தார். அங்கே மிகச் சிறந்த மரபைச் சார்ந்த இரண்டு குதிரைகளைப் பார்த்தார். அவற்றில் எது சிறந்த குதிரையோ, அதைத் தன்னுடையதாக்கிக்கொள்ள வேண்டும் என்று அவருக்கு விருப்பம்.. எனவே, அந்த இரண்டு குதிரைகளையும் ஓடவைத்து, எது வேகமாக ஓடி, இலக்கை முதலில் எட்டி, பந்தயத்தில் ஜெயிக்கிறதோ, அதையே வாங்க வேண்டும் என்று தன் மந்திரியிடம் சொன்னார்.



பந்தயம் தொடங்கியது. என்ன ஆச்சரியம்..! இரண்டு குதிரைகளும் மெள்ள அன்ன நடை நடந்தனவே தவிர, எதுவும் வேகமாக ஓடவில்லை; ஒன்றை ஒன்று முந்தவில்லை. எனவே, பந்தயம் சலிப்பைத் தருவதாக இருந்தது. விசாரித்துப் பார்த்ததில், அந்தக் குதிரைகளுக்குச் சொந்தக்காரர்கள் இருவருமே தங்கள்

குதிரையை மிகவும் நேசிப்பதாகவும், பந்தயத்தில் ஜெயித்துவிட்டால் வேறு வழியின்றி மன்னருக்குத் தங்கள் குதிரையை தாரைவார்த்துத் தரவேண்டுமே என்பதால், அவர்கள் தங்கள் குதிரையை மெதுவாகச் செலுத்துகிறார்கள் என்றும் மந்திரிக்குத் தெரிந்தது.

உடனே அவர், "பந்தயத்தில் ஒரு சின்ன மாற்றம் செய்கிறேன். இவரின் குதிரையை அவர் செலுத்தட்டும்; அவரது குதிரையை இவர் செலுத்தட்டும்!" என்று உத்தரவிட்டார்.

தனது சொந்த குதிரையை இழந்துவிடக்கூடாது என்கிற அக்கறையோடும் பதைபதைப்போடும் அவர்கள் இருவரும் தாங்கள் சவாரி செய்யும் குதிரையை வேகமாகச் செலுத்துவார்கள் அல்லவா? அப்போது எது நல்ல குதிரை என்பது எளிதில் புலனாகிவிடும் என்பது மந்திரியின் கணக்கு.

இதுபோல, நடைமுறையில் வித்தியாசமாகச் சிந்திப்பது, வெற்றி பெறுவதற்கு அவசியம்!

சில நேரங்களில் நம் செயல்கள், எதிர்பார்த்த பலனைத் தராமல் போவதுண்டு. காரணம், நாம் நினைக்கிற மாதிரியேதான் மற்றவர்களும் சிந்திப்பார்கள் என்று சொல்ல முடியாது.

குழந்தைகள் காப்பகம் ஒன்றில், எல்லாக் குழந்தை களையும் சரியாக மாலை 4 மணிக்கு வந்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டு சென்றுவிடவேண்டும் என்பது விதி. ஆனால், பெற்றோர்களில் சிலர் எப்போதும் தாமதமாகவே வந்தார்கள்.

சரியான நேரத்துக்குள் வந்து அழைத்துச் செல்லாத பெற்றோர்களின் குழந்தைகள் பதற்றம் அடைந்தார்கள். அவர்களைப் பாதுகாப்பாக பெற் றோர்களுடன் அனுப்பும்வரை ஒரு ஆசிரியராவது காத்திருக்கவேண்டிய நிலை. இதனால், அவர் தன் வீட்டுக்குச் செல்வதில் தாமதம்.

காப்பக மையத்தைச் சேர்ந்தவர்கள் இதுகுறித்து யோசித்தார்கள். தாமதமாக வரும் பெற்றோர்களுக்கு அபராதம் விதிப்பது என்று முடிவெடுத்தார்கள். அதன்படி, பத்து நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வருபவர் களுக்கு 30 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என அறிவித்தார்கள்.

ஆனால், அதன்பின் தாமதமாக வருபவர் களின் எண்ணிக்கை குறைவதற்குப் பதிலாக,

இன்னும் அதிகமாயிற்று. காரணம், '30 ரூபாய்தானே... போனால் போகட்டும்' என்று அரை மணி, முக்கால் மணி நேரம்கூட தாமதமாகத் வரத் தொடங்கினார்கள். எனவே, குழந்தைகள் காப்பக மையம் என்ன எதிர்பார்த்ததோ, அது நிகழவில்லை.

சில நேரங்களில், ஊக்கத்தொகை எதிர் விளைவுகளை ஏற்படுத்திவிடும். அதிக சம்பளம் கொடுத்தால் அதிக ஊக்கத்துடன் செயல்படுவார்கள் என்று நினைத்தால், அது தவறு. விடுமுறை நாளில் உழைத்தால், ஒரு நாள் உழைப்புக்கு இரண்டு நாளுக்கான ஊதியம் கிடைக்கும் என்றால், சற்றும் தயங்காமல் விடுமுறை நாட்களிலும் உற்சாகத்துடன் வந்து உழைப்பார்கள் என்று பொதுவாக நாம் நினைக்கிறோம். ஆனால், அவர்களோ ஓய்வையே பெரிதாகக் கருதுவார்கள். வாரத்தில் ஐந்து நாட்கள் உழைப்பதற்குப் பதிலாக மூன்று நாள் உழைத்தால் போதும் என்கிற மனப்பான்மைக்கு வந்துவிடுவார்கள். எனவே, சராசரியான கணிதத்தைப் போட்டுப் பார்த்து, எந்தவொரு முடிவுக்கும் நாம் வர முடியாது. வாழ்க்கை, வித்தியாசமான பாடங்களை நமக்குச் சொல்லித் தருகிறது.

வெற்றிகரமான மளிகைக்கடைக்காரர் ஒருவர் இருந்தார். அவர் கடையில் தரமான பொருட்களையே விற்பனை செய்ததால், தினமும் அமோக விற்பனை! திடீரென ஒருநாள், அவர் கடைக்கு முன்னால் ஒரு பெரிய கட்டடம் உருவாகத் தொடங்கியது. அங்கே, சூப்பர் மார்க்கெட்

வரப்போவதாகத் தெரிந்தது. அது வந்தால், தன்னுடைய வியாபாரம் முற்றிலுமாகப் படுத்துவிடும் என அவர் மிகவும் மனச் சோர்வு அடைந்தார். சூப்பர் மார்க்கெட் வருவதை வெறுத்தார். அது வராது தொலையவேண்டுமே எனப் பிரார்த்தித்தார். இதுகுறித்து, தன்னுடைய குருவைச் சந்தித்து ஆறுதல் பெற எண்ணினார்.

குரு அவரிடம், 'அந்தப் பல்பொருள் அங்காடியை நீ வெறுத்தால், அது உன் வீழ்ச்சியில்தான் முடியும்!' என்றார்.

"அப்படியெனில், நான் என்னதான் செய்ய வேண்டும்?'

'தினமும் காலையில் உன் கடைக்குள் நுழையும்போது, உன் வியாபாரம் செம்மையாக நடக்கவேண்டும் என்று வேண்டிக்கொள். கூடவே, எதிரே இருக்கும் பல்பொருள் அங்காடியும் சிறப்பாக நடக்க வேண்டும் என்று வாழ்த்து!"

'என்னது... என்னுடைய போட்டியாளரை நான் வாழ்த்த வேண்டுமா?' என்று மளிகைக்கடைக்காரர் அதிர்ச்சியுடன் கேட்டார்.

"ஆமாம். எந்த வாழ்த்தும் மீண்டும் உன்னையே வந்தடையும். அதேபோல், வெறுப்பும் திரும்பி வந்து உன்னை அழித்துவிடும்' என்றார் குரு.

ஓராண்டு கழிந்தது. மளிகைக்கடைக்காரர் குருவைத் தேடி வந்து, தன் கடையை மூடிவிட்டதாக அறிவித்தார்.

காரணம் என்ன?

பயப்படும்படியாக எதுவுமில்லை. மகிழ்ச்சியான விஷயம்தான்! மளிகைக்கடைக்காரரே அந்த சூப்பர் மார்க்கெட்டை விலைக்கு வாங்கிவிட்டார்.

வெறுப்பு எப்போதும் அழிவையே அளிக்கவல்லது, வாழ்த்து எப்போதும் நம்மை வாழ வைப்பது என்பதற்கு இந்தக் கதை ஒரு நல்ல உதாரணம். இலக்கியங்களும், ஆன்மிக நூல்களும் நம்மை வெறுப்பிலிருந்து அன்புக்கு அழைத்துச் செல்கின்றன. அழிவிலிருந்து முன்னேற்றத்துக்கு கைப்பிடித்துக் கூட்டிச் செல்கின்றன.

அறிவியலிலும் மாற்றி யோசித்தவர்களே சாதனை புரிந்துள்ளார் கள். மாற்றி யோசிப்பது என்பது, கணிதத்தைப்போல ஒரே விடையைத் தரக்கூடியது அல்ல! வாழ்க்கை யாருக்கும் பிடிபடாத கணிதம். அங்கு எது விடையாகக் கிடைக்கும் என்பதை யாராலும் கணிக்கமுடியாது. முதலில் வெற்றிபெறுபவர்கள் போல் தோற்றமளிப்பவர்கள், பின்னர் காணாமல் போய்விடுவார்கள். கடையிலே சென்று வாங்குகிறபோது அதிகம் பளபளக்கிற துணிதான் முதலில் பல்லை இளிக்கிறது.

காளான்கள் எப்போதும் ஆல மரத்தைவிட சீக்கிரம் வளர்கின்றன!

(இன்னும் மேலே...)

மேலே...உயரே...உச்சியிலே 13

சல்லடையை தண்ணீரால் நிரப்புங்கள்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

வேகமாகச் செல்பவர்கள் விரைவில் இலக்கை அடைவார்கள் என்று நினைக்கிறோம். அது எப்போதும் உண்மையாவது இல்லை. முதலில் நாம் சரியான இலக்கில்தான் செல்கிறோமா என்பது முக்கியம். தவறான பாதையைத் தேர்ந்தெடுத்து எவ்வளவு விரைவாகச் சென்றாலும், நம்மால் இலக்கை அடைய முடியாது.

குறுக்கு வழிகள் எளிதில் வெற்றி பெற வைத்துவிடும் என்பதும் தவறு. சில நேரங்களில் குறுக்கு வழிகளில் செல்லும்போது, பாதையில் இருக்கும் மேடு பள்ளங்களில் வாகனங்கள் ஏறி இறங்கி, பழுதுபட்டு, பயணமே தடைப்பட்டுவிடலாம். எனவே, எப்போதும் ஒரே கருத்தை தூக்கிப்பிடித்துக்கொண்டு வாழ முடியாது. சூழலுக்கு ஏற்ப உத்திகளும் மாறவேண்டும்.

ரஷ்யாவுடன் நெப்போலியன் போர்புரிந்தபோது, அவர்கள் பயன்படுத்திய பின்வாங்கும் உத்தியே நெப்போலியனை பலவீனம் அடையச் செய்தது.

வேகமாகச் செல்வதால் மட்டும் விரைவாக இலக்கை அடைய முடியாது என்பதற்குச் சரித்திரச் சம்பவம் ஒன்றே சாட்சி!

செள யங் என்கிற மிங் நாட்டு ஓவியர் 17-ம் நூற்றாண்டில் சீனத்தில் பிரபலமாக இருந்தார். குளிர்கால மாலை நேரம் ஒன்றில், நகரத்தை நோக்கிய பயணம் மேற்கொண்டார். முக்கியமான புத்தகங்களை எடுத்துவர, ஒரு சிறுவனையும் கூடவே அழைத்துச் சென்றார். ஒரு நதியைக் கடந்து அடுத்த பகுதிக்குச் சென்று, பிறகு நகரத்தை நோக்கி நடக்க வேண்டும்.

படகில் செல்லும்போது, "நகரத்தின் வாயில்கள் மூடப்படுவதற்கு முன் அதை அடையமுடியுமா?" என்று படகோட்டியிடம் கேட்டார்.

"கோட்டைக் கதவுகள் மூடும் முன் செல்ல வேண்டு மென்றால், நீங்கள் வேகமாகச் செல்லக்கூடாது. நிதானமாகத் தான் செல்ல வேண்டும்' என்று மட்டும் சொன்னான் அவன். ஓவியருக்கு அதன் உட்பொருள் விளங்கவில்லை.



அடுத்த கரையில் இறங்கி நடக்கும்போது, சூரியன் மறையத் தொடங்கினான். வழியில் கொள்ளைக்காரர்களிடம் மாட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, செள யங்கும் அந்தச் சிறுவனும் வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள். பிறகு ஓடத் தொடங்கினார்கள். மேடு பள்ளமான நிலப்பரப்பில் ஓடுகையில், அவர்கள் தடுக்கி விழுந்தார்கள். அவர்களின் கைகளில் இருந்த புத்தகங்களையும் தாள்களையும் பிணைத்திருந்த கயிறு அறுந்து, நாலா பக்கங்களிலும் அவை சிதறின. இருட்டில் அவற்றைத் தேடி எடுப்பதற்குள் நேரமாகிவிட்டது. கோட்டைக் கதவுகள்

மூடப்பட்டுவிட்டன. அப்போதுதான் ஓடக்காரன் சொன்னதன் பொருள் அவர்களுக்குப் புரிந்தது. எல்லா நேரங்களிலும் வேகம் வெற்றியைத் தருவதில்லை. விடை தெரியாவிட்டாலும் சாமர்த்தியம் இருந்தால் சுதாரித்துக் கொள்ளலாம் என்பதற்கு, பீர்பாலின் வாழ்க்கை இன்னொரு சான்று.

அக்பருக்கு பீர்பாலிடம் ஏதோ கோபம். அதற்கான விசித்திர தண்டனையாக பீர்பாலிடம் அவர் சற்றுக் கோபமாக, "நம் நாட்டில் எத்தனை காகங்கள் இருக்கின்றன என்று நாளை மாலைக்குள் எனக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று கட்டளையிட்டார். பீர்பால் சிறிதும் கலங்கவில்லை.

மறுநாள் அரசவை கூடியது. "பத்து லட்சத்து இருபத்தையாயிரத்து முந்நூற்று ஐம்பது காகங்கள் உள்ளன" என்று பதில் சொன்னார் பீர்பால். உடனே அக்பர், "இதைவிட அதிகமாக இருந்தால் என்ன செய்வது?" என்று கேட்டார்.

"வேற்று நாட்டு காகங்கள் விருந்தாளியாக இங்கே வந்திருக்க வேண்டும்" என்றார் பீர்பால்.

"ஒருவேளை... குறைவாக இருந்தால்..?"

"நம் நாட்டுக் காகங்கள் வேற்று நாட்டுக்குப் போயிருக்கும்" என்றார் பீர்பால் அலட்டிக் கொள்ளாமல்.

பீர்பாலின் சாமர்த்தியத்தைக் கண்டு அக்பர் சிரித்துவிட்டார். மாற்றி யோசிப்பவர் என்பதால்தான் இன்று பீர்பால் மேலாண்மை வகுப்புகளில் மேற்கோள் காட்டப்படுகிறார்.

ஒரு மன்னருக்கு நான்கு மந்திரிகள் இருந்தார்கள். மன்னர் விதிக்க முற்பட்ட புது வரி ஒன்றை எதிர்த்ததால், அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் நால்வரும் தெருவழியே போகும்போது, ஓர் ஒட்டகத்தின் காலடிச்சுவடுகளைப் பார்த்தார்கள். அதைப் பற்றித் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்த ஒட்டகத்தைப் பறிகொடுத்த சொந்தக்காரன் வந்தான்.

ஒரு மந்திரி அவனிடம், "உன் ஒட்டகத்துக்கு ஒரு கால் ஊனமா?' என்று கேட்க, அவன் "ஆமாம்" என்றான். உடனே இன்னொரு மந்திரி, "வால் குட்டையாக இருக்குமா?' என்று கேட்டார். அவன் அதற்கும் "ஆமாம்" என்றான். மூன்றாமவர், "ஒட்டகத்துக்கு வயிற்றுவலியா?" என்று கேட்டார். உடனே அவன் வியந்து, "ஆமாம்... வயிற்றுவலி உண்டு!" என்றான். நான்காமவர், "உன் ஒட்டகத்துக்கு வலது கண்ணில் பார்வை கிடையாதோ?" என்று கேட்க, அவன் அதற்கும் "ஆமாம்" என்றான்.

பிறகு, "சொல்லுங்கள்... என் ஒட்டகம் எங்கே? பார்த்தீர்களா எங்கேனும்?" என்று கேட்டான். உடனே அவர்கள் நால்வரும், "இல்லை. நாங்கள் உன் ஒட்டகத்தைப் பார்க்கவே இல்லை" என்றார்கள்.

அவன், நேரே மன்னரிடம் சென்று, அவர்கள் தன் ஒட்டகத்தைத் திருடிவிட்டதாகப் புகார் சொன்னான். மன்னர் நால்வரையும் அரசவைக்கு வரவழைத்து, விசாரித்தார். அவர்கள் ஒட்டகத்தைத் தாங்கள் பார்க்கவே இல்லை என்று வாதிட்டார்கள். "நீங்கள் திருடவில்லையெனில், அந்த ஒட்டகத்தைப் பற்றிய விவரங்கள் எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று கேட்டார் மன்னர்.

"தரையில் அதன் மூன்று பாதங்களின் அடிச்சுவடுகள் மட்டுமே இருந்தன. எனவே, ஒரு கால் முடம் என அறிந்தோம். இடது பக்க மரங்களின் இலைகள் மட்டுமே தின்னப் பட்டிருந்ததால், ஒட்டகத்தின் வலது கண்ணில் பார்வைக் கோளாறு எனத் தெரிந்துகொண்டோம். பாதையில் ரத்தத் துளிகள் இருந்தன. ஒட்டகத்தைக் கொசுக்கள் கடித்திருக்க வேண்டும். வால் குட்டையாக இருந்ததால், வாலைக் கொண்டு கொசுக்களை விரட்ட முடியவில்லை. அதேபோல், முன்னிரு அடிகள் தரையில் ஆழமாகப் பதிந்த அளவுக்குப் பின்னிரு அடிகள் படியவில்லை. எனவே, வயிற்றில் வலி இருந்திருக்க வேண்டும் எனக் கண்டுகொண்டோம்" என்று விவரித்தார்கள்.

அவர்களின் புத்திக்கூர்மையைக் கண்டு, மன்னர் அவர்களை மீண்டும் அரசுப் பணியில் சேர்த்துக் கொண்டார்.

தவறு இழைக்காமல் இருக்க அடுத்தவர்களை எச்சரிப்பது ஒருவித விழிப்பு உணர்வு.

ஜென் கதை ஒன்றைப் பார்ப்போம்.

ஜென் மாஸ்டர் ஒருவர், அழகான ஒரு பூந்தொட்டியைச் சீடனிடம் கொடுத்து, அதைப் பத்திரமாக எடுத்துச் செல்லும்படி கூறினார். "இது மிகவும் விலை உயர்ந்தது. நிறைய வேலைப்பாடுகள் கொண்டது. கீழே போட்டுவிடாதே! அப்படிச் செய்தால், கடும் தண்டனை உண்டு. பத்திரமாக எடுத்துச் செல்" என்றார்.

உடனே, சீடனும் சரி என்று தலையாட்டினான். உடனே மாஸ்டர், நறுக்கென்று அவன் தலையில் குட்டினார். வலியில் துடித்துப் போனான். "நான் உடைக்கவே இல்லையே! பிறகு ஏன் குட்டினீர்கள்?" என்று பரிதாபமாகக் கேட்டான். அதற்கு அவர், "நீ உடைத்த பிறகு குட்டி என்ன பிரயோஜனம்?' என்றார்.

அந்தச் சீடன், குட்டு வாங்கியதையும் வலியையும் நினைத்துக் கொண்டே, பத்திரமாகப் பூந்தொட்டியை எடுத்துச் சென்று உரிய இடத்தில் சேர்த்தான்.

ஜென் கதைகள் எப்போதும் வித்தியாசமான சிந்தனைகளை மையமாகக் கொண்டவை. அவற்றுக்கான கேள்விகள், நமது மாற்றி யோசிக்கும் திறனைச் சோதிப்பவை. அவற்றுக்கான விடைகள் அறிவைத் தாண்டிச் சிந்திக்கும்போதுதான் கிடைக்கும்.

இளைஞர்கள் சிலர், தியானத்தில் சிறந்து விளங்கும் ஞானி ஒருவரைச் சந்திக்க வந்தார்கள். அன்றாட வாழ்க்கையின் எதிர் விளைவுகளில் இருந்து விடுதலை அடைவது எப்படி என்று அவரிடம் கேட்டார்கள். தியானம் செய்வதன் மூலம் எப்படி நம் உணர்வுகளை நெறிப்படுத்தலாம் என்பது பற்றி விளக்கினார் அவர்.

முத்தாய்ப்பாக, "நீங்கள் இந்த உணர்தலை தியானத்தின்போது மட்டும் அடையாமல், வாழ்க்கையின் மற்ற கணங்களுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த ஒட்டுமொத்த பயிற்சியே சல்லடையை நீரால் நிரப்புவது போலத்தான்" என்று அறிவுறுத்தினார். கூடவே, அவர்களிடம் ஒரு சல்லடையையும் கோப்பையையும் தந்து, அருகில் உள்ள கடலுக்குச் சென்று, சல்லடையில் நீர் நிரப்பும்படி குறிப்பிட்டார். அனைவரும் விடைபெற்றுக் கிளம்பினார்கள். ந்ஷ்ஷ்

ஒருவன் எரிச்சலுடன், "இது போகாத ஊருக்கு வழியைச் சொல்வது போல! சல்லடையை யாராவது நீரால் நிரப்ப முடியுமா?

நான் ஒரு உபன்யாசத்துக்குச் சென்றாலோ, வழிபட்டாலோ, புனித புத்தகங்களை வாசித்தாலோ, ஏழைக் குழந்தைகளுக்கு உதவினாலோ மேன்மையடைகிறேன். என் குண நலன் கொஞ்சம் முன்னேறுகிறது. அதுதான் சரியான வழி! அதை விட்டுவிட்டு, சல்லடையை நீரால் நிரப்பச் சொல்கிறார். என்ன பைத்தியக்காரத்தனம் இது?'என்று கொந்தளித்தான்.

அந்த இளைஞர்கள் அனைவரும் அமர்ந்து, 'சல்லடையை எப்படி நீரால் நிரப்புவது?' என்று யோசித்தார்கள். உபதேச நூல்களைப் படித்து, அதிலிருந்து இதற்கு ஏதேனும் வழியைக் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்த்தார்கள். ஒன்றும் புலப்பட வில்லை. அவர்களில் ஒருவன் மட்டும் மறுபடியும் ஞானியைச் சந்தித்து, இது குறித்து விளக்கம் பெற முடிவு செய்தான்.

ஞானி அந்த இளைஞனிடம், "சல்லடையை எப்படி நீரால் நிரப்புவாய்?" என்று கேட்டார். "அதுதானே விளங்கவில்லை. கோப்பையில் தண்ணீரை அள்ளி அள்ளி சல்லடைக்குள் ஊற்றினாலும், தங்காதே! கீழே போய்விடுமே?"

"ஆன்மிகப் பயிற்சியும் இப்படிப்பட்டதுதான். நான் என்கிற எண்ணத்துடன் பாறைமீது நின்றுகொண்டு, தெய்விக உணர்வைத் தேட முயன்றால், அது முடியாமல் போய்விடும். நாம் தெய்விகத்தில் இரண்டறக் கலக்க வேண்டும். அது சல்லடையைத் தண்ணீரால் நிரப்புவதுபோல! புரிகிறதா?' என்ற ஞானி, அந்தச் சல்லடையை அவனிடமிருந்து வாங்கிக் கடலுக்குள் எறிந்தார். அது கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீருக்குள் மூழ்கியது.

"இப்போது பார்... சல்லடை தண்ணீரால் நிறைந்திருக்கிறது. அதேபோல், தெய்விகத்திடம் உன்னை முற்றிலுமாக ஒப்படைத்துவிட வேண்டும். முழுவதுமாக ஒப்படைப்பவர்களிடம் அந்தச் சக்தி இறங்கிவிடும்!

நாம் சல்லடையாக இருக்கலாம். ஆனால், வடிகட்டாமல் நம்மை ஒப்படைத்தால், அன்பால் நிறைந்து விடுவோம்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 14

பந்தயத்தில் ஜெயிக்கலாம்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

மாற்றி யோசிப்பவர்கள் தங்களுடைய பலத்தை மட்டுமே முழுதாக நம்புவதில்லை. எதிராளிகள் எப்படிச் சிந்திக்கிறார்கள் என்பதையும் யோசிக்கிறார்கள். 'எதிரி பலசாலி' என்கிற எண்ணத்துடன் போட்டியில் ஈடுபடுபவர்களே முந்த முடிகிறது. எதிரி ஏதேனும் ஒன்றில் பலவீனமாக இருந்தால், அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தயங்காதவர்களே போரில் வெற்றி பெறுகிறார்கள்.

பக்கவாட்டுச் சிந்தனையில் புகழ்பெற்ற புதிர் ஒன்று உண்டு. அண்ணன், தம்பி இருவரும் இரட்டையர்கள். ஆனால், அண்ணனுக்கு இரண்டு நாள் முன்பு பிறந்தநாள் கொண்டாடுகிறான் தம்பி. இது எப்படிச் சாத்தியம்?

விடை எளிது. தாய் நிறை கர்ப்பிணியாகப் படகில் பயணம் செய்கிறாள். சர்வதேச நாள் எல்லையைக் கடப்பதற்கு முன்பு, அந்த நாட்டில் தேதி மார்ச் 1. அன்று, அண்ணன் பிறக்கிறான். எல்லையைக் கடந்த மறு நிமிடமே தம்பி பிறக்கிறான். அந்த நாட்டில் தேதி பிப்ரவரி 28. எனவே, தேதி கிரமப்படி தம்பி பிப்ரவரி 28 அன்றும், அண்ணன் மார்ச் 1-ம் தேதியும் பிறந்ததாகக் கணக்கு. லீப் வருடம் வருகிறபோது தம்பி, அண்ணனுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே பிறந்த நாள் கொண்டாடுவான்.

பொதுவாக, இரட்டைக் குழந்தைகளில் முதலாவதாகப் பிறக்கும் குழந்தையை அண்ணன் என்றும், அடுத்துப் பிறப்பதைத் தம்பி என்றும் நாம் குறிப்பிடுகிறோம். ஆனால், அறிவியல்ரீதியாகப் பார்த்தால், முதலில் கருவாகிற குழந்தை இரண்டாவதாகத்தான் ஜனிக்கும். எனவே, முதலில் தம்பியும், அடுத்து அண்ணனும் பிறக்கிறார்கள் என்பதே அறிவியலாளர்கள் சொல்லும் உண்மை. எனினும், உலகத்துக்கு அறிமுகமாகிற தேதியை வைத்தே நாம் அண்ணனா, தம்பியா என முடிவு செய்கிறோம்.

பந்தயத்தில் வெற்றிபெறுவதென்பது, அதைக் குறித்துப் பல கோணங்களில் சிந்திப்பதில் இருக்கிறது. ஒருவருடைய ஆசை என்ன, விருப்பம் என்ன, எதில் அவா என்பதையெல்லாம் அறிந்துகொண்டு, அதற்கேற்ப நடந்துகொள்கிறவர்கள் பணியில் முன்னேறுகிறார்கள். இது சரியா, தவறா என்பது, வேறு பிரச்னை. மக்களுக்குக் கண்ணில் தெரிவதுதான் மகத்தான சாதனை என எண்ணப்படுகிற காலத்தில் நாம் வாழ்கிறோம். கடவுளுக்குக்கூடப் பிடித்தமானதை வைத்துப் படைக்கிறோம். பிள்ளையாருக்குக் கொழுக்கட்டை, கிருஷ்ணனுக்குச் சீடை, பாடிகாட் முனியப்பனுக்குச் சுருட்டு என்று நமக்குப் பிடித்ததை கடவுள் பெயரைச் சொல்லிப் படைத்து அனுபவிக்கிறோம்.

ஒருவரை வெல்ல அல்லது கவர, அவர்களுக்கு என்ன பலவீனம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். வேகமாக ஓடக்கூடிய புருஷாமிருகத்தை வெல்வதற்கு, அதன் பலவீனத்தை அறிந்துவைத்திருந்தான் பீமன். புருஷாமிருகம் மிகச்சிறந்த சிவ பக்தன். எங்கேயாவது சிவலிங்கத்தைப் பார்த்துவிட்டால், சிவ பூஜையை முடித்துவிட்டுத்தான் அது பயணத்தைத் தொடரும்.

மகாபாரதத்தில் இந்த உத்தியை பீமன் எப்படிக் கையாண்டான் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. தர்மர் ராஜசூய யாகம் செய்யத் தொடங்கினார். யாக சாலையைத் தூய்மை செய்வதற்காக, அவர் பீமனை அழைத்து, 'பீமா! நீ போய் புருஷாமிருகத்தை அழைத்து வா!' என உத்தரவிட்டார்.

புருஷாமிருகம் என்பது, அந்தக் காலத்தில் வாழ்ந்த ஒரு விலங்கு. புதுமனை புகுவிழாவின்போது பசுவையும், கன்றையும் புதுமனையில் உலாவரச் செய்வதைப்போல, யாக சாலையில் புருஷாமிருகத்தை உலா வரச்செய்வார்கள். அதை முன்னிட்டே தர்மர் அந்த மிருகத்தை அழைத்து வருமாறு பீமனிடம் சொன்னார். பீமனும் சென்று புருஷாமிருகத்தை அழைத்தான். அது வருவதற்கு ஒப்புக்கொண்டது. என்றாலும், ஒரு நிபந்தனை விதித்தது.

'பீமா! நான் உன் பின்னால் வருகிறேன். ஆனால், உனக்கும் எனக்கும் எப்போதும் நான்கு காத தூரம் இடைவெளி இருக்க வேண்டும். இந்த இடைவெளி குறைந்தால், நான் உன்னைப் பிடித்துக் கொன்று தின்றுவிடுவேன். இதற்கு நீ ஒப்புக்கொண்டால், உன்னுடன் வருகிறேன்' என்றது. பீமன் ஒப்புக்கொண்டான்.

புருஷாமிருகம், 'அப்படியென்றால் சரி, நீ முன்னால் ஓடு! நீ நான்கு காத தூரம் தாண்டியதும், நான் இங்கிருந்து புறப்படுவேன்' என்றது.

மிருகமாக இருந்தாலும், என்னவொரு நீதி, நியாயம்?!

ஓட்டம் துவங்கியது. வேக வேகமாக ஓடிய பீமனைப் பின்தொடர்ந்து ஓடிய புருஷாமிருகம், ஒரு கட்டத்தில் பீமனை நெருங்கிவிட்டது. உடனே பீமன், புருஷாமிருகத்தின் பார்வையில் படும்படியாக ஒரு சிவலிங்கத்தை வைத்துவிட்டு, மேலே ஓடினான். புருஷாமிருகம் சிவலிங்கத்தைப் பார்த்ததும், தனது வழக்கப்படி சிவபூஜையைச் செய்துவிட்டு, மீண்டும் ஓட்டத்தைத் தொடங்கியது.

அதற்குள் பீமன் வெகு தூரம் ஓடிவிட்டான். எனினும், சற்று நேரத்துக்குள்ளாகவே புருஷாமிருகம் பீமனை நெருங்கிவிட்டது. பீமன் மீண்டும் ஒரு சிவலிங்கத்தை வைத்துவிட்டு, ஓட்டமாய் ஓடினான். புருஷாமிருகமும் சிவ பூஜையை முடித்துவிட்டு, பிறகு ஓட்டத்தைத் தொடர்ந்தது.

இதே உத்தியைக் கையாண்டு வேக வேகமாக ஓடிய பீமன், தனது எல்லைக்குள் ஒரு காலை வைத்தான். அடுத்த கால், எல்லைக்கு வெளியே இருந்தது. புருஷாமிருகம், பீமனின் அந்தக் காலைப் பிடித்துக்கொண்டு, 'பீமா! உன்னைப் பிடித்துவிட்டேன். இனி நீ, எனக்கு உணவாக வேண்டியதுதான்' என்றது.

பீமனோ அதை மறுத்தான். 'இல்லை, இல்லை! என் எல்லைக்குள் நான் காலை வைத்துவிட்டேன்' என்று வாதாடினான்.



முடிவாக, 'தர்மரிடம் போய்ச் சொல்லலாம். தர்மம் தவறாத அவர் என்ன தீர்ப்பு சொல்கிறாரோ, அதன்படி செய்யலாம்' என்று ஏகமனதாக முடிவானது.

பீமனும் புருஷாமிருகமும் தர்மரிடம் போய், நடந்ததைச் சொன்னார்கள். பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த தர்மர், 'பீமா! உன்னுடைய ஒரு கால் புருஷாமிருகத்தின் எல்லையில் இருக்கும்போது, அது உன்னைப் பிடித்துவிட்டதால், உன் உடலில் சரிபாதியை புருஷாமிருகத்திடம் கொடுத்து விடுவதுதான் நியாயம்!' என்று தீர்ப்பு வழங்கினார்.

சொந்தத் தம்பியாக இருந்தாலும், அவனுக்குச் சாதகமாக பாரபட்சமாகத் தீர்ப்பு வழங்காமல், தர்ம நெறிப்படி நடந்துகொண்ட தர்மரை அனைவரும் பாராட்டினார்கள். புருஷா மிருகமும் தர்மரைப் பாராட்டி விட்டு மறைந்தது.

தர்மரின் நடுநிலை தவறாத தன்மை, பீமனின் உயிரைக் காத்தது. தந்திரத்தோடு இயங்குவதற்கு பீமனும், தந்திரம் தோற்கும்போது நியாயமே வெல்லும் என்பதற்கு தர்மரும் உதாரணமாகிறார்கள்.

தெளிவான நோக்கம் இல்லாமல் இலக்கை மட்டும் நிர்ணயித்துக்கொள்பவர்கள், மூடர்களாகவே பயணம் செய் வார்கள் என்பதை விளக்க, கிழக்கத்திய நாடுகளில் நாட்டுப்புறக்கதை ஒன்று உண்டு.

கிராமத்தில் வசித்த முட்டாள் ஆசாமி ஒருவனுக்கு, எப்படியாவது பெரியதொரு நகரத்தைப் பார்க்க வேண்டும், அப்படியான மாநகரில் வசிக்க வேண்டும் என்று ஆசை. ஒருநாள், தைரியத்தைத் திரட்டிக்கொண்டு, குடும்பத்தினரை கிராமத்திலேயே விட்டுவிட்டுக் கிளம்பிவிட்டான்.

முதல்நாள், வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினான். நகரம் இருக்கும் திசையை நோக்கியவாறு தனது காலணிகளை வைத்துவிட்டுப் படுத்தான். அப்போதுதான் பாதை மறக்காமல் இருக்குமாம். இதை அறிந்த அந்தச் சத்திரத்தின் நிர்வாகி, அந்தக் கிராமத்தானிடம் ஒரு வேடிக்கை செய்ய நினைத்து, அவன் தூங்கும்போது காலணிகளை கிராமத்தை நோக்கியவாறு திருப்பி வைத்துவிட்டார்.

மறுநாள், அவன் எழுந்தான். செருப்பின் முனை சுட்டிய திசையை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவன் வந்த இடம் அவனுடைய சொந்த ஊரைப்போலவே இருந்தது. இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும், அவன் வசித்த தெருவைப் போலவே தோன்றியது. அந்தத் தெருவில் அவனது குடும்பத்தைப் போலவே ஒரு குடும்பம் இருக்கிற வீடு தென்பட்டது. அதில் அவனது குடும்பத்து மனிதர்கள் மாதிரியே சிலர் வசிப்பதாக அவனுக்குத் தோன்றியது. தானும் அங்கேயே, அவர்களுடனேயே வாழ்வது என்று முடிவு செய்து, வாழ்நாள் முழுவதும் அங்கேயே கழித்தான்.

பாதுகாப்பான வாழ்க்கையைத் தேடுபவர்கள் செக்குமாடாகவே இருந்துவிடுகிறார்கள். இன்னும் சிலரோ, பயன்படாத சிலவற்றைக் கைகளில் தூக்கிக்கொண்டு அலைகிறார்கள். அவர்களது சிந்தனைகள் காலாவதியானவையாக இருக்கின்றன.

இரண்டு பேர் நடைபயிலச் சென்றார்கள். ஒருவனிடம் குடை இருந்தது. அவர்கள் பாதி வழி சென்றதும், மழை பெய்யத் தொடங்கியது. குடை கொண்டு வராதவன், குடையுடன் இருந்தவனிடம், "உன் குடையை விரியேன்!' என்றான்.

'இதனால் எந்தப் பயனும் இல்லை' என்றான் குடை வைத்திருந்தவன்.

'ஏன் அப்படிச் சொல்கிறாய்? நாம் நனையாமல் இந்தக் குடை காப்பாற்றாதா?'

'இந்தக் குடை முழுவதும் துளைகளாக இருக்கின்றன. சல்லடையைப்போல இருக்கிறது இது!'

'பிறகு, ஏன் இதைக் கொண்டு வந்தாய்?'

இந்தக் கேள்விக்கு, குடை வைத்திருந்தவன் சட்டென்று பதில் சொன்னான்... 'இன்றைக்கு இப்படி மழை பெய்யும் என்று எனக்கு ஜோசியமா தெரியும்?'

நாமும் இப்படித்தான், மழை பெய்யாது என்கிற தைரியத்தில் ஓட்டைச் சிந்தனைகளை தூக்கிக்கொண்டு அலைகிறோம்.

மழை- வெள்ளம் குறித்த எச்சரிக்கைக் கூட்டத்துக்கு வருகிறவர்களில் பலரும் வெள்ளம் வராது, புயல் வராது என்ற எண்ணத்திலேயே இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். வெள்ளம் வரும்போது கைகளைப் பிசைவார்கள். பணம் வருகிறபோதே சேமிக்க வேண்டும். அப்போதுதான் வளமாக வாழலாம். உடல் நன்றாக இருக்கும்போதே உடற்பயிற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நலமாக வாழலாம்.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 15
கிழக்கும் மேற்கும்
வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

***மா**ற்றி யோசிப்பது குறித்த மகாபாரதக் கதைகளைப் பார்த்தோம். அதில், பீமன் புருஷாமிருகத்தின் பலவீனத்தைப் பயன்படுத்தி, வெல்ல முடிந்ததைக் கண்டோம்.*

சில நேர்வுகளில் கிழக்கும் மேற்கும் ஒரே மாதிரி சிந்தித்திருக்கின்றன. ராமாயணத்துக்கும் இலியட்டுக்கும் பொதுப் பண்புகள் நிறைய உண்டு. சீதை, விருப்பத்துக்கு எதிராகக் கடத்தப்பட்டாள்; ஹெலன், அவளாக பாரிஸின் அழகில் மயங்கி ஓடிப்போனாள் என்பது மட்டுமே வித்தியாசம். இலியட்டில் வரும் அகிலஸின் குதிகால்கள் மட்டும் ஸ்டைக்ஸ் நதியில் படாததால், அது அவனது பலவீனமான பகுதியாக இருந்தது. அந்த ரகசியத்தை அறிந்த பாரிஸ், அப்பல்லோ தேவனின் உதவியோடு அதை அம்பால் துளைத்து, மாபெரும் வீரனான அகிலஸைக் கொல்கிறான்.

அதேபோல் துரியோதனனின் வாழ்விலும் ஒரு சம்பவம் உண்டு. காந்தாரி தனது கண்கட்டை அவிழ்த்து, துரியோதனனுடைய உடலில் அவர் பார்வை படுகிற இடமெல்லாம் வச்சிரத்தைப் போல் உறுதியாகும், எந்த ஆயுதத்தாலும் துளைக்கப்படாது என்று வரம் அளிக்கப்படுகிறது. ஆனால், வெட்கத்தில் துரியோதனன் தனது தொடைப்பகுதியை மறைத்ததால், அங்கே காந்தாரியின் பார்வை படவில்லை. எனவே, அந்த இடம் மட்டும் பலவீனமானதாக ஆகி விடுகிறது (கர்ணபரம்பரையாகச் சொல்லப்படும் கதை).

'துரியோதனனின் பலவீனம் அவனது தொடைகள்தான். அங்கே அடித்தால் மட்டுமே அவனை வீழ்த்த முடியும்' என்பதை மிகத் தெளிவாக ஸ்ரீகிருஷ்ணர் அறிந்திருந்தார். குளத்தில் ஒளிந்துகொண்டிருந்த துரியோதனனிடம் பீமன் சண்டைக்குப் போகும் போது, அவர்கள்



இருவரும் சம பலத்தில் மோது கிறார்கள். கிருஷ்ணர் தனது தொடையைத் தட்டிக் காண்பித்து, துரியோதனனின் பலவீனத்தை சூசகமாக உணர்த்த, பீமனும் புரிந்துகொண்டு யுத்த சாஸ்திரத்துக்கு எதிராக துரியோதனனின் தொடையில் அடித்து அவனை வீழ்த்துகிறான்.

கிருஷ்ணருடைய வாழ்க்கைச் சரிதத்தில், வசுதேவருக்குப் பிறக்கும் குழந்தைகள் தன்னு டைய முடிவுக்குக் காரணமாக இருக்கும் என்கிற உண்மையை அறிந்ததும், கம்சன் வசுதேவரைச் சிறையில் பூட்டி, பிறக்கும் எல்லாக் குழந்தைகளையும் ஒவ்வொன்றாகக் கொல்கிறான். தப்பித்தது கிருஷ்ணர் மட்டுமே! அதன் பின்னாலும் ஒரு சுவாரஸ்யம் இருக்கிறது.

தேவகியின் ஆறு குழந்தைகளையும் கம்சன் கொன்றான். ஏழாவதாக ஒரு குழந்தையை கருத்தரித்தாள். அந்தக் குழந்தையை, வசுதேவரின் மற்றொரு மனைவி ரோகிணியின் கருவில் கொண்டுபோய் வைத்தார் இறைவன். இப்படி ஒரு தாயின் கருப்பையில் கருவாகி, இன்னொரு தாயின் கருப்பையில் உருவாகிப் பிறந்தவன் பலராமன். அந்தக் காலத்திலேயே வாடகைத் தாய்மார்கள் பற்றி வியாசர் யோசித்திருக்கிறார்.

எட்டாவது குழந்தையாக கிருஷ்ணர் பிறந்தார். அந்தக் குழந்தையை கோகுலத்துக்கு எடுத்துச் செல்லும்படி இறைவாக்கு சொன்னது. அதன்படி, கோகுலத்தில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த பெண் குழந்தையை வசுதேவர் எடுத்துக்கொண்டு, கிருஷ்ணரை யசோதையின் அருகில் வைத்துவிட்டு வந்துவிடுகிறார். அடுத்த நாள், கம்சன் குழந்தையைக் கொல்ல முயலும்போது கையிலிருந்து நழுவி, ஆகாயத்தில் எட்டுக்கரங்களுடன் காட்சி அளித்தது.

கிருஷ்ணர் பிறந்து, அவர் யதுகுலத்தில் நல்ல முறையில் வளர்ந்து வருகிறார் என்பது தெரிந்து, அவரைக் கொல்ல பல முயற்சிகளை எடுக்கிறான் கம்சன். அவற்றிலெல்லாம் தோற்றுப்போகிறான்.

அதைப்போலவே மோஸஸ், யூதர்களின் விடுதலைக்காகப் பிறக்கவிருக்கிறார் என்கிற தகவலைத் தெரிந்துகொண்டு, எகிப்திய மன்னன், 'எபிரேயப் பெண்களின் பிள்ளைப் பேற்றின்போது ஆண் மகவு பிறந்தால், அதைக் கொன்றுவிடுங்கள்' என்று ஆணையிட்டான்.

லேபி குலப் பெண்ணொருத்தி கருவுற்று, ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். மூன்று மாதங்களாக அதனை மறைத்து வைத்திருந்தாள். அதற்கு மேல் மறைத்துவைக்க முடியாது என்பதால், கோரைப்புல்லால் பேழை ஒன்று செய்து, நைல் நதிக்கரையிலுள்ள நாணல்களில் நடுவே அதை விட்டுவிடுகிறாள். நைல் நதியில் நீராட வந்த பாரோனின் மகள் அந்தப் பேழையைக் கண்டு, எடுத்துப் போகிறாள். கர்ணன் பிறந்தபோது குந்தியும் இப்படித்தான் செய்தாள்.

புதிய ஏற்பாட்டிலும், ஏரோது அரசன் காலத்தில் பெத்லஹேமில் இயேசு பிறந்தார். பெத்லஹேமிலும் அதன் சுற்றுப்புறம் எங்கும் ஆட்களை அனுப்பி, இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொல்லப் பணித்தான் ஏரோது. இயேசு, மேரி, ஜோசப் ஆகியோர் எகிப்துக்குச் சென்றுவிட்டதால், உயிர் தப்பினார்கள்.

ஹோமரின் இலியட் மகா காவியத்தில், தேவர்களில் ஒருசாரார் ட்ராய் நகரத்துக்கும், மற்றொரு சாரார் கிரேக்கத்துக்கும் ஆதரவாக இருப்பார்கள். அதைப்போலவே மகாபாரதத்திலும், அர்ஜுனன் தன் மகன் என்பதால் அவனுக்குச் சாதகமாக நடந்துகொள்கிறான் இந்திரன். கவச குண்டலங்களுடன் பிறந்த கர்ணனை அர்ஜுனனால் தோற்கடிக்கமுடியாது என்பதால், அந்தணன் வடிவத்தில் வந்து, அவற்றை யாசகம் பெறுகிறான். அப்போது, கர்ணனின் தந்தையான சூரிய

பகவான் அவனை எச்சரிக்கிறார். ஆனாலும், கொடுப்பதே உயர்ந்த நெறி என்பதால், அதிலிருந்து வழுவாமல் சத்தியம் செய்ததை கர்ணன் நிறைவேற்றிவிடுகிறான்.

மற்றொரு முறை, பரசுராமரிடம் வில்வித்தை கற்கும்போது, வண்டு ரூபத்தில் வந்து கர்ணனின் உடலைத் துளைத்து, அவன் சத்திரியன் என்பதை பரசுராமருக்கு உணர்த்திவிடுகிறான் இந்திரன். அதைப்போல, தேவர்கள் ஒரு பக்கத்துக்குச் சார்பாக இருப்பது மகாபாரதத்தில் காணப்படுகிறது. கிருஷ்ணர் எதையும் தீவிரமாக யோசித்து, மாற்று ஏற்பாடு செய்வதில் வல்லவர். அவருடைய மாற்று யோசனைதான் பாண்டவர்களின் வெற்றிக்கு முழுக்க முழுக்கக் காரணம். அதற்காக, அவர் போரின் நியமங்களை பல இடங்களில் மீறுகிறார். நியாயம் வெல்ல வேண்டும், தர்மம் ஜெயிக்கவேண்டும் என்பது மட்டுமே அவருடைய கோட்பாடாக இருக்கிறது.

கிருஷ்ணர் ஜெயத்ரதனை வீழ்த்த, சூரியன் அஸ்தமித்ததைப்போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதும், தனது கால் கட்டை விரலால் தேரை அழுத்தி அர்ஜுனனின் உயிரைக் காப்பதும் அவருடைய மாற்று யோசனையின் மாதிரிகள்.

கௌரவர்கள் அனைவரும் இறந்துபோனார்கள் என்கிற செய்தி, திருதராஷ்டிரனின் செவிகளில் ஈயத்தைப் பாய்ச்சுகிறது. புத்திர சோகத்தால், தன் நிலையை அவன் முற்றிலுமாக இழந்திருந்தான். இருப்பினும், போரில் வெற்றி பெற்ற தம்பி மகன் தர்மரைக் கட்டித் தழுவிக்கொண்டான். அதில் கடுகளவுகூட அன்பு இல்லை.

தர்மரைத் தழுவிய பிறகு, திருதராஷ்டிரன் பீமனைக் கட்டித் தழுவ விரும்பினான். அப்போது அவன் மனம், பொறாமை நெருப்பால் தகித்துக் கொண்டிருந்தது. 'என் அத்தனை மகன்களையும் கொன்றவன் பீமன்தானே!' என்று நினைத்தான். "எங்கே பீமன்?' என்று கேட்டவாறே, பீமனைத் தழுவத் தனது கைகளை நீட்டினான்.

கிருஷ்ணருக்கு திருதராஷ்டிரனின் எண்ணம் தெரியும். அவர் உடனே பீமனைத் தடுத்துவிட்டு, இரும்பால் செய்யப்பட்ட ஒரு பதுமையை திருதராஷ்டிரன் முன் நிறுத்தினார்.

கோபத்தின் உச்சத்தில் இருந்த திருதராஷ்டிரன், அது பொம்மை என்று அறியாமல், ஆத்திரத்தோடு அதைத் தனது இரண்டு கைகளாலும் இறுகக் கட்டித்தழுவினான். அந்த இரும்புப் பதுமை சுக்கல் சுக்கலாக நொறுங்கியது. திருதராஷ்டிரனின் வாயிலிருந்து ரத்தம் வழிந்தது. அவன் கீழே விழுந்தான். சஞ்சயன் திருதராஷ்டிரனைத் தூக்கி நிறுத்தி, அவன் கோபத்தை ஆற்றினான். கோபம் நீங்கிய திருதராஷ்டிரன், தன் நிலை உணர்ந்து, தனது செயலுக்கு மிக வருந்தி, 'பீமன் இறந்துபோய் விட்டான்' என்று எண்ணி, மிகுந்த துயரம் அடைந்தான். 'பீமா... பீமா' என்று அரற்றினான். கிருஷ்ணர் நடந்ததை விவரித்து, அவனுக்குப் புத்திமதி கூறினார். அதற்குப் பிறகு நல்ல உள்ளத்தோடு பாண்டவர்களிடம் திருதராஷ்டிரன் நடந்துகொண்டான்.

இப்போது, ஜப்பான் போன்ற நாடுகளில் ஒரு முறை உண்டு. அலுவலகத்தில் எந்த மேலதிகாரி அல்லது சக ஊழியர் மீதாவது கோபம் வந்தால், அருகில் இருக்கும் அறைக்குச் சென்று, அங்கு இருக்கும் பன்ச் பேகில் ஆத்திரம் தீரக் குத்தவேண்டும். அது கோபத்தை தணிக்கிற வழி! சில விநாடிகளில் வன்மம் தீர்ந்ததும், சகஜமாகிவிடுவார்கள் என்கிறது உளவியல்.

இந்தக் கோபத்தைத் தணிக்கும் மந்திரத்தை அப்போதே மகாபாரதம் கூறியிருக்கிறது.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 16

ஆன்மிகத்திலும் மாற்றி யோசியுங்கள்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

புதிய சிந்தனைகளைச் சொல்லுகிறபோது, இறைத் தூதர்களையும் சோதனைக்கு உட்படுத்துவது மனித இயல்பு. எதையும் சந்தேகத்துடன் பார்ப்பது நம்முடைய பழக்கம். ஒருவரை மகத்தானவர் என்று ஒப்புக்கொள்வதற்கு நமக்குத் தயக்கம்.

இயேசுபிரான் மக்களிடையே விழிப்பு உணர்வை, தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டிருந்ததால் தான் அவர்மீது பலர் வெறுப்புடன் இருந்தார்கள். அவர் குறித்த தீய எண்ணத்தை எப்படியாவது ஏற்படுத்திவிட வேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்தார்கள். விபசாரத்தில் ஈடுபட்ட பெண்ணைக் கொண்டுவந்து நிறுத்தி, அவரிடம் கேள்வி கேட்டுத் திக்குமுக்காட வைக்க நினைத்தார்கள். ஆனால், மாற்றி யோசித்த இயேசுபிரான், 'குற்றமில்லாதவர்கள் முதலில் கல்லை எறியட்டும்' என்று சொன்னதும், அவர்கள் தலைகுனிந்து கலைந்து சென்றார்கள்.

இயேசு உருவகக் கதைகளால் பேசினார். அவர் சொன்ன உவமைக் கதை இது. ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டு, தோட்டத் தொழிலாளர்களிடம் அதைக் குத்தகைக்கு விட்டு, நீண்ட காலம் நெடும் பயணம் மேற்கொண்டார். பருவகாலம் வந்ததும், ஒரு பணியாளரை அனுப்பினார். ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் அந்தப் பணியாளரை நையப்புடைத்து வெறுங்கையுடன் அனுப்பினர். மீண்டும், உரிமையாளர் வேறு ஒரு பணியாளரை அனுப்பி வைத்தார். அவர்கள் அவரையும் நையப்புடைத்து, அவமதித்து, வெறுங்கையராக அனுப்பினார்கள். மூன்றாம் முறையாக உரிமையாளர் அனுப்பியவரையும் அவர்கள் காயப்படுத்தி வெளியே தள்ளினர். திராட்சைத் தோட்ட உரிமையாளர் மிகக் கவலையுடன், "இனி நான் என்ன செய்வேன்? என் அன்பு மகனை அனுப்பலாம். ஆனால், அவர்கள் அவனையாவது மதிப்பார்களா?" என்று எண்ணியபடியே, மகனை அனுப்பி வைத்தார். தோட்டத் தொழிலாளர்கள் அவனைக் கண்டதும், "இவன்தான் சொத்துக்கு உரியவன். நாம் இவனைக் கொன்றுபோடுவோம். அதன்பின் சொத்து நம்முடையதாகிவிடும்" என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். அதன்படியே, அவர்கள் அவனைத் திராட்சைத் தோட்டத்துக்கு வெளியே தள்ளிக் கொன்று போட்டார்கள்.

திராட்சைத் தோட்ட உரிமையாளர் அதன்பின் அவர்களை என்னதான் செய்வார்? அவரே நேரில் வந்து, அந்தத் தொழிலாளர்களை நீக்கிவிட்டு, திராட்சைத் தோட்டத்தை வேறு ஆள்களிடம் குத்தகைக்கு விடுவார்...

இயேசு சொன்ன இந்த உவமைக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், "ஐயோ! அப்படி நடக்கக்கூடாது!" என்று பதறினார்கள். ஆனால், இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, "கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று என்று மறைநூலில் எழுதியிருப்பதன் பொருள் என்ன? அந்தக் கல்லின் மேல் விழுகிற எவரும் நொறுங்கிப்போவார். அது யார்மீது விழுமோ அவரும் நசுங்கிப்போவார்' என்றார்.

மறைநூல் அறிஞர்களும் தலைமைக் குருக்களும் தங்களைக் குறித்தே அவர் இந்த உவமையைச் சொன்னார் என்பதை உணர்ந்து கொண்டு, அப்போதே இயேசுவைப் பிடிக்க வழிதேடினார்கள், ஆனால், மக்களுக்கு அஞ்சினார்கள்.

ஆகவே, அவர்கள் இயேசுவைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தார்கள். நேர்மையாளர் போன்று நடித்து, அவரது பேச்சில் குற்றம் காண ஒற்றர்களை அனுப்பிவைத்தார்கள். அவரை ஆளுநரின் ஆட்சி அதிகாரத்திடம் ஒப்புவிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஒற்றர்கள்

அவரிடம், "போதகரே! நீர் சொல்வதும் கற்பிப்பதும் சரியே! நீர் ஆள் பார்த்துச் செயல்படாதவர்; கடவுளின் நெறியை உண்மைக்கு ஏற்பக் கற்பிப்பவர் என்பது எங்களுக்குத் தெரியும். சீஸருக்கு நாம் கப்பம் கட்டுவது முறையா, இல்லையா?" என்று கேட்டார்கள். அவர்களுடைய சூழ்ச்சியை இயேசு தெளிவாகப் புரிந்து கொண்டார். அவர்களிடம் ஒரு நாணயத்தைக் காட்டி, "இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?" என்று கேட்டார். அவர்கள், "சீஸருடையவை' என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, "அப்படியானால் சீஸருக்கு உரியவற்றை சீஸருக்கும், கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் கொடுங்கள்" என்று சொன்னார். மக்கள் முன்னிலையில் இயேசுவின் பேச்சில் அவர்களால் குற்றம் காண இயலவில்லை. அவருடைய மறுமொழியைக் கண்டு, அவர்கள் வியப்புற்றுப் பேசாதிருந்தார்கள்.

நீதியரசர் அக்பர் அலி அவர்கள், நபிகள் நாயகம் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் அமர்ந்திருக்கும்போது, ஒருவர் கூடை நிறைய பேரீச்சம்பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார். உடனே நபிகள், தன் மருமகன் அலி அவர்களிடம் அந்தக் கூடையைக் கொடுத்து, எல்லோருக்கும் பேரீச்சம்பழங்களைப் பிரித்துக் கொடுக்குமாறு கூறினார். அதற்கு அலி அவர்கள், "நீங்கள் கொடுப்பதைப்போலக் கொடுக்கட்டுமா, அல்லது இறைவன் கொடுப்பதைப் போலக் கொடுக்கட்டுமா?' என்று கேட்டார். அதற்கு அண்ணல், "நான் கொடுப்பதைப்போலக் கொடு!' என்று சொன்னார். உடனே அலி, அனை வருக்கும் சமமாக அந்தப் பேரீச்சம்பழங்களைப் பிரித்துக்கொடுத்தார்.

சில நாட்கள் சென்றன. ஒருவர் ஒரு கூடை நிறைய பேரீச்சம்பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தார். அண்ணல் அவர்கள் வழக்கம்போல் அதை அலியிடம் கொடுத்து, பிரித்துக் கொடுக்கும்படி சென்னார்கள்.மறுபடியும், "நீங்கள் பிரித்துக்கொடுப்பதைபோலப் பிரித்துத் தரவேண்டுமா, அல்லது இறைவன் கொடுப்பதைப்போலத் தரவேண்டுமா?" என்று கேட்டார் அலி. "இந்த முறை இறைவன் கொடுப்பதைப்போலத்தான் கொடேன்" என்றார் அண்ணல். உடனே அலி அவர்கள், சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குக் குறைவாகவும், சிலருக்கு ஒன்றும் கொடுக்காமலும் அந்தக் கூடையை காலி செய்தார்.

பழம் கிடைக்காதவர்கள் நபிகளிடம் வந்து புகார் செய்தார்கள். அதற்கு நபிகள் அவர்கள், "இறைவன் அப்படித்தான் செய்வான். சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குக் குறைவாகவும், சிலருக்கு ஒன்றும் கிடைக்காமலும் போய்விடும். அதிகம் கிடைத்தவர்கள் ஒன்றும் கிடைக்காதவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இறைவனின் விருப்பம்" என்று எடுத்துச் சொன்னார். மனித நேய மாண்பை இதைவிட யாரும் அழகாக எடுத்துச் சொல்ல முடியாது.

பல குழுவினரிடமிருக்கும் சண்டையை, மெய்ஞ்ஞானம் பெறுவதற்கு முன்பே, மாற்றி யோசித்ததால் தீர்த்துவைத்தவர் நபிகள் நாயகம். அவருக்கு 35 வயதாகும்போது, மக்காவில் உள்ள 'கஅபா'வை குரோசியர்கள் புதுப்பித்தார்கள். சிதிலம் அடைந்திருந்த அதிலிருந்த சில பொக்கிஷங்களை ஒரு கூட்டம் திருடிச் சென்றதால், அதைப் புதுப்பிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. 'கஅபா'வை புதுப்பிப்பதில் ஒரு நிபந்தனை உண்டு. தூய்மையான வருமானத்தைக்கொண்டே அதைச் செப்பனிட வேண்டும்.

பழைய கட்டடத்தை இடிப்பதில் அனைவருக் கும் தயக்கம் இருந்தது. வலீத் இப்னு முகிரா முதலில் கடப்பாரையை எடுத்து இடிக்க ஆரம் பித்ததும், மக்கள் தயக்கம் விலகி, ஒத்துழைப்பு தந்தார்கள். 'கஅபா'வைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு கோத்திரத்தாரும் ஒவ்வொரு பகுதியைக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தனர். அங்கு, 'ஹஜ்ருல் அஸ்வத்' என்கிற ஒரு கல்

இடம் பெற்றிருந்தது. அது சொர்க் கத்தில் இருந்து வரவழைக்கப்பட்டதாக ஐதீகம். அதற்கான இடம் வந்தபோது, அதை அதற்குரிய இடத்தில் வைப்பது யார் என்ற பிரச்னை எழுந்தது.

வாதம் வலுத்து, ஒரு கட்டத்தில் சண்டை மூளும் அபாயம் ஏற்பட்டது. அப்போது முகிரா, "இப்புனித பள்ளிவாசலில் முதன்முதலாக நுழைபவரை நடுவராக்கி, அவரது ஆலோசனையை அனைவரும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளுங்கள்" என்று கூறினார். இந்தக் கருத்தை அனைவரும் மனமார ஏற்றனர்.

மக்கள் ஆவலுடன் காத்திருக்க, நபி அவர்களே முதலாவதாக நுழைந்தார்கள். அண்ணலைக் கண்ட மக்கள், "இதோ, முகமத் வந்து விட்டார். இவரே நம்பிக்கைக்கு உரியவர்' என்று ஒப்புக்கொண்டனர். அவர்களிடம் விவரத்தைக் கூறினர்.

நபிகள் அனைத்து கோத்திரத்தினருக்கும் திருப்தி ஏற்படவேண்டும் என்று நினைத்தார். ஒரு விரிப்பை வரவழைத்து, அதன் நடுவே ஹஜ்ருல் அஸ்வத்தை வைத்தார். எல்லாக் கோத்திரத்தின் தலைவர்களையும் அழைத்து, விரிப்பின் ஓரங்களைப் பிடித்துத் தூக்குமாறு கூற, அவர்கள் அப்படியே செய்தனர். 'கஅபா'வுக்கு அருகில் அதைக் கொண்டு வரச் சொல்லி, தன் கரத்தால் ஹஜ்ருல் அஸ்வத்தை எடுத்து உரிய இடத்தில் வைத்தார் நபிகள். இது அனைவரும் ஒப்புக்கொண்ட மிக அழகிய தீர்வாக இருந்தது.

நபிகளின் மாற்றுச் சிந்தனையால், கோத்திரத்தாரிடையே ஏற்படவிருந்த பூசல் மிகச் சாமர்த்தியமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

பிட்டுக்கு மண் சுமந்த கதையும் ஒரு மாறுபட்ட சிந்தனையை அடிப்படையாகக் கொண்டதுதான். பரியை நரியாக மாற்றிய சிவபெருமான், அரிமர்த்த பாண்டியன், மாணிக்கவாசகருக்குத் தண்டனை தந்தது குறித்த உண்மை நிலையை உணர்த்த, வைகையாற்றில் வெள்ளம் வரச்செய்கிறார். வெள்ளமோ கரையை உடைத்துக்கொண்டு ஓடுகிறது. மீண்டும் வெள்ளம் வராமல் இருக்க, கரையை உயர்த்தும் பணியில் மக்களை மன்னன் ஈடுபடச் செய்கிறான். பிட்டு தயாரிக்கும் பெண்மணி, தனக்கு வாரிசு இல்லாததால் யாரை தன் சார்பாக வேலைக்கு அனுப்புவது என்று குழம்பி நிற்கும்போது, சிவபெருமான் இளைஞனாக வருகிறார்.

அவர் கூலியாக பிட்டைச் சாப்பிட்டுவிட்டு, மண் சுமப்பதாக ஒத்துக்கொள்கிறார். வேலையைப் பார்வையிட மன்னனே வருகிறான். இளைஞன் வடிவில் வந்த சிவபெருமானோ தாறுமாறாகப் பணியைச் செய்ய, கோபமடைந்த பாண்டிய மன்னன், அவர் முதுகில் பிரம்பால் ஓர் அடி வைக்கிறான். அந்த அடி மன்னன் உட்பட அனைவரின் முதுகிலும் விழுகிறது. மன்னன் உண்மையை அறிந்தான்.

இது வெறும் பொழுதுபோக்குக் கதையல்ல. அரிய உண்மையை வித்தியாசமாக நமக்கு உணர்த்துகிற கதை. நாம் யார் மீது அடித்தாலும், அந்த அடி நம்மையே வந்து அடையும்; நாம் யாருக்கு எந்தத் தீங்கு செய்தாலும், அது நம்மையே வந்து தாக்கும் என்பதையே மிக நேர்த்தியாக இந்தத் திருவிளையாடல் கதை நமக்குத் தெரிவிக்கிறது.

அடுத்தவர்கள்மீது கூச்சப்படாமல் பழியைச் சுமத்துபவர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்பதுதான் ஆன்மிகவாதிகளும் புராணங்களும் நமக்குத் தொடர்ந்து உணர்த்துகிற பாடங்கள்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 17

ஒரே கேள்வி... நான்கு வித பதில்கள்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

ஆன்மிகத்தை போதிப்பவர்கள், தயாரிக்கப்பட்ட விடையைத் தந்து சீடர்கள் தேர்ச்சி பெறுவதை விரும்புவதில்லை. உண்மையைத் தேடுவதுதான் முக்கியமே தவிர, தேர்வுக்குப் படிக்கும் மாணவனைப்போல், விடையைக் கண்டு பிடிப்பது முக்கியம் அல்ல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான தேர்வு நடக்கும் பயிற்சி அது!

யூத மதத்தைச் சார்ந்த ராபி ஷ்வார்ட்ஸின் வீட்டுக் கதவை, 20 வயதுள்ள இளைஞன் ஒருவன் தட்டினான்.

'என் பெயர் ஷீன் கோல்ட்ஸ்டீன். நான் 'தால்மத்' கற்பதற்காக உங்களிடம் வந்திருக்கிறேன்' என்றான்.

'உனக்கு அராமிக் தெரியுமா?' என்று கேட்டார் ராபி.

'தெரியாது!'

'ஹீப்ரூ?'

'தெரியாது!'

'நீ தோராவைப் படித்திருக்கிறாயா?'

'இல்லை. ஆனாலும், கவலைப்படாதீர்கள். நான் தத்துவத்தில் பட்டம் பெற்றிருப்பதுடன், சாக்ரடீஸின் தர்க்கத்திலும் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறேன். தால்மத் பற்றிப் படித்து, என் படிப்பை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்' என்றான் அவன்.

அதற்கு ராபி, 'நல்லது. நீ தால்மத்தைப் படிக்கவேண்டுமென்று விரும்புகிறாய். அது மிகவும் ஆழமான புத்தகம். உனது தர்க்க அறிவைப் பரிசோதிக்க விரும்புகிறேன். அதில் நீ வெற்றிபெற்றால், உனக்கு அதைச் சொல்லித் தருகிறேன்' என்றார்.

இளைஞனும் அதற்கு ஒப்புக்கொண்டான். ராபி இரண்டு விரல்களைக் காட்டி, 'இரண்டு பேர் சிம்னியிலிருந்து இறங்கி வருகிறார்கள். ஒருவரது முகம் சுத்தமாக இருக்கிறது. மற்றவருடைய முகம் அழுக்காக இருக்கிறது. இருவரில், யார் முகத்தைக் கழுவுவார்?' என்று கேட்டார்.

'இதென்ன கேள்வி? அழுக்கான முகத்தோடு இருப்பவரே கழுவுவார்!' என்றான் இளைஞன்.

'தவறு! தூய்மையான முகத்தை உடையவரே கழுவுவார். யோசித்துப் பார்... அழுக்கான முகத்துடன் இருப்பவர் சுத்தமான முகத்துடன் இருப்பவரைப் பார்த்து, தன் முகமும் அதேபோல் சுத்தமாக இருப்பதாகவே நினைத்துக்கொள்வார். சுத்தமாக இருப்பவரோ அழுக்கானவரின் முகத்தைப் பார்த்து, தன் முகமும் அழுக்காக இருப்பதாக நினைத்துக்கொள்வார். எனவே, சுத்தமான முகம் உடையவரே முகத்தைக் கழுவுவார்' என்றார் ராபி.

'மிகவும் சாமர்த்தியமான பதில்தான். இன்னொரு கேள்வி கேளுங்கள். இம்முறை சரியாக பதில் சொல்கிறேன்!' என்றான் இளைஞன்.

ராபி மீண்டும் இரண்டு விரல்களைக் காட்டி, "இரண்டு பேர் சிம்னியிலிருந்து இறங்கி வருகிறார் கள். ஒருவரது முகம் சுத்தமாக இருக்கிறது. மற்றவருடையது அழுக்காக இருக்கிறது. யார் முகத்தைக் கழுவுவார்?' என்று கேட்டார்.

'மீண்டும் அதே கேள்வியா? இதற்கான பதில் ஏற்கெனவே தெரிந்ததுதானே? தூய்மையான முகத்துடன் இருப்பவர்தான் கழுவுவார்' என்றான் இளைஞன்.

'தவறு! இருவருமே தங்கள் முகத்தைக் கழுவுவார்கள். ஒரு சின்ன லாஜிக்கை நினைத்துப் பார். அழுக்கு முகத்துடன் இருப்பவர், சுத்தமான முகத்துடன் இருப்பவரைப் பார்ப்பார். எனவே, தனது முகமும் சுத்தமாக இருப்பதாக நினைப்பார். சுத்தமாக இருப்பவரோ அழுக்கானவரின் முகத்தைப் பார்த்து, தனது முகமும் அழுக்காக இருப்பதாக நினைத்துத் தன் முகத்தைக் கழுவுவார். அதைப் பார்த்து, அழுக்கான முகம் உடையவரும் முகத்தைக் கழுவுவார். எனவே, இருவருமே தங்கள் முகத்தைக் கழுவுவார்கள்!'



'நான் இதை யோசித்துப் பார்க்கவில்லை. எனது தர்க்கத்தில் இப்படியொரு தவறு இருக்கும் என்பது அதிர்ச்சியாக இருக்கிறது. மறுபடியும் என்னைப் பரிசோதியுங்கள்!'

ராபி மீண்டும் இரண்டு விரல்களைக் காட்டி, 'இரண்டு பேர் சிம்னியில் இருந்து இறங்கி வருகிறார்கள். ஒருவரது முகம் சுத்த மாக இருக்கிறது, மற்றவருடையது அழுக்காக இருக்கிறது. யார் முகத்தைக் கழுவுவார்?' என்று கேட்டார்.

"இருவருமே முகத்தைக் கழுவுவார்கள்!'

'தவறு. இருவருமே கழுவமாட்டார்கள். அழுக்கான முகத்துடன் இருப்பவர், சுத்தமான முகம் உள்ளவரைப் பார்த்து தனது முகமும் தூய்மையாக இருக்கிறது என்று நினைத்துக் கொள்வார். சுத்தமான முகம் இருப்பவரோ மற்றவரைப் பார்த்து, தன் முகம் அழுக்காக இருப்பதாக நினைத்துக்கொள்வார். ஆனால், அழுக்கான முகம் உடையவர் தன் முகத்தைக் கழுவாததைப் பார்த்துத் தானும் கழுவமாட்டார். எனவே, இருவருமே முகத்தைக் கழுவ மாட்டார்கள்!' என்றார் ராபி.

இளைஞனான கோல்ட்ஸ்டீன் பதற்றம் அடைந்தான். 'நான் தால்மத்தைக் கற்க வேண்டும். தயவுசெய்து எனக்கு இன்னொரு தேர்வு வையுங்கள்' என்று கேட்டுக்கொண்டான்.

ராபி சிரித்துக்கொண்டே மீண்டும் இரண்டு விரல்களைக் காட்டி, 'இரண்டு பேர் சிம்னியிலிருந்து இறங்கி வருகிறார்கள். ஒருவரது முகம் சுத்தமாக இருக்கிறது, மற்றவருடையது அழுக்காக இருக்கிறது. யார் முகத்தைக் கழுவுவார்?' என்று கேட்டார்.

'இருவருமே கழுவமாட்டார்கள்!'

'தவறு! உங்கள் சாக்ரட்டீஸ் தர்க்கம் தால்மத்தைப் படிக்க போதுமானதாக இல்லை என்பதை உணர முடிகிறதா கோல்ட்ஸ்டீன்? இரண்டு பேர் ஒரே சிம்னியிலிருந்து இறங்கி வரும்போது, ஒருவர் மட்டும் தூய்மையான முகத்துடனும், இன்னொருவர் அழுக்கான முகத்துடனும் எப்படி இருக்க முடியும்? எனவே, கேள்வியே முட்டாள்தனமானது என்று புரியவில்லையா? முட்டாள்தனமான கேள்வி களுக்குப் பதில் சொல்ல முயன்றால், விடைகளும் முட்டாள்தனமாகத்தான் இருக்கும்' என்றார் ராபி.

விஞ்ஞானத்தில் ஒருவர் ஓர் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டால், மற்றவர்கள் அதை மீண்டும் கண்டுபிடிக்கத் தேவையில்லை; பயன்படுத்தினால் போதும். ஆனால், மெய்ஞ்ஞானத்தில் ஒவ்வொரு வருக்கும் தனித்தனிப் பாதைகள் இருக்கின்றன. ஒருவருடையதை இன்னொருவர் ஒருபோதும் பயன்படுத்த முடியாது. சில நேரங் களில் மற்றவர்களுடைய உபதேசங்கள் பயன்படாது. எந்தச் சூழலில் எந்த உபதேசம் என்பதைப் பொறுத்தே, அது முக்கியத் துவம் பெறுகிறது.

புத்தரிடம் நிறையப் பேர் வந்து கேள்விகள் கேட்பார்கள். அவர் ஒருபோதும் தன்னுடைய போதனையை எழுதச் செய்தது இல்லை.

ஒருமுறை, காலை நேரத்தில் ஒருவர் அவரிடம் வந்து, 'கடவுள் இருக்கிறார் அல்லவா?' என்று கேட்டார்.

'இல்லை' என்றார் புத்தர்.

மதியம் ஒருவர் வந்து கேட்டார்: ''கடவுள் இல்லைதானே?'

'இருக்கிறார்' என்று பதில் சொன்னார்.

மாலையில் ஒருவர் வந்து, 'கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை!' என்றார். உடனே புத்தர், 'நீ சரியான கேள்வியைக் கேட்கிறாய்' என்றார்.

புத்தருக்கு அருகிலேயே இருந்த அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர், இந்தப் பதில்களால் குழம்பினார். இரவில் புத்தரிடம் அவர், ''நீங்கள் ஒரே கேள்விக்கு மூன்று விதமான பதில்களைச் சொன்னீர்களே... ஏன்?' என்று கேட்டார்.

'கேள்வி கேட்டவர்களுக்கு ஏற்றவாறு என் பதில் இருந்தது' என்றார் புத்தர்.

'ஆனால், மூன்று கேள்விகளின்போதும் நான் இருந்தேனே, அவற்றைக் கேட்டு எனக்குக் குழப்பம் அல்லவா ஏற்பட்டுவிட்டது' என்றார் அந்தச் சகோதரர்.

'காலையில் வந்தவர், 'கடவுள் இருக்கிறார்' என்று ஏற்கெனவே முடிவு செய்துகொண்டு வந்து, என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்டார். எனவே 'இல்லை' என்று பதில் சொன்னேன். அதனால் அவர் சுயமாகத் தேடத் தொடங்குவார். மதியம் வந்தவர், 'கடவுள் இல்லை' என்று முடிவுசெய்துவிட்டு, என்னிடம் வந்து கேட்டார். அவரிடம் 'இருக்கிறார்' என்று சொன்னால்தான் தானாகத் தேடலைத் தொடங்குவார். மூன்றாம் நபரோ, ஏற்கெனவே தேடிக் கொண்டிருக்கிறார். எனவே, அவர் பார்வை சரியானது என்று விளக்கினேன். கேள்விகளுக்கு நான் பதில் அளிப்பதில்லை. கேள்வி கேட்பவர்களைப் பொறுத்தே பதில் அளிக்கிறேன்" என்று விளக்கினார் புத்தர்.

குருகுலம் என்ற கல்விமுறை இருந்தபோது, மாணவர்களின் தன்மைக்கு ஏற்ப கல்வி போதிக்கப் படும். எல்லோருக்கும் ஒரே பாடத் திட்டம் இல்லை. அவரவரது ஆர்வம், திறமை, தகுதி, சாத்தியக்கூறுகள் போன்றவற்றை குரு ஆராய்ந்து, அவற்றுக்கேற்ப கல்வி போதிப்பார். ஒரே மாதிரியான மாணவர்களை உருவாக்குவதில் அன்றைய குருமார்களுக்கு உடன்பாடு இல்லை.

தேர்வில் சரியாகக் கணக்குப் போடத் தெரிந்தவர்கள் எல்லாம் வாழ்க்கையில் வெல்லுவார்கள் என்று சொல்ல முடியாது. இதற்கு யூத உருவகக்கதை ஒன்று உண்டு.

மோ என்கிற மாணவன் மோசமான படிப்பாளி. அவனுடைய உறவினர் டேனியோ வகுப்பில் எல்லாவற்றிலும் முதல் மதிப்பெண். படிப்பை முடித்ததும், மோ தொட்டதெல்லாம் பொன்னானது! டேனியோ சுமாரான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஒருமுறை, மோ வாங்கிய லாட்டரிச் சீட்டுக்கு முதல் பரிசு கிடைத்தது. அதற்கு மேலும் டேனியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவன் மோவிடம் சென்று, 'இம்முறை நீ எப்படி வென்றாய்?' என்று கேட்டான்.

'சொல்கிறேன். நான் லாட்டரிச் சீட்டு வாங்கு வதற்கு முதல் நாள் இரவு ஒரு கனவு கண்டேன். அதில் தேவதைகள் கூட்டமாக இனிய பாடல் ஒன்றைப் பாடினர். ஏழு வரிசைகளில் எட்டு தேவதைகள். அதன் பிறகு நான் சற்றும் யோசிக்கவில்லை. அடுத்த நாள் கடைக்குச் சென்றேன். ஏழையும் எட்டையும் பெருக்கி, 63 என்கிற எண்ணில் முடிகிற பரிசுச்சீட்டை வாங்கிவிட்டேன். முதல் பரிசும் பெற்றுவிட்டேன்' என்றான் மோ.

'முட்டாளே! ஏழையும் எட்டையும் பெருக் கினால் 63 எப்படி வரும்? 56 அல்லவா வரும்?' என்றான் டேனி.

'அடடே, அப்படியா! சரி, டேனி. இன்னமும் நான் கணக்கில் வீக்தான். உனக்குத்தான் கணக் கில் எல்லாம் தெரிகிறது' என்று சிரித்தான் மோ.

சரியாகக் கணக்குப் போடுவது வாழ்க்கையில் வெற்றிகளைத் தருவதில்லை; தயாரித்த விடைகள் பயனளிப்பதில்லை.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 18

சிங்கத்தையும் சிறு முயல் வெல்லும்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

நம்முடைய நாட்டுப்புறக் கதைகளிலும், வாழ்க்கையின் சிக்கலுக்கு எப்படித் திறமையாக விடைகாண முடியும் என்று சொல்லித்தரப் பட்டிருக்கிறது. ஸ்ரீதேவி என்பது லட்சுமியையும், மூதேவி என்பது துர்தேவதையையும் குறிக்கும். ஸ்ரீதேவி வந்தால் வளம்; மூதேவி வந்தால் அழிவு. ஒருவனிடம் ஸ்ரீதேவி, மூதேவி இருவரும் வந்து, 'எங்களில் யார் அதிக அழகு?' என்று கேட்டார்கள்.

ஒருவரை அழகு என்று சொன்னால், அடுத்தவர் கோபம் கொண்டு தன்னைத் தண்டித்துவிடுவாரே என்று, பதில் சொல்லத் தயங்கினான் அவன். லட்சுமி அவனைவிட்டு அகன்றுவிட்டாலோ, மூதேவி அவனைச் சபித்துவிட்டாலோ அவனால் மீள முடியாதே! இருவரையும் திருப்தி செய்யும்படியாக ஒரு பதிலைச் சொல்ல வேண்டும். அதே நேரம், உண்மையையும் சொல்ல வேண்டும். சற்றே யோசித்தவன், இருவரையும் நடைபயிலச் சொன்னான். பின்பு ஸ்ரீதேவியிடம், 'நீங்கள் வரும்போது அழகு' என்றும், மூதேவியிடம் 'நீங்கள் போகும்போது அழகு' என்றும் சாமர்த்தியமாகச் சொல்லித் தப்பித்தான் என்று நாட்டுப்புறக் கதை ஒன்று உண்டு. சமயோசிதமாகப் பதில் சொல்வதில் அவன் சிறிது பிறழ்ந்திருந்தாலும், அவன் கதை கந்தலாகி இருக்கும்.

கஞ்சர்களைப் பற்றி ஊரகப் பகுதிகளில் ஒரு கதை உண்டு.

யாருக்கும் எதுவும் தராத மகா கஞ்சன் ஒருவன் இருந்தான். ஒருநாள் அவனை வெள்ளம் அடித்துக்கொண்டு போனது. அந்தப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த வெளியூர்க்காரன் ஒருவன் அந்தக் கஞ்சனைக் காப்பாற்றும் உத்தேசத்தில், 'கையைக் கொடு, கையைக் கொடு' என்று கரையில் இருந்து கத்தினான். ஆனால், கஞ்சனோ அதை அலட்சியப்படுத்தி, நீரின் போக்கில் சென்றுகொண்டிருந்தான்.

ஊர்க்காரர்கள் அந்தப் புதியவனிடம், 'அவன்தான் மகா கஞ்சனாயிற்றே! கையைக் கொடு என்று கேட்டால், அவன் எப்படித் தருவான்? என் கையை எடுத்துக் கொள் என்று சொல்; உடனே உன் கையைப் பிடித்துக்கொள்வான்!" என்று சொல்லிச் சிரித்தனர். அதைப் போலவே அந்த வெளியூர்க்காரன், 'என் கையை எடுத்துக் கொள்' என்று சொன்னதும், அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு கரையேறினானாம் கஞ்சன்.

ராமாயணத்தில் யக்ஷினி வாயில் அனுமன் புகுந்து வெளிவந்த கதையைப் பற்றி ஏற்கெனவே பார்த்தோம். அதையொட்டிய சிந்தனை ஒன்று, ஜப்பான் நாட்டு நாட்டுப்புறக் கதையில் உண்டு.

புத்த மடாலயத்தில் இருந்த சிறுவன் ஒருவன் தலைமைத் துறவியிடம் சென்று, "நான் போய் மலைக் கிழங்குகளைப் பறித்துக்கொண்டு வரட்டுமா?' என்று கேட்டான்.

'போகாதே! நீ சென்றால், மலையில் இருக்கும் சூனியக்கிழவிகள் உன்னைப் பிடித்துக் கொள்வார்கள்' என்றார் துறவி.

சிறுவனோ போகவேண்டும் என்பதில் குறியாக இருந்தான்.

'சரி, போய் வா! இந்த மூன்று துண்டுக் காகிதங்களை உன்னோடு எடுத்துச் செல். அவை அதிர்ஷ்டத்தைத் தரும் காகிதங்கள். உனக்கு ஏதேனும் பிரச்னை வந்தால், அவற்றை உதவும்படி கேள்!' என்று, மூன்று காகிதத் துண்டுகளைக் கொடுத்து அவனை அனுப்பிவைத்தார் தலைமைத் துறவி. சிறுவன் உற்சாக மிகுதியில் மலைகளில் சுற்றினான். வெகு தூரம் போனான். நிறைய மலைக் கிழங்குகளைப் பறித்துக் கூடையில் போட்டுக் கொண்டான்.அப்போது ஒரு குரல் கேட்டது... 'சிறுவனே, நீ மடாலயத்திலிருந்து வந்திருக்கிறாயா?'

சிறுவன் திரும்பிப் பார்த்தபோது, அங்கே ஒரு கிழவி நின்றிருந்தாள்.

'என்னிடம் இதைவிடச் செழிப்பான கிழங்குகள் இருக்கின்றன. அவற்றை உனக்குத் தருகிறேன். வா, என்னோடு!' என்று நைச்சியமாகப் பேசி, அந்தச் சிறுவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். அவள் தந்த கிழங்குகள் மிகவும் ருசியாக இருந்தன.

'சரி, நள்ளிரவு ஆகிவிட்டது. இங்கேயே படுத்துத் தூங்கு. காலையில் நீ மடாலயம் செல்லலாம்' என்றாள் கிழவி. அதன்படியே, அந்தச் சிறுவன் தூங்கிப் போனான்.

காலையில் எழுந்து பார்த்தபோதுதான், அந்தக் கிழவியின் உண்மையான கோர முகத்தைக் கண்டான் அந்தச் சிறுவன். அவள் அந்த மலையில் இருக்கும் சூனியக்காரி என்பது அவனுக்குப் புரிந்தது. அவளிடமிருந்து எப்படியாவது தப்பிக்கவேண்டுமென்று நினைத்தான்.

குளிக்க வேண்டும் என்று சொன்னான். 'மிகவும் குளிராக இருக்கிறது. தண்ணீரில் உறைந்து போய்விடுவாய். குளிக்க வேண்டாம்!' என்றாள் அவள். சிறுவனோ குளிக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தான். வேறு வழியின்றி, அவனது இடுப்பில் நீளமான ஒரு கயிற்றைக் கட்டி, அவனைக் குளிக்க அனுப்பினாள் கிழவி. அவளிடமிருந்து கண்மறைவாகச் சென்றதும் அந்தச் சிறுவன் இடுப்புக் கயிற்றை அவிழ்த்து ஒரு தூணில் கட்டிவிட்டு, அதில் துறவி கொடுத்திருந்த அதிர்ஷ்டக் காகிதங்களில் ஒன்றை எடுத்துச் சொருகினான். 'சூனியக்காரி கூப்பிடும்போது, எனக்குப் பதிலாக நீ குரல் கொடு!' என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து தப்பித்து வேகமாக ஓடினான்.

சூனியக்காரி பானையில் இருக்கும் நீர் நன்றாகக் கொதித்ததும், சமைப்பதற்கு உதவி செய்ய வரச் சொல்லி அவனை அழைத்தாள். அந்தக் காகிதமோ சிறுவன் குரலில், 'குளித்துக்கொண்டு இருக்கிறேன். கொஞ்சம் பொறு, வருகிறேன்!' என்று பதில் அளித்தது. இப்படியே இரண்டு மூன்று முறை நடந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துப் பொறுமை இழந்த அவள், நேரே குளிக்கும் இடத்துக்குச் சென்றாள். சிறுவன் தப்பிச் சென்றதை அறிந்து, ஆத்திரமானாள். 'என்னை ஏமாற்றி ஓடிவிட்ட அவனை விரைந்து சென்று பிடிப்பேன்' என்று சொல்லித் தேடி, ஓடினாள். அவனைக் கண்டு துரத்த ஆரம்பித்தாள். அந்தச் சிறுவன் தன்னிடமிருந்த இன்னொரு காகிதத்தை வீசியெறிந்து, 'நீ பெரிய மணல் குன்றாக மாறு!' என்றான். உடனே கிழவியின் எதிரில் உயரமான மணற்குன்று தோன்றியது. கிழவி அதில் சிரமப்பட்டு ஏறி, இறங்கி வருவதற்குள், அந்தச் சிறுவன் மடாலயத்தை நெருங்கிவிட்டான். அவளும் நெருங்கிவிட, மூன்றாவது காகிதத்தை எறிந்து, 'நீ ஆறாக மாறு' என்றான் சிறுவன். கிழவி அந்த ஆற்றைக் கடந்து வருவதற்குள், அவன் மடாலயத்தை அடைந்துவிட்டான்.

''காப்பாற்றுங்கள், குருவே! சூனியக்காரி என்னைத் துரத்தி வருகிறாள்' என்று துறவியிடம் தஞ்சம் புகுந்தான் அந்தச் சிறுவன். அவனை அங்கிருந்த ஓர் அலமாரிக்குள் ஒளிந்துகொள்ளச் சொன்னார் துறவி.

'எங்கே அவன், நான் உடனே அவனைத் தின்னவேண்டும்' என்று கத்திக்கொண்டே வந்தாள் சூனியக்காரி.

'மலைக்கிழங்கு பறித்து வருவதாகச் சொல்லி நேற்றே சென்றவன், இன்னமும் திரும்பி வரவில்லையே!' என்று சொல்லிக் கொண்டே, அரிசி உருண்டைகளை வறுக்கத் தொடங்கினார் துறவி. கிழவிக்கு அந்த மணம் பிடித்திருந்தது.

'எனக்கு அரிசி கேக்குகளைக் கொடுங்கள்' என்று நாக்கை சப்புக் கொட்டியபடி கேட்டாள் அவள்.

'நீ எவ்வளவு கேட்டாலும் தருகிறேன். அதற்கு முன்னால், உன்னுடைய மாயாஜால சக்தியை நான் பரிசோதிக்க வேண்டுமே!' என்றார் துறவி.

'என்ன செய்ய வேண்டும், சொல்! செய்து காண்பிக்கிறேன்.'

'உன்னால் எவ்வளவு உயரமாக ஆக முடியும் என்று காண்பி!' என்றார் துறவி. அவள் வானத்தைத் தொடும் அளவுக்கு விசுவரூபமெடுத்து நின்றாள்.

'ஆகா, அற்புதம்! சரி, எவ்வளவு சிறியதாக ஆகமுடியுமோ, ஆகிக் காட்டு, பார்க்கலாம்!'

அவள் சிறிய மொச்சைக் கொட்டை போன்று வடிவெடுத்தாள். உடனே, அந்தத் துறவி அவளைப் பிடித்து, இரண்டு அரிசி கேக்குகளுக்கு இடையே வைத்துப் பற்களால் கடித்து, அவளைச் சாகடித்தார். மாற்றிச் சிந்தித்ததாலேயே, மாயாஜாலங்கள் தெரிந்துவைத்திருந்த அவளை எளிதில் வெற்றிகொண்டார் அந்தத் துறவி. இந்த ஜப்பானிய நாட்டுப்புறக் கதை சிந்தனைக்குரியது.

நாட்டுப்புறக் கதைகளில் எப்போதும் நியாயவான்களே வெற்றிபெறுவதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும். அந்தக் கதைகளில் முற்றிலும் வித்தியாசமான முடிவு, நச்சென்று வெளிப்படும். மாபெரும் இலக்கியங்களில்கூடக் காணக் கிடைக்காத சில நுட்பங்கள் நாட்டுப்புறக் கதைகளில் காணப்படுவதுண்டு. நாம் இன்று கொண்டாடும் இதிகாசங்கள்கூட ஒருகாலத்தில் நாட்டுப்புறக் கதைகளாகவே உலவிவந்தன. பின்னரே அவை எழுதப்பட்டு, இதிகாசமாக ஆக்கம் பெற்றன. மேற்கத்திய நாட்டுப்புறக் கதைகளில், ஒவ்வொரு விலங்கும் ஏன் அப்படித் தோற்றம் அளிக்கின்றன என்பது பற்றி புனைவியல் உண்டு.

காட்டுப் பூனைகளுக்கு உடலின் அடிப்பாகத்தில் ஏன் வெள்ளை நிறப் புள்ளிகளாக உள்ளன என்பதற்கு ஒரு கதை உண்டு.

ஒரு காட்டுப் பூனை, காட்டு முயலைத் துரத்திக்கொண்டு சென்றது. பிடிபடுகிற நேரத்தில், மரத்திலிருந்த பொந்துக்குள் ஓடி ஒளிந்துகொண்டது முயல். காட்டுப் பூனை அதன் முன்னேயே அமர்ந்து, முயல் வெளியே வரும்வரை காத்திருப்பது என்று முடிவு செய்தது. எப்படியும் முயலுக்குப் பசியெடுக்கும், அது வெளியே வந்துதான் தீரவேண்டும், அப்போது பிடித்துக்கொள்ளலாம் என்று தீர்மானமாக இருந்தது பூனை. ஆனால், வெளியே போனால் பூனை தன்னைக் கொன்றுவிடும் என்பது முயலுக்குத் தெரிந்தே இருந்தது.

ஆனாலும், எவ்வளவு நேரம்தான் பொந்துக்குள்ளேயே இருப்பது? எனவே, அது ஒரு யோசனை செய்தது. 'ஏ பூனையே! நான் வெளியே வருகிறேன். உனக்கு உணவாகவும் சம்மதிக்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை! இந்த மரத்துக்கு முன்னால் நெருப்பு மூட்டு. நான்

அந்த நெருப்பில் குதித்து வறுபடுகிறேன். அதன்பின் என்னை நீ உணவாகப் புசி! என்னைப் பச்சையாக உண்பதை நான் விரும்பவில்லை' என்றது முயல்.

காட்டுப் பூனையும் 'இதுவும் நல்ல யோசனையாக இருக்கே' என்று எண்ணி, தீ மூட்டியது. நெருப்பு நன்றாகக் கனன்று எரியத் தொடங்கியதும், முயல் திடீரென பொந்திலிருந்து பாய்ந்து, அந்த நெருப்புத் துண்டுகள் பூனைமீது தெறிக்குமாறு சிதற அடித்துவிட்டு, குதித்துத் தப்பி ஓடிவிட்டது. அதனால், பூனையின் நெஞ்சுப் பகுதியிலிருந்த முடிகள் கருகி, திட்டுத் திட்டாக வெள்ளையாகிவிட்டது. காட்டுப் பூனைகள் வெள்ளைப் புள்ளிகளுடன் இருப்பதற்கான காரணக் கதை இதுதான்.

பலவீனமானவர்கள் தப்பிப்பது குறித்தே நாட்டுப்புறக் கதைகள் பேசுகின்றன. பலமுள்ளவர்கள் ஜெயிப்பதில் எந்த அதிசயமும் இல்லை. அப்பாவிகள் வெற்றி பெறுவதற்கு புத்திசாலித்தனமும், தந்திரமும் தேவைப்படுகின்றன. வழக்கமான போக்கில் யோசித்தால் அதற்கு விடை கிடைக்காது. முற்றிலும் வேறுபட்ட கோணத்தோடு அணுகினால், எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களையும் வெற்றி பெற்றுவிட முடியும் என்பதை விளக்குவதுதான், முயல் கிணற்றில் தெரியும் சிங்கத்தின் பிம்பத்தை வைத்து அதை ஏமாற்றிக் கொன்ற கதை.

சக்தி மட்டும் போதாது; சாதுர்யமும் வேண்டும். அப்போதுதான் நாம் ஆபத்துக்களை எதிர்கொண்டு வெற்றிபெற முடியும். மாற்றி யோசித்தால் மட்டுமே இது சாத்தியம்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 19

தந்திரத்தையும் வெல்லலாம்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

பாலைவன வாழ்க்கை துயரமானது. தற்சமயம் அங்கு தாராளமாக பெட்ரோலியம் கிடைப்பதால், பொருளாதார நிலையில் கடல்நீரையும் குடிநீராக மாற்றிக்கொள்ளும் அளவுக்கு வசதி வாய்ப்புகள் அதிகம். ஆனால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மிகக் கடுமையான வாழ்க்கை அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் துயரமான சூழலிலும் வித்தியாசமான சிந்தனைகள் அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தின.

பார்வையற்ற யாசகன் ஒருவன் பிச்சை கேட்டவாறு தெருவில் சென்றுகொண்டிருந்தான். அப்போது, அவன் தட்டில் முழு ரொட்டி ஒன்று விழுந்தது. 'கடவுள் உங்களுக்கு நன்மைகள் செய்வாராக. உங்களுக்கு அவருடைய ஆசிகள் கிடைப்பதாக. நீங்கள் உங்கள் நாட்டுக் குப் பாதுகாப்பாகவும் ஆரோக்கியத்துடனும் திரும்பிச்செல்ல அல்லா உதவுவாராக!' என்றான் அந்த யாசகன்.

'நான் இந்தப் பகுதிக்கு அந்நியன் என்பதை எப்படி நீங்கள் அறிந்தீர்கள்?' என்று வியப்புடன் கேட்டார், ரொட்டி தர்மம் செய்தவர்.

'நான் இந்த நகரத்தில் இருபது வருடங்களாக யாசகம் கேட்டு வருகிறேன். ஒருமுறைகூட யாரும் முழு ரொட்டியைத் தந்ததில்லை' என்றான் யாசகன்.

முழு ரொட்டியைப் போடுகிறவன் கட்டாயம் வேறு தேசத்தைச் சேர்ந்தவனாகத்தான் இருக்க வேண்டும் என்று, எவ்வளவு அகப் பார்வையோடு அவன் சிந்தித்திருக்கிறான், பாருங்கள்!

மாற்றி யோசித்தால், தந்திரமாகச் சிந்திப்பவர்களையும் தோற்கடித்து விடலாம் என்பதற்கு, அரேபியக்கதை ஒன்று உண்டு.

அரேபியர்கள் எப்போதும் இசையையும் கவிதைகளையும் நேசிப்பவர்கள். மன்னர்களைப் புகழ்ந்து பாடல்களை இயற்றினால், பரிசுகள் பெறலாம் என்பது தெரிந்ததுதான். ஓர் அரசன் மிகச் சிறந்த ஞாபகசக்தி உடையவன்; அதோடு கூர்மையான அறிவும் நிரம்பப் பெற்றவன். ஒரு கவிதையை ஒருமுறை கேட்டால் போதும்; அதை வரி மாறாமல், வார்த்தை மாறாமல் அப்படியே திருப்பிச்சொல்ல அவனால் முடியும். அவன் சபையில் விதூஷகன் ஒருவன் இருந்தான். அவனும் நினைவாற்றலில் சிறந்தவன்தான். எதையும் இரண்டு முறை கேட்டால், அப்படியே திருப்பிச் சொல்லும் சக்தி உடையவன் அவன். அந்த அவையில் அடிமைப்பெண் ஒருத்தி இருந்தாள். மூன்று முறை கேட்டால், அதை அட்சரம் பிசகாமல் திருப்பிச் சொல்வாள் அவள்.

அந்த அரசன் ஓர் அற்பன். எந்தப் புலவன் வந்து மன்னனைப் புகழ்ந்து பாடினாலும், 'நீ பாடவிருக்கும் பாடல் இதுவரை நான் கேள்விப்படாத, உன்னுடைய சொந்தப் பாடலாக இருந்தால், அதன் எடைக்குச் சமமாக தங்கக் காசுகள் தருவேன்' என்பான்.

வந்த புலவனும், தன் கவிதையைப் படிப்பான். ஒருமுறை கேட்டதுமே மன்னனுக்குத்தான் அது மனப்பாடம் ஆகிவிடுமே! எனவே, ஏதோ ஒரு பெயரைக் குறிப்பிட்டு, 'அந்தக் கவிதை அவர் எழுதியது; நான் ஏற்கெனவே படித்திருக்கிறேன்' என்று சொல்லி, அதை அப்படியே மளமளவென்று ஒப்பிப்பான். புலவன், "இல்லை. இந்தக் கவிதை என் சொந்தக் கவிதை" என்று சாதித்தால், 'கிடையவே கிடையாது! இந்தக் கவிதை என் விதூஷகனுக்குக்கூடத் தெரியும்' என்று

சொல்லி, விதூஷகனைப் பாடச்சொல்வான் மன்னன். புலவன் பாடி ஒருமுறை, மன்னர் திரும்பச் சொல்லி ஒருமுறை என விதூஷகன் அந்தக் கவிதையை இரண்டு முறை உன்னிப்பாகக் கவனித்திருப்பதால், அவனும் அதை வரி மாறாமல் சொல்லுவான். அப்போதும், "இருக்க முடியாது! இந்தக் கவிதையை நான் நேற்றுத்தான் புனைந்தேன்!" என்று புலவன் அழாக்குறையாகச் சொன்னால், 'இல்லை. நீ பொய் சொல்கிறாய். என்னுடைய அடிமைப்பெண்கூட இந்தக் கவிதையைச் சொல்வாள்' என்று சொல்லி, அவளைச் சொல்லச் சொல்லுவான் அரசன். மூன்று முறை கேட்டதால், அவளும் வார்த்தை பிசகாமல் அந்தக் கவிதையைத் திரும்பச் சொல்ல, புலவன் குழம்பிப்போய் சித்தம் கலங்கி, புத்திசுவாதீனத்தை இழக்கும் அளவுக்கு வந்துவிடுவான்.

'அல் அஸ்மாய்' என்கிற கவிஞனுக்கு மட்டும் இந்த உண்மை தெரியும். அரசனுடைய நினைவாற்றல் குறித்தும் தெரியும். எனவே, இதுவரை யாரும் உபயோகிக்காத வித்தியாசமான சொற்களைப் பயன்படுத்தி, அவர் ஒரு கவிதையைத் தயார் செய்தார். அதை அரசனோ, விதூஷகனோ, அடிமைப்பெண்ணோ மனப்பாடம் செய்து திரும்பச்சொல்லவே முடியாது என்கிற அளவில் மிகக் கடினமான ஒரு கவிதையை உருவாக்கினார் அவர். பின்பு, ஒரு வழிப்போக்கரைப்போல மாறுவேடம் பூண்டு, அரசவைக்குச் சென்றார்.

'மன்னரே, நான் உங்களைப் புகழ்ந்து ஒரு கவிதை தயாரித்திருக்கிறேன். உங்களுக்கு படித்துக்காட்ட விரும்புகிறேன்'

'புலவரே! என் நிபந்தனை உங்களுக்குத் தெரியும் அல்லவா?'

'நன்றாகத் தெரியும். அந்த நிபந்தனைக்கு நான் ஒப்புக் கொள்கிறேன்' என்றவர், அந்தப் பாடலைப் பாடிக் காண்பித்தார். கடினமான பதங்களுடன்கூடிய, கரடுமுரடான வரிகள் கொண்ட அந்தப் பாடலைக் கேட்ட மன்னனால், திருப்பிச் சொல்ல முடியவில்லை. மன்னரே தடுமாறியதால், விதூஷகனும் மலங்க மலங்க விழித்தான். அடிமைப்பெண்ணாலும் எதுவும் செய்ய முடியவில்லை. மன்னன் தோல்வியை ஒப்புக்கொண்டான்.

'புலவரே, இது உங்கள் சொந்தப்பாடல் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. நான் சொன்னதுபோல் உங்களுக்குத் தங்கக் காசுகள் பரிசு தருகிறேன். நீங்கள் பாடல் எழுதிய அந்த ஏட்டைத் தாருங்கள். எங்கள் பொருளாளர் அதன் எடைக்குத் தகுந்தவாறு உங்களுக்குத் தங்கக் காசுகள் தருவார்' என்றான் மன்னன்.

'மன்னரே, இதை நான் காகிதத்தில் எழுத வில்லை. என் வீட்டில் உள்ள பளிங்குத் தூணில்தான் இந்தக் கவிதையைச் செதுக்கி வைத்தேன். அதை இங்கே கொண்டு வந்துள்ளேன்" என்று சொல்லி, அரண்மனை வாயிலுக்குச் சென்று குரல் கொடுக்க, மிகப் பெரிய பளிங்குத் தூண் ஒன்றை நான்கு பேர் தூக்கி வந்து, அரசவையில் மன்னன் முன் நிறுத்தினர்.

வேறு வழியின்றி, அந்தப் பளிங்குத் தூண் எடை போடப்பட்டு, மன்னனின் கஜானாவிலிருந்து அத்தனை தங்கமும் காலியாகியும், இன்னும் போதாத நிலைமை ஏற்பட்டது. மன்னன் தன் அற்பத்தனத்துக்குத் தலைகுனிந்து வருந்த, அல் அஸ்மாய் பெரிய மனத்துடன் சிறிதளவே தங்கத்தை எடுத்துக்கொண்டு, மன்னனிடமிருந்து விடைபெற்றார்.

துருக்கிய ஆட்சி உச்சத்திலிருந்த காலம். துருக்கியின் சுல்தான், ஐரோப்பாவில் இருக்கும் ஒரு நாட்டுக்கு சுற்றுப்பயணம் சென்றுவர விரும்பினார். அதுகுறித்து வசீரிடம் (முக்கிய அமைச்சர்) தெரிவித்தார். வசீருக்கோ கவலை வந்துவிட்டது.

'மேன்மையானவரே! தங்கள் பயணம் நிச்சயம் சர்வதேச பிரச்னையில் கொண்டுபோய் விட்டு விடும்' என்று எச்சரித்தார் வசீர்.

'ஏன்?'

'நம் நாட்டில் பாரம்பரியமான விதி ஒன்று உண்டு. துருக்கிய சுல்தான் எந்த மண்ணை மிதிக்கிறாரோ, அது துருக்கியின் ஆளுகைக்குள் வந்துவிடும். எனவே, இந்த விதியை நடைமுறைப்படுத்தினால் எல்லைப்பிரச்னையோ, போரோ ஏற்பட வாய்ப்பு உண்டு' என்று தயங்கியவாறே தெரிவித்தார் வசீர்.

ஆனால், சுல்தான் விடுவதாக இல்லை. 'நான் இந்தப் பயணத்தை மேற்கொள்வது என்று முடிவுசெய்துவிட்டேன். எக்காரணம் கொண்டும் என் திட்டத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. எனவே, எந்த சர்வதேசப் பிரச்னையும் இதனால் ஏற்படாத வண்ணம் நான் பயணம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்க!' என்று ஆணையிட்டார் சுல்தான்.

வசீர் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பினார். தலைமை நீதிபதி ஷேக்அல் இஸ்லாம் அவர்களிடம் இதுகுறித்து கலந்தாலோசிக்க முடிவு செய்தார்.

தலைமை நீதிபதி நிறையப் படித்தவர். அதிக ஞானம் உள்ளவர். எந்தப் பிரச்னைக்கும் சாதுரியமாகத் தீர்வு காண்பதில் வல்லவர்.

'பழங்கால விதியை மீறுவதோ, மாற்றுவதோ நடக்காத காரியம். நம் சுல்தான் எந்த மண்ணை மிதிக்கிறாரோ, அது துருக்கிய எல்லைக்குட் பட்டதாகிவிடும் என்பது சட்டபூர்வமான ஒன்று. ஆனால், இந்த விதியை உடைக்காமல் தவிர்க்க ஒரு வழி உண்டு. இந்தப் பயணத்தின்போது சுல்தான் அணிவதற்காக விசேஷமான காலணிகளைச் செய்ய வேண்டும். அந்தக் காலணிக்கு இரண்டு அடிப்பகுதிகள் இருக்க வேண்டும். அந்த இரண்டு அடிப்பகுதிகளுக்கு நடுவில் உள்ள காலி இடத்தில் துருக்கிய நாட்டு மண்ணை நிரப்ப வேண்டும். அப்படிச் செய்தால், நம் சுல்தான் எந்த வெளிநாட்டில் பயணம் செய்தாலும் அவர் உண்மையில் துருக்கிய மண்ணையே மிதித்தவர் ஆவார். எனவே, வேறொரு நாட்டின் எல்லையை நம்முடையதாக்கிக்கொள்கிற சட்டபூர்வமான பிரச்னையும் ஏற்பட வாய்ப்பில்லை' என்று ஆலோசனை சொன்னார் அவர்.

மனிதர்கள் எப்படி ஒன்றும் தெரியாதவர்கள் போல நடிக்கிறார்கள் என்பதை விளக்குவதற்கும் அரேபியக்கதை ஒன்று உண்டு.

ஒருவன் கோதுமையை மாவாக அரைப்பதற்கு, மாவு மில்லில் காத்திருந்தான். வரிசையாக மக்கள் நின்றிருந்தார்கள். இவன் தன் பக்கத்தில் இருப்பவனின் பையிலிருந்து நைஸாக கோதுமையை அள்ளி, அவ்வப்போது தன்னுடைய பையில் போட்டுக்கொண்டிருந்தான். இதை யாரும் கவனிக்கவில்லை என்று நினைத்து, தொடர்ந்து நிதானமாக இப்படிச் செய்துகொண்டிருந்தான் அவன். ஆனால், அவனது இந்தச் செயலை ஆரம்பத்திலிருந்தே பார்த்துக்கொண்டு இருந்தார் மாவு மில்காரர்.

ஒருகட்டத்தில் மிக எரிச்சலுற்று, 'என்ன செய்கிறாய்?' என்று அதட்டினார்.

இந்தத் திருட்டுப்பேர்வழியோ, 'மன்னிக்கவும். நான் ஒரு முட்டாள்'' என்றான்.

'நீ முட்டாளாக இருந்தால், உன் பையில் இருக்கிற கோதுமையை எடுத்துப் பக்கத்தில் உள்ளவரின் பையில் போட வேண்டியதுதானே? ஏன் அப்படிச் செய்யவில்லை?' என்று மடக்கினார் மாவுமில்காரர்.

'அப்படிச் செய்தால் நான் இரண்டு மடங்கு முட்டாளாக, அடிமுட்டாளாக அல்லவா இருப் பேன்!' என்றான் அந்தப் பேர்வழி சாதுர்யமாக.

பழங்காலத்து மரபுக் கதைகள் நமக்கு விழிப்பு உணர்வையும், எச்சரிக்கையையும் அளிப்பவையாக விளங்குகின்றன. வெறும் ஏட்டுச் சுரைக்காயாக அவை இருப்பதில்லை. எந்த இடத்திலும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்;

உலகம் நம்மை ஏமாற்றுவதற்கு எப்போதும் தயாராக இருக்கிறது. எவரையும் லேசில் நம்பிவிடக்கூடாது. பேசுவது ஒன்றாகவும், செய்வது ஒன்றாகவும் உள்ள மனிதர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை அப்படியே நம்பினால், ஏமாறுவதைத் தவிர, வேறு வழியில்லை. நாம் பெரிய படிப்பாளி, நமக்கு எல்லாம் தெரியும், நம்மை யாராலும் ஏமாற்ற முடியாது என்று அலட்சியமாக நினைத்துவிடக் கூடாது என்பதை இந்தக் கதைகள் அறிவுரையாக நமக்கு வழங்குகின்றன.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 20

மகத்தான குருமார்களும் மாசற்ற சீடர்களும்..!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

பல மாணவர்கள் குரு பக்தியுடன் நடந்துகொள்வதைப்போல் பாசாங்கு செய்வார்கள். ஆனால், படிப்பு முடிந்ததும், வழியில் பார்த்தால்கூடத் தெரியாததுபோல் நடந்துகொள்வார்கள். உண்மையான விசுவாசிகளை அடையாளம் காண்பது சிரமம். புத்தரின் அருகில் இருந்துகொண்டே அவரைக் கொன்றுவிடத் துடித்த தேவதத்தன், சீடன் என்கிற போர்வையில் ஒளிந்திருந்த நயவஞ்சக சிறுத்தை.

நம் புராணங்களும் சரித்திரங்களும், விசுவாசமான சீடர்களை எப்படி அடையாளம் காண்பது என்று பொறிகளை நமக்குக் காட்டியிருக்கின்றன.

திருவரங்கத்தில் ராமாநுஜர் வாழ்ந்த காலம். வீடு வீடாகச் சென்று பிக்ஷை வாங்கி வரவேண்டும். அப்படி ஒருமுறை ராமாநுஜர் பிக்ஷை கேட்கச் சென்றபோது, ஒரு வீட்டுப் பெண் அவருக்கு அன்னமிட்டுவிட்டு, அழுதுகொண்டே உள்ளே சென்றாள். இதை உடையவர் கவனித்துவிட்டார். 'இதில் ஏதோ சூது இருக்கிறது' என்று அறிந்துகொண்டார். அவள் இட்ட அன்னத்தைப் பரிசோதித்ததில், அதில் நஞ்சு கலந்திருப்பது அவருக்குத் தெரியவந்தது. அவரைப் பிடிக்காத ஆசாமி, அவருக்கு விஷம் கலந்த சோறு அளிக்கும்படி தன் மனைவியை வற்புறுத்தியிருக்கிறான்.

செய்தியைக் கேள்விப்பட்டதும், உடையவருடைய குருவான திருக்கோட்டியூர் நம்பி அவரைப் பார்ப்பதற்காகத் திருவரங்கம் விரைந்தார். குரு வருவது தெரிந்ததும் அவரை எதிர்கொண்டு அழைக்க, ராமாநுஜரும் ஓடி வந்தார். இருவரும் கடும் வெயிலில் காவிரி மணலில் சந்தித்தார்கள். ராமாநுஜர், குருவின் பாதங்களில் விழுந்து வணங்கினார். காவிரி மணல் நெருப்பாகக் கொதித்துக்கொண்டிருந்தது. எனினும், நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கிய ராமாநுஜரை எழுந்திருக்கவே சொல்லாமல், மௌனமாக இருந்தார் நம்பி.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ராமாநுஜரின் சீடர்களில் ஒருவரான கிடாம்பி ஆச்சானுக்கு மாத்திரம் குருவின் இந்தச் செய்கை பொறுக்கவில்லை. 'இதென்ன, அந்தப் பெண் கொடுத்த நஞ்சைக் காட்டிலும், இவரின் செய்கை கொடியதாக இருக்கிறதே' என்று படபடப்புடன் சொல்லி, ராமாநுஜரைத் தூக்கி நிறுத்தினார்.

அதைப் பார்த்து நம்பி சிரித்தார். "ராமாநுஜரிடம் உண்மையிலேயே அதிக பக்தி உள்ளவர் யார் என்று சிந்தித்து நின்றேன்.உங்களின் கோபம், நீங்கள்தான் அவர்மீது அதிக பரிவு உள்ளவர் என்று காட்டிவிட்டது. எனவே, நீங்கள்தான் இவருக்கு இனி உணவு தயாரித்துத் தரவேண்டும்" என்று குறிப்பிட்டார். உண்மையான சீடர்களை அடையாளம் காண, அன்று ஞானிகள் இதைப் போன்ற கடுமையான வழிகளைக் கடைப்பிடித்தார்கள்,

மாணவர்களிடம் புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக் கொண்டு வருவதற்கும், அவர்களை நெறிப்படுத்துவதற்கும் சில நேரங்களில் கறாரான, கடுமையான நடவடிக்கைகளை ஆசிரியர்கள் எடுக்க வேண்டியது அவசியம். அந்த நேரத்தில் மாணவருக்கு அது வெறுப்பைத் தந்தாலும், பின்னாளில் மேன்மையைத் தருகிற நடவடிக்கையாக இருக்கும்.

பாரசீகத்தின் மன்னர், இளவரசனுக்குக் கல்வி கற்பிப்பதற்கு ஓர் ஆசானை நியமித்தார். இளவரசன் பண்புள்ள, சிறந்த மாணவனாகத் திகழ்ந்தான். இருந்தாலும், ஒரு நாள் அந்த ஆசான் எந்தத் தவறுமே செய்யாத இளவரசனைக் கடுமையாகத் திட்டி அவமானப்படுத்திவிட்டார். முதுகில் ஓர்

அடியும் வைத்தார். அன்றிலிருந்து இளவரசனுக்கு ஆசான்மீது வெறுப்பு ஏற்பட்டது. அந்த அவமானத்தைத் தன் நெஞ்சிலேயே அடைகாத்து வந்தான்.

இளவரசன் வளர்ந்தார். தந்தைக்குப் பிறகு சிம்மாசனம் அவர் வசமானது. பாதுஷாவாக முடி சூட்டிக்கொண்ட உடனே, முன்பு காரணமின்றித் தன்னை அடித்த ஆசானை வரச் செய்தார்.

'எந்தத் தவறும் செய்யாதிருந்தும், அன்று ஏன் என்னை அநியாயமாக அடித்தீர்கள்?' என்று கேட்டார்.

'பாதுஷா அவர்களே! ஒருநாள் நீங்கள் சிம்மாசனத்தில் அமரப்போகிறீர்கள் என்பதும், லட்சக்கணக்கான மக்களை ஆளப்போகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அப்போது நீங்கள் நீதிபரிபாலனம் செய்ய வேண்டிவரும். வழக்குகள் உங்கள் முன் வரும். தவறே செய்யாத ஒருவர் தண்டிக்கப்பட்டால், அது எவ்வளவு வலியைத் தரும் என்பதை நீங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான், அதுபோல தவறான நீதியை வழங்கமாட்டீர்கள். எனவேதான், அன்று அப்படி ஒரு செயலை நான் செய்தேன். அதை ஒரு நாளும் நீங்கள் மறக்கமாட்டீர்கள். மறந்தும் நீதி தவறி, நிரபராதிக்குத் தண்டனை அளிக்க மாட்டீர்கள். உங்களை மக்கள் அனைவரும் 'நீதி தவறாத மன்னர்பிரான்' என்று பாராட்ட வேண்டும் என்பதற்காகவே அப்படியொரு செயலைச் செய்தேன்'' என்றார்.

மன்னர் வியப்பில் உறைந்துபோனார்.

கற்றுத் தருபவர்களிடம் மரியாதையும், பாசமும் வைப்பது சீடர்களின் பண்பு நலன்களை மேலும் ஒரு படி உயர்த்தும். ஜென் இலக்கியத்திலும் இது உண்டு. மடத்தில் இருக்கும் இளம் துறவிகளை ஞானிகள் கடுமையாகத் தாக்குவது நடக்கும். சண்டைப் பயிற்சிகளின்போது பல கட்டங்களைத் தாண்டுவதற்கு நிறைய முயற்சியும், கடும் உழைப்பும் வேண்டும். உடம்பில் தழும்புகள் ஏற்படவேண்டும். இந்தத் தண்டனைகள் சீடர்களை காயப்படுத்தவோ, அவர்களைக் குன்ற வைக்கவோ அல்ல! மாறாக, அவர்களுக்கு விழிப்பு உணர்வைக் கற்றுத் தரவே!

சுற்றி நடப்பவற்றைக் கண்களை மூடிக்கொண்டும் கவனிக்கத் தெரிந்தவன்தான் தன்னையே கவனிக்கத் தொடங்குவான் என்பதால், அவர்களுக்கு இப்படியான கடுமையான பயிற்சிகள் அவசியம். சீடர்களும் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்வார்கள். இறைமையிடம் ஒப்படைப்பதைப்போல தன்னுடைய ஆசானிடம் தங்களை ஒப்படைப்பதை அவர்கள் இயல்பாகச் செய்வார்கள். அந்தச் சீடர்களின் பக்தியோ நாம் நினைத்துப் பார்க்காத அளவுக்கு அடர்த்தியாக இருக்கும். ஒருபோதும் அவர்கள் தங்கள் குருமார்களின் கண்டிப்புகளை மனத்தில் தேக்கி, மாய்ந்து போவதில்லை.

சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம்... விரஜானந்தரைத் தம் குருவாக ஏற்றுக்கொண்டு, அவருக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்துகொண்டிருந்தார் சுவாமிஜி தயானந்த சரஸ்வதி.

விரஜானந்தர் பார்வையற்றவர். ஸ்நானம் செய்வதற்காக யமுனா நதி வரை நடந்துசெல்வது அவருக்குக் கடினம். அதற்காக தயானந்தர் யமுனா நதியிலிருந்து தினமும் பன்னிரண்டு குடம் தண்ணீர் கொண்டு வந்து, தம் குருவைக் குளிப்பாட்டுவார். அவர் குடியிருந்த இடத்தைச் சுத்தமாகப் பெருக்கி வைப்பதும் தயானந்தர்தான்.

ஒரு நாள், தயானந்தர் தம் குருவின் வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, ஓரிடத்தில் இருந்த குப்பையைக் கவனிக்காமல் விட்டுவிட்டார். குருவின் காலில் அந்தக் குப்பை படவே, அவருக்கு அசாத்திய கோபம் வந்து விட்டது. தயானந்தரின் முதுகில் பளார் பளார் என்று அறைந்தார் அவர்.



அப்போது தயானந்தர் தம் குருவைப் பார்த்து, 'தயவுசெய்து என்னை முதுகில் அடிக்காதீர்கள். எனக்கு வலிக்கும் என்பதற்காகச் சொல்ல வில்லை. தங்கள் கை வலிக்குமே என்பதற்காகச் சொன்னேன்' என்றார்.

இவ்வாறு, தன்னை அடிக்கும் குருநாதரின் கை வலிக்கக்கூடாது என்று நினைக்கும் அளவுக்கு அன்பு மிகுந்த சீடர்கள் அன்றைக்கு இருந்தார்கள். அதனால்தான் அவர்கள் அறிவில் தழைத்து, அகிலத்தையே கவர்ந்தார்கள்.

நம் மனம் எப்போதும், உடனடியாக இனிமை கிடைக்க வேண்டும் என்பதையே நாடுகிறது. சாதித்தவர்கள் அனைவருமே தொடக்கத்தில் பல துன்பங்களைத் துணிச்சலுடன் எதிர்கொண்ட வர்கள். தவம் இருப்பதற்கே தயக்கம் இருந்தால், வரம் எப்படி வாய்க்கும்?

படிக்கிறபோதும் பணிபுரிகிறபோதும் பலர் அப்போது மகிழ்ச்சியாக இருப்பதைப் பற்றி எண்ணுகிறார்களேயொழிய, அதற்குப் பிறகு நிகழக்கூடிய நெருக்கடிகளைப் பற்றி யோசிப்பதில்லை.

இதுகுறித்து, தாவோவில் ஒரு கதை உண்டு.

குரங்குகளைக் கவனித்துக் கொள்ளும் ஒருவன், வழக்கமாகக் குரங்குகளுக்கு காலையில் நான்கு பழங்களும், மதியம் மூன்றும், இரவில் இரண்டும் கொடுப்பான்.

ஒருநாள், அவன் வழக்கத்துக்கு மாறாக காலையில் இரண்டும், மதியம் மூன்றும், இரவு நான்கு பழங்களும் தரத் தொடங்கினான். இரவு நேரத்தில் குரங்குகள் அதிக நேரம் உணவு இல்லாமல் இருக்கின்றன என்பதால், இந்த ஏற்பாட்டைச் செய்தான் அவன்.

ஆனால், குரங்குகளுக்குக் கோபம் வந்துவிட்டது. தங்களை அவன் ஏமாற்றுவதாக நினைத்துக் கத்தின; கூண்டுக் கதவுகளை பிடித்து ஆட்டிக் கலவரம் செய்தன. எனவே, அவன் மீண்டும் பழையபடியே பழங்கள் கொடுக்க ஆரம்பித்தான். அவை மகிழ்ச்சி அடைந்தன.

அவன் குரங்குகளுக்குக் கொடுத்த பழங்களின் எண்ணிக்கை, முன்பும் பின்பும் இரண்டும் ஒன்றுதான். ஆனால், கொடுத்த விதம்தான் வேறு! மாணவர்கள் விடுமுறையில் ஜாலியாக ஊர் சுற்றிப் பொழுதை வீணே போக்கிவிட்டு, தேர்வு நேரத்தில் திண்டாடுவதைப் போலத்தான், காலையில் நிறையச் சாப்பிட்டு மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று அந்தக் குரங்குகள் நினைத்தன.

நேரத்தை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள், கடினமான பணிகளை எல்லாம் காலையிலேயே செய்து முடித்துவிட்டு, பிறகு மதிய நேரத்தில் எளிய பணிகளை மேற்கொள்வார்கள். அதனால் அவர்கள் பதற்றம் இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பார்கள். பலர் காலை வேளையில் உல்லாசமாக இருந்துவிட்டு, மாலையில் மண்டையைப் பிய்த்துக் கொள்வார்கள். உற்சாகத்தைத் தள்ளிப்போடத் தெரிந்தவர்களால் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி நடை போடமுடியும்.

தனிமையில் நெடுநேரம் கண்மூடி அமர்ந்திருந்த ஞானியிடம் ஒருவர் கேட்டார்...

'ஐயா! கடவுள் உங்களிடம் என்ன கூறினார்?'

''அவர் எதுவும் சொல்லமாட்டார். கேட்டுக் கொண்டிருப்பார்.''

'அப்படியா..? அவரிடம் நீங்கள் என்ன சொன்னீர்கள்?'

''நானும் எதுவும் சொல்லமாட்டேன். கேட்டுக் கொண்டிருப்பேன்'' என்றார் ஞானி.

ஞானிகளைப் புரிந்துகொள்ள, சொற்களைத் தாண்டிப் பயணிப்பது அவசியம்.

மகத்தான ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்குப் புத்தகங்களின் மூலம் சொல்லிக்கொடுப்பதைவிட, புதிர்களின் மூலம் சொல்லித் தருவார்கள்; சரித்திரத்தின் மூலம் சொல்லிக் கொடுப்பதைவிட, சந்தர்ப்பங்களின் மூலம் சொல்லித் தருவார்கள்; அறிவுரைகள் மூலம் விளக்காமல் அனுபவங்கள் மூலம் ஆழமாகப் பதியவைப்பார்கள்.

அவர்கள் ஒரேமாதிரியான வினாத் தாளை அனைத்து மாணவர்களுக்கும் விநியோகிப்பதில்லை; ஒவ்வொரு மாணவரின் தரத்துக்கேற்ப கற்றுத்தரும் முறையைத் தீர்மானிக்கிறார்கள். குப்பியைக் கொண்டுவருபவர்களுக்குக் குடிப்பதற்கும், வட்டிலைக் கொண்டு வருபவர்களுக்கு உண்பதற்கும் அவர்கள் வழங்கி, பசியாற வைக்கிறார்கள்.

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 21

மாற்றி யோசித்த மருத்துவர்கள்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

கட்டத்தைவிட்டு வெளியே சிந்திப்பது குறித்து ஒரு புதிர் ஒரு கைதிக்கு அரசர் தண்டனை வழங்க விரும்புகிறார். ஆனால், அவன் புத்திசாலியாக இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம் என ஒரு வாய்ப்பு தருகிறார்.

இரண்டு அறைகள்; ஒன்றில் அழகான பெண்; மற்றொன்றில் பசித்த புலி.

முதல் அறையின் கதவில், 'இந்த அறையில் ஒரு பெண் இருக்கிறாள்; அடுத்த அறையில் ஒரு புலி இருக்கிறது' என்று ஓர் அறிவிப்பு காணப்படுகிறது. அடுத்த அறையின் கதவில், 'இந்த இரண்டு அறைகளில் ஒன்றில் பெண் இருக்க, மற்றொன்றில் ஒரு புலி இருக்கிறது' என்று அறிவிப்புப் பலகை தொங்குகிறது.

'இந்த அறிவிப்புகளில் ஒன்று மட்டுமே உண்மை; மற்றொன்று பொய்! இரண்டில் ஏதேனும் ஓர் அறையை நீ தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நீ தேர்ந்தெடுக்கும் அறையில் பெண் இருந்தால், அவளை நீ மணந்துகொள்ளலாம். புலி இருந்தால், அதற்கு நீ இரையாவாய்!' என்கிறார் அரசர்.

நீங்களாக இருந்தால் எந்த அறையைத் தேர்ந்தெடுப்பீர்கள்? இந்த அறிவிப்புகளில் முதல் அறிவிப்பு சரியாக இருக்குமேயானால், இரண்டாவது அறிவிப்பும் சரியாக இருக்க வேண்டும். ஆனால் ஒரு அறிவிப்பு மட்டுமே உண்மை எனும்போது, இந்த இரண்டில் இரண்டாவது அறிவிப்பு மட்டுமே உண்மை; முதல் அறிவிப்பு பொய்! அதனால், முதல் அறையில் புலியும், இரண்டாவது அறையில் பெண்ணும் இருக்கவேண்டும்.

மருத்துவம் என்பது விஞ்ஞானம் சார்ந்த அணுகுமுறை என்றாலும், அதிலும் நோய்க்கு ஏற்ப சிந்திப்பது அவசியம்.



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை பெரிய (அரசு) ஆஸ்பத்திரியில் டாக்டர் குருசாமி முதலியார் என்பவர் டாக்டராக வேலை பார்த்து வந்தார். ஆஸ்பத்திரி வாயிலில் அவருக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது.

மாலையில், புறநோயாளிகளுக்கு வைத்தியம் பார்ப்பார். பணக்காரராயினும் எளிய உடையே உடுத்தும் பண்புள்ளவர். ஏழை எளியோருக்கு வைத்தியம் செய்ய அவர் காசு கேட்பதில்லை. அவரின் அருகில் இருக்கும் மேசை மேல் நோயாளிகள் தாங்கள் விரும்பும் தொகையை வைத்துச் செல்வார்கள். அதுவும் கட்டாயமில்லை.

ஒரு நாள் மாலையில், 40 வயது மதிக்கத்தக்க பெண்மணி இவரிடம் வந்து, தனக்கு ஆறு மாத காலமாக தலைவலி தீராமல் இருப்பதாகக் கூறினார். தான் வேறு டாக்டர்களிடம் பார்த்த வைத்தியத்துக்கு ஆதாரமாக சிகிச்சைக் குறிப்புகள் அடங்கிய ஃபைல்களைக் காட்டினார். டாக்டர் அவற்றைப் புரட்டிப் பார்த்தார்.

அந்தப் பெண்மணியின் முகத்தை உற்று நோக்கினார். கண்களை மூடிக்கொண்டார். இரண்டு நிமிட நேரம் கழித்து, அந்த அம்மாளிடம், 'உங்கள் மூக்குத்தியைக் கழற்றுங்கள்' என்றார். அந்த

அம்மாளும் கழற்றிக் கொடுத்தார். பக்கத்தில் நின்ற நர்ஸிடம் மூக்குத்தியைக் கொடுத்து, பத்திரமாகப் பூட்டி வைக்கச் சொன்னார்.

'மருந்து எதுவும் வேண்டாம். பத்து நாள் கழித்து வந்து பாருங்கள்' என்று அந்த அம்மாளை அனுப்பி வைத்தார் டாக்டர்.

பத்து நாள் கழிந்து, டாக்டரைப் பார்க்க வந்த அந்த அம்மாள், 'தலைவலியே இல்லை' என்று மகிழ்வோடு சொன்னார்.

'இனிமேல் மூக்குத்தி போடாமல் இருந்தால் உங்களுக்குத் தலைவலியே வராது. இந்த வைர மூக்குத்தியின் ஒளியைத் தாங்கக்கூடிய சக்தி உங்கள் கண்களுக்கு இல்லை' என்று கூறி, அந்த அம்மாளின் வைர மூக்குத்தியைத் திருப்பிக் கொடுத்தார் டாக்டர் குருசாமி முதலியார்.

துணி தைக்கும்போது ஒரு பெண் ஊசியை விசையுடன் இழுக்கும்போது, அது தவறுதலாக அவர் கண்ணில் சொருகிவிட்டது. ஊசியில் தொங்கும் நூலைப் பிடித்து இழுத்தால், ஊசி தாறுமாறாக அந்தப் பெண்ணின் கண்ணுக்குள் பாதிப்பு ஏற்படுத்திவிடுமோ என்று அனைவரும் அஞ்சினர். உள்ளூர் மருத்துவரை அணுகியபோது, அந்தப் பெண்ணை அங்கே இங்கே நகராமல் அந்த இடத்திலேயே இருக்கும்படி கூறிவிட்டு, நான்கைந்து தென்னந்துடைப்பக் கட்டைகளைக் கொண்டு வரச் சொன்னார். வந்ததும், அவற்றை ஒன்றாகக் கட்டி, அதன் மேல் அந்தப் பெண்ணைத் தலைவைத்துப் படுக்கச் சொன்னார்.

நூலைக் கையால் பிடித்துக்கொண்டு, அந்தப் பெண்ணின் தலையின்கீழ் இருந்த துடைப்பக்கட்டையிலிருந்து ஒவ்வொரு குச்சியாக உருவும்படி சொன்னார். அப்படியே உருவ, பெண்ணின் தலை கொஞ்சம் கொஞ்சமாகக் கீழிறங்க, கொஞ்சமும் வலியே இல்லாமல் ஊசி கண்ணில் இருந்து வெளியே வந்துவிட்டது. அறுவை சிசிக்சையோ, அபாய எச்சரிக்கையோ தராமல் ஒரு பெரிய பிரச்னையை அவர் இப்படி சாமர்த்தியமாகத் தீர்த்துவைத்தார்.



ஒரு மன்னருக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்குக் கூன் முதுகு. அதனால் அவனுக்கும் மன்னருக்கும் பெரிய கவலை. பல வைத்தியர்களை வரவழைத்து மகனுக்குச் சிகிச்சை அளித்தார். ஆனால், பலனில்லை.

அப்போது அந்த ஊருக்கு வெளியூரிலிருந்து ஒரு மருத்துவர் வந்தார். அவர் இளவரசனைப் பார்த்ததும், 'இதைச் சரிசெய்ய வைத்தியமே தேவையில்லை. சில உடற்பயிற்சிகள் செய்தாலே போதும்' என்று சொல்லி, அவற்றைச் செய்து காண்பித்தார்.

இளவரசனோ விரக்தியின் உச்சத்தில் இருந்ததால், அந்த உடற்பயிற்சிகளைச் செய்யாமல் தவிர்த்தான். மன்னர் இதைக் கவனித்துவிட்டு, மருத்துவரிடம் தெரிவித்தார். பின்பு, மருத்துவரின் ஆலோசனையின்பேரில், அவன் அறையில் ஒரு பளிங்குச் சிலையை அவன் கண்ணில் படுமாறு வைத்தார்.

அது ஓர் இளைஞனின் சிலை. அந்தச் சிலை மிக அழகாக இருந்தது. அதன் அருகில் சென்று உற்றுப் பார்த்தான் இளவரசன். அதன் முகம் தன் முகம் போலவே இருக்கக் கண்டு, அது தனது உருவச்சிலைதான் என்பதைப் புரிந்துகொண்டான். 'நான் கூன் இல்லாமல் இருந்தால், இவ்வளவு அழகாக இருப்பேனா!' என்று வியந்தான். அன்றிலிருந்து சிரத்தையாக, மருத்துவர் சொன்ன உடற்பயிற்சிகளை ஒன்றுவிடாமல் செய்தான். அவன் முதுகு நிமிர்ந்தது. மன்னர் மகிழ்ந்தார்.

மருத்துவம் என்பது உடலுக்கு அளிக்கிற சத்தை மட்டும் வைத்துத் தீர்மானிக்கப் படுவதில்லை; அது உள்ளத்துக்கு அளிக்கப் படும் உந்துதலையும் உள்ளடக்கியது. சிலரோ மனதைத் தளரவிட்டுவிடுவார்கள். அப்போது தங்களையும் அறியாமல், அவர்கள் நாளுக்கு நாள் பலவீனமாகிக்கொண்டே இருப்பார்கள். மருத்துவர்கள் மட்டுமல்ல, நோயாளிக்கான மருந்தும், அவர்களைக் கவனித்துக்கொள்பவர் களும்கூட மிக முக்கியம் என்கிறார் திருவள்ளுவர். தேவையான நேரத்தில் ஓய்வு, சரியான நேரத்தில் தகுந்த உணவு, அக்கறையான கவனிப்பு என உதவியாளர்கள் அமைவதில்தான் இருக்கிறது, ஒரு நோயாளி எவ்வளவு விரைவில் பூரண நலம் பெறுகிறார் என்பது! நோயாளிகளுக்கு மருந்தைக் காட்டிலும் இதமான, ஆறுதலான, நம்பிக்கையூட்டும் சொற்கள் அவசியம். நமது முன்னோர்கள், வைத்தியர்களுக்குத் துறவியின் ஸ்தானத்தை கொடுத்துப் போற்றி வந்தது அதனால்தான்!

(இன்னும் மேலே...)

மேலே... உயரே... உச்சியிலே 22

பாரம் சுமக்காமல், பணி செய்!

வெ.இறையன்பு, ஓவியம்: அனந்த பத்மநாபன்

என்றும் இனிமை... எதிலும் புதுமை... இளைஞர் சக்தி

குழந்தைகளைக்கூட படிப்படியாக முதிர்ச்சியுடன் வளர்க்க வேண்டும். வாழ்க்கையின் சிரமமான பகுதிகளை அனுபவிக்க, அவர்களுக்கு வாய்ப்பு தரவேண்டும். கங்காருபோல குட்டிகளை கெட்டியாக இழுத்துப் பிடித்தால், பிறகு அவை கீழே குதிப்பதற்கு விரும்பவே விரும்பாது. தொடக்கத்தில் அரவணைப்பு தேவை. ஆனால், வளர வளர அவர்களை வாழ்க்கையின் நிஜங்களுக்குத் தயார்ப்படுத்துவது அவசியம்.

பருந்துகள் கூடு கட்டும்போது ஒரு நுட்பத்தைக் கையாளுகின்றன. முதலில், அவை கூர்மையான, குத்தக்கூடிய பொருட்களைக் கொண்டு தங்கள் கூட்டைக் கட்டுகின்றன. பிறகு, அவற்றின்மேல் கம்பளி போன்ற பொருட்களைப் பரப்புகின்றன. பின்னர் அவற்றுக்கு இரையான கோழி போன்றவற்றின் இறகுகளை அந்தக் கூட்டின்மீது பரப்புகின்றன. பின்னர் ஆடு, மாடு போன்றவற்றின் ரோமத்தைக் கொண்டு வந்து மேலே வைத்து, பஞ்சணை போன்ற சுகத்தை ஏற்படுத்துகின்றன. அந்த அழகான கூடு, சொகுசாக இருக்கும். அங்குதான் பருந்துகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

தொடக்கத்தில் அந்தக் குஞ்சுகள் இதமான அந்தச் சூழலில் வசதியாக வளர்கின்றன. பின்னர் தாய்ப் பருந்து, ஆடு மாடு போன்றவற்றின் உடல் ரோமங்களை நீக்கிவிடும். இப்போது சொகுசு கொஞ்சம் குறைந்துவிடுகிறது. சில நாட்கள் இதற்குக் குஞ்சுகள் பழகியதும், பறவைச் சிறகுகளையும் பருந்து அப்புறப்படுத்திவிடும். பின்னர், கம்பளி போன்ற மெத்தென்ற பொருட்களையும் அகற்றிவிடும். இறுதியாக, குத்தக்கூடிய பொருட்களோடு அந்தக் கூடு திகழும். குஞ்சுகள் போதிய அளவு வளர்ந்திருக்கும். அவை அந்தக் கூட்டில் சிரமப்படாமல் இருக்க, பறந்து சென்றுவிடும். இப்படித்தான் கழுகு தன் குஞ்சுகளை முதிர்ச்சி அடையவைக்கிறது.

இப்படித்தான், பள்ளிக்கூடத்திலும், வேலை பார்க்கும் இடங்களிலும் சிறிது சிறிதாக நாம் சின்ன பிரச்னைகளிலிருந்து பெரிய சவால்களை எதிர்கொள்ளும் நிலைக்கு ஊழியர்களைத் தயார் செய்யவேண்டும். அவர்களுக்கு எடுத்த எடுப்பில் கடினமான சூழலைத் தந்தால், மிரண்டு ஓடிவிடுவார்கள். படிப்படியாகத்தான் ஒரு பணியாளரை ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டும். பருந்து குஞ்சுகளுக்குச் செய்வது போன்ற அணுகுமுறை அவசியம். ஆனால், அது பறந்து செல்ல அல்ல; பிரச்னைகளை சவாலாக ஏற்றுப் பணியாற்ற!

நேர்மையான பணியாளர்களைத் தேர்ந்தெடுப் பதில்தான் நிர்வாகத்தின் வெற்றி அமைந் திருக்கிறது. தொடக்கத்திலேயே மோசமான பணியாளர்கள் வாய்த்தால், நிர்வாகத்தின் நிம்மதி கெட்டுப்போகும். இப்போது மைய அரசால் நடத்தப்படும் ஐ.ஏ.எஸ். பணிக்கான தேர்வில், அறவுணர்வு பற்றியும் ஒரு தாள் இடம் பெற்று இருக்கிறது. ஒருவருடைய நியாய உணர்வு குறித்த கேள்விகள் அதில் கேட்கப்படுகின்றன.

நம் நாட்டில், பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்த கதை ஒன்று உண்டு.

'நாட்டில் வரி வசூலிக்க ஒரு நேர்மையான ஆளைக் கண்டு பிடிக்கவேண்டுமே, என்ன செய்யலாம்?' என்று ஓர் அரசன் தன் மந்திரியைக் கேட்டான். அதற்கு மந்திரி, 'கவலைப்படா தீர்கள். இந்த வேலைக்கு யார் யார் மனு போட்டிருக்கிறார்களோ, அவர்களை எல்லாம் அரண்மனைக்கு நாளை வரச் சொல்லுங்கள்; அவர்களில் நேர்மையான ஆளை நான் கண்டுபிடித்துக் கொடுக்கிறேன்' என்றார்.

அடுத்த நாள் காலையில், எல்லா மனுதாரர் களும் அரச சபையில் அரசர் முன் கூடினர். மந்திரி அவர்களைப் பார்த்து, 'நீங்கள் எல்லோரும் நாட்டியம் ஆடுங்கள்! யார் நன்றாக ஆடுகிறீர்கள் என்று பார்க்கவேண்டும்' என்றார்.



ஒருவரைத் தவிர, மற்ற எல்லாரும் ஆடாமல் பேசாமல் நின்றனர். ஒருவர் மட்டும் குதித்து குதித்து ஆடினார்.

'இவர்தான் நேர்மையான மனிதர். இவரைத்தான் நீங்கள் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும்' என்று சொன்னார் மந்திரி.

'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டார் அரசர்.

'இவர்கள் எல்லாரையும் ஓர் இருட்டு அறையின் வழியாக இந்தச் சபைக்கு வரும்படி ஏற்பாடு செய்திருந்தேன். அந்த இருட்டு அறையில், திறந்த சாக்குகளில் நிறைய பொற்காசுகள் வைத்திருந்தேன். நடனம் ஆட மறுத்தவர்களைச் சோதனை போடுங்கள்; தங்க நாணயங்கள்

கிடைக்கும். ஆடினால், எங்கே இடுப்பிலிருந்து நாணயங்கள் கீழே விழுந்து தங்களைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்று பயந்துதான் இவர்கள் ஆடவில்லை' என்றார் மந்திரி.

பணியைச் செய்கிறபோது, சிலர் அதிகமான பதற்றத்துக்கு ஆளாகிவிடுவார்கள். இப்போது சின்ன வயதிலேயே சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம், இதயக்கோளாறு போன்ற பல உபாதைகளுக்கு ஆளாகிவிடுவது வாடிக்கையாக இருக்கிறது. சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பலர் மருத்துவமனைகளுக்குச் செலவிடுவதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம், செய்கிற பணியை எப்படி எடுத்துக்கொள்வது என்பது தெரியாததுதான்.

பலர் உலகத்தையே தாங்கள்தான் தாங்குவது போல நினைத்துக்கொண்டு பணியாற்றுகிறார்கள். அது அவர்களுக்கு மிகப் பெரிய சிரமத்தைக் கொடுத்துவிடுகிறது. மன அழுத்தத்தைக் கொடுத்துவிடுகிறது. அவர்களுடைய மனம் இயல்பாகச் சிந்திக்க முடியாமல் குழப்பத்தில் ஆழ்ந்துவிடுகிறது. இதிலிருந்து சற்று விலகி நின்று பணியை அணுகினால், மன அழுத்தமும் இருக்காது; சிறப்பாகவும் பணி புரிய முடியும்.

இது குறித்து, நம் நாட்டில் கதை ஒன்று உண்டு.

ஓர் அரசன் மிகவும் பொறுப்புடன் தனது நாட்டை ஆண்டு வந்தான். ஆனால், அவனுக்குத் திருப்தி இல்லை. தினமும் புதுப் புது பிரச்னைகள்; அவற்றைத் தீர்ப்பதற்குள் அடுத்த பிரச்னைகள். சலித்துக் களைத்துப் போனான் மன்னன்.

காட்டில் ஒரு ஞானி இருப்பதாகக் கேள்விப் பட்டு, அவரைத் தேடிச் சென்று, காலில் விழுந்தான். 'குருவே! என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. தினம் தினம் புதுப் புதுப் பிரச்னைகளைச் சமாளித்துச் சமாளித்து, எனக்கு அலுத்துவிட்டது. நான் அயர்ந்துவிட்டேன். தாங்கள்தான் எனக்கு ஏதாவது வழி சொல்ல வேண்டும்' என்று கேட்டான்.

'அரசாங்கத்தை நிர்வகிப்பது அத்தனை கஷ்டமாக இருக்கிறது என்றால், பேசாமல் அதை விட்டுவிடேன்' என்றார் ஞானி.

அரசனுக்கோ பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைக்கத் தயக்கம். நாடு குட்டிச்சுவராகி விடுமோ என்கிற கலக்கம்.

'அரசாங்கத்தை உன் மகனிடம் ஒப்படைத்து விட்டு, நீ காட்டுக்கு வந்துவிடு!' என்றார் ஞானி.

'என் மகன் சிறுவன். என்னாலேயே தாங்க முடியாத அரச பாரத்தை அவன் தாங்குவானா, சுவாமி?' என்று கேட்டான் மன்னன்.

'அப்படியானால் உன் ராஜ்யத்தை என்னிடம் ஒப்படைத்துவிடு; நான் கவனித்துக்கொள்கிறேன்' என்றார் ஞானி.

'தாராளமாகத் தருகிறேன். அதில் எனக்கு மகிழ்ச்சியே!' என்றான் மன்னன்.

'சரி, உன் ராஜ்யத்தை எனக்குக் கொடுக்கிறேன் என்று சத்தியம் செய்து கொடு!'

ஞானி கேட்டபடியே, அரசன் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு, அரண்மனைக்குத் திரும்பக் கிளம்பினான்.

"சரி, அடுத்து என்ன செய்வதாக இருக்கிறாய்?" என்று கேட்டார் ஞானி.

'அரண்மனை பொக்கிஷத்திலிருந்து கொஞ்சம் பணம் எடுத்துக்கொண்டு, அடுத்த நாட்டுக்குப் போய் வியாபாரம் செய்து பிழைக்கலாம் என்று பார்க்கிறேன்' என்றான் மன்னன்.

'முடியாது! அரண்மனை பொக்கிஷம் இப்போது எனக்குச் சொந்தம்.'

'ஆமாம். தாங்கள் சொல்வது சரிதான்! சரி, வேறு எங்காவது சென்று ஏதேனும் வேலை செய்து பிழைத்துக்கொள்கிறேன்!"

'வேறு எங்கோ எதற்காகச் செல்லவேண்டும். எனக்கு இத்தனை பெரிய ராஜ்யம் இருக்கிறது. நீ என்னிடமே ஏதாவது வேலை செய்து பிழைக்கலாமே?'

'மகிழ்ச்சி! என்ன வேலை தருகிறீர்களோ, உத்தரவிடுங்கள்! செய்கிறேன்.'

'நீயோ அரசனாக இருந்து அரசாங்கத்தை நிர்வகித்துப் பழகியவன். எனவே, இந்த ராஜ்யத்தை எனக்குப் பதிலாகக் கவனித்து நடத்து. உனக்குச் சம்பளம் மட்டுமே தரப்படும். நல்லது கெட்டதுக்கு நான் பொறுப்பு!'

அரசன் அன்றுமுதல், ஞானியின் சேவகனாக இருந்து அரச நிர்வாகத்தை கவனிக்க ஆரம்பித்தான். என்ன ஆச்சர்யம்! முன்பு என்ன காரியங்கள் செய்தானோ, அவற்றையேதான் இப்போதும் செய்தான். ஆனால், நிம்மதியாகத் தூங்கினான். அவனையும் மீறி தவறுகள் நடந்தால், அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. அரசாங்கம் ஞானியினுடையது; அது அவர் பொறுப்பு என்று தன் பணிகளில் மட்டும் கவனம் செலுத்தினான்.

ஒரு மாதம் கழித்து, ஞானி அவனைப் பார்க்க வந்தார்.

'எப்படி இருக்கிறது புது வேலை?' என்று கேட்டார்.

'நிம்மதியாக இருக்கிறேன், சுவாமி!' என்றான் அரசன் மகிழ்ச்சியாக.

'அரசாங்கம் உன்னுடையது என்று நினைத்துக் கொண்டிருந்தபடியால் நீ அவதிப்பட்டாய். அரசு உன்னுடையது அல்ல என்ற எண்ணம் வந்ததும், உனக்கு நிம்மதி ஏற்பட்டுவிட்டது. இந்த அரசு உனக்கு முன்னாலும் இருந்தது; உனக்குப் பின்னாலும் இருக்கப்போகிறது. ஆகவே, பற்றற்று கடமையைச் செய்தால்தான் மனிதன் இன்பமாக வாழலாம். இந்தப் பாடத்தை உனக்கு அறிவுறுத்துவதற்காகத்தான் ராஜ்யத்தை எனக்குக் கொடுக்கச் சொன்னேன்' என்றார் ஞானி. பணியை பாரமாக நினைக்காமல், கொண்டாட்டமாக நினைக்க வேண்டும்; பதக்கமாக நினைக்காமல், சேவையாக நினைக்க வேண்டும். பதவி, நம் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு தள்ளாடுவதற்காகவோ, தடுமாறுவதற்காகவோ அல்ல. விலகி நின்று பார்த்தால் எந்தப் பிரச்னையையும் தெளிவாக அணுகலாம். நமது அடுத்த தலைமுறையையும் பொறுப்பாக உருவாக்க வேண்டியது அவசியம். அப்போதுதான் நாம் விட்டுச்சென்ற பணி தொய்வு ஏற்படாமல் தொடரும்.

(இன்னும் மேலே...)

இலக்கியத்தில் மாற்று சிந்தனை

வெ.இறையன்பு

தமிழ்நாட்டு இலக்கியங்களில் மாற்றி சிந்தித்து பல பாடல்களைப் படைத்தவர்கள் இருக்கிறார்கள். தமிழுக்கே உரிய தனிச் சிறப்பாக சித்திரக்கவி போன்ற வடிவங்கள், நம் முன்னோர் மாற்றி யோசித்ததால் கிடைத்த பொக்கிஷங்கள். அதைப்போலவே வெளிக் கட்டத்தைப் படித்து, அதற்கு உள்ளே இருக்கும் அடுத்த கட்டத்தைப் படித்து, தொடர்ந்து வாசிப்பதன் மூலம் முழுக் கவிதையை ருசிக்கும் வடிவங்களும் தமிழில் உண்டு!

'சிலேடை' என்பது தமிழில் உள்ள இன்னொரு வடிவம். இரண்டு பொருட்களை ஒரே பாடலின் மூலம் உணர்த்துவது வித்தியாசமான சிந்தனையின் வெளிப்பாடு.

விருந்து ஒன்றில் தமிழறிஞரான வெள்ளைவாரணமும், கி.வா.ஜ அவர்களும் அருகருகில் அமர்ந்திருந்தனர். வெள்ளைவாரணம் அவர்களது இலையில் கேசரி பரிமாறப்பட்டது. அவருக்கோ சர்க்கரை வியாதி. எனவே இனிப்பைப் பார்த்து துணுக்குற்று, "இதை எடுத்துவிடுங்கள்' என்று கத்தினார். உடனே கி.வா.ஜ அவர்கள், "கேசரியைப் பார்த்ததும், வாரணம் அலறுகிறதோ!' என்றார். வாரணம் என்றால் 'யானை' என்று பொருள்; 'கேசரி' என்றால் சிங்கம். எனவே சிங்கத்தைப் பார்த்து யானை பயப்படுகிறதோ எனும் பொருளில் அவ்வாறு சிலேடையாகச் சொன்னார். இப்படி, வரிக்கு வரி சிலேடை பேசுவது கி.வா.ஜ. அவர்களின் தனித் திறமை.

தமிழில் சிலேடைகளுக்குப் புகழ்பெற்றவர் கவிகாளமேகம். அவரிடம் ஒருவரை அறிமுகப்படுத்தி, 'இவர் கவிராயர்' என்று சொன்னார்கள். 'கவிராயர்' என்பதற்கு கவிகளின் அரசன் என்றொரு பொருள் உண்டு. 'குரங்குகளின் தலைவன்' என்ற பொருளும் உண்டு. காளமேகப் புலவர் அவரிடம், 'இவர் குரங்கு களின் தலைவன் என்றால், இவருக்கு வால் எங்கே, முன்னிரண்டு கால் எங்கே' என்று கேலி செய்து பாடினார்.

வால் எங்கே நீண்ட வயிறு எங்கே முன்இரண்டு

கால்எங்கே உள்குழிந்தகண் எங்கே சாலப்

புரவிராயர் போற்றும் புலவீர்காள் நீவிர்

கவிராயர் என்றுஇருந்தக் கால்

தமிழ் இலக்கியத்தில் குறுந்தொகையில் உள்ள இறையனார் என்ற கவிஞர் எழுதிய பாடல் சிந்தனைக்கு உரியது. அது புகழ்பெற்ற புராண திரைப்படமான திருவிளையாடலிலும் இடம்பெற்றது. புறப்பாட்டில் அந்தப் பாடல் ஒலித்து எழுதப்பட்ட விளக்கமே, சுவைபட திரைப்படத்தில் பிரபலமான நடிகர்கள் மூலமாக கையாளப்பட்டு பிரசித்தியானது.

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!

காமம் செப்பாது, கண்டது மொழியுமோ;

பயலியது கெழீஇய நட்பின் மயில் இயற்

செறி எயிற்று அரிவை கூந்தலின்

அறியவும் உளவோ நீ அறியும் பூவே?

தலைவன் தன் காதலியின் கூந்தல் மணத்தைப் பற்றிச் சிலாகித்து வண்டிடம் கேட்பதைப்போல அமைந்து இருக்கிறது இந்தப் பாடல். பல மலர்களை ஸ்பரிசிக்கும் இயல்பு கொண்டதால், 'வண்டே, நீ எத்தனையோ மலர்களை முகர்ந்திருப்பாய். என் மனைவியின் கூந்தலைப்போல மணமுள்ள மலரை நீ பார்த்திருக்கிறாயா?' என்பதுதான் இந்தப் பாடலின் பொருள்.

இதில் நக்கீரர் குறுக்கிட்டு, 'பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணமே இருக்க முடியாது' என்று மட்டையடியாக ஒரு வசனத்தைப் பேசுகிறார்.



ஆனால்... நம் தலையில் உள்ள முடியின் வேர்களில் இருக்கும் சபாஷியஸ் சுரப்பி கள், ஒருவிதமான எண்ணெய்ப் பசை உள்ள திரவத்தை சுரக்கின்றன. அதனால் தலை பளபளப்பாக இருக்கிறது. சில நேரங்களில் தூசி படிவதற்கும் அதுதான் காரணம். அந்த திரவம் தலைக்கு ஒரு வாசனையைத் தருகிறது. ஆகவே, 'மனிதக் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை' என்ற நக்கீரரின் கூற்று தவறு.

ஆனாலும், புலவர் தந்த பாட்டில் ஒரு பொருள் குற்றம் உண்டு. 'தும்பி' என்கிற வண்டு பூக்களை ஸ்பரிசிப்பதாகச் சொல்வது, அது தேனை நுகர்கிற பூச்சி என்கிற பொருளில்தான்.

இலக்கியத்தில் பெரும்பாலும் தேனீயையும், தேனீ குடும்பத்தைச் சார்ந்த பூச்சிகளையும் வண்டினங்களாகக் கருதும் மரபு ஒன்று உண்டு. இரண்டும் வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்தவை. மலர்களில் மையமிட்டு, மகரந்தச் சேர்க்கை நடத்த உதவுவது

தேனீ இனத்தைச் சார்ந்த சில பூச்சிகள்தான். 'பம்புல் பீ' என்ற குளவி இனம் வண்டு போல இருக்கும். அது தாமரை, சாமந்தி, சூரியகாந்தி போன்ற மலர்களில் தேன் உண்டு மயங்கிக் கிடக்கும்.

வண்டுகள் தேனை சேகரிப்பது இல்லை. சில வண்டுகள் பூவையே கடித்துத் தின்கின்ற வகையைச் சார்ந்தவை. அவற்றுக்கு மகரந்தத்தைப் பற்றியோ, வாசனையைப் பற்றியோ தெரியாது. எனவே, தலைவன் தேனீயிடம் கேட்காமல் வண்டிடம் கேட்டதுதான் இதில் உள்ள பொருள் குற்றம்.

இலக்கியங்கள் மாயாவாதக் கற்பனை களைச் சொல்லி, நமக்குச் சாதாரண செய்திகளைப் புரியவைக்கின்றன. மகாபாரதத்தில் சந்தனு மகாராஜா, சத்தியவதி என்ற மீனவப் பெண்ணிடம் காதல் கொள்கிறார். அவருக்கு ஏற்கெனவே கங்கையின் மூலம் பிறந்த திறமை வாய்ந்த தேவவிரதன் என்ற மகன் இருக்கிறான். ஆனாலும், அவர் உள்ளம் சத்திய வதியை நாடியது. அவளோ சந்தனுவை மணந்து கொள்ள தந்தையின் மூலம் நிபந்தனை விதிக்கிறாள்.

சத்தியவதியின் தந்தை, 'உங்களைத் திருமணம் செய்து கொண்டால் என் மகளுக்குப் பிறக்கும் குழந்தைகளே பட்டத்துக்கு வர வேண்டும்' என்று பிடிவாதம் பிடிக்கிறான். சந்தனு அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அதேநேரம், சத்தியவதியை மறக்கமுடியாமல் தவிக்கவும் செய்தார். அவருடைய மனவாட்டத்தை அறிந்த தேவ விரதன் சத்தியவதியின் இல்லத்தை நெருங்கி அனைத்தையும் அறிந்துகொள்கிறான்.

'நான் ராஜ்யத்துக்கு உரிமை கோர மாட்டேன்' என்று சத்தியம் செய்கிறான். ஆனாலும், சத்தியத்தை நம்பாதவளாகவே இருக்கிறாள் சத்தியவதி. 'உனக்குக் குழந்தைகள் பிறந்து, அவர்கள் உரிமை

கோரினால் என்ன செய்வது?' என்று அவளுடைய தந்தை கேட்கிறார். இப்போது தேவவிரதன் இன்னொரு சத்தியம் செய்கிறான், 'நான் திருமணமே செய்து கொள்ள மாட்டேன்' என்று. அப்பொழுது வானத்திலிருந்து 'பீஷ்ம பீஷ்ம' என்ற குரல் ஒலிக்கிறது!

ஆசை ஒருமாதிரி இருந்தாலும், யதார்த்தம் வேறு மாதிரி இருக்கிறது. சத்தியவதியின் புதல்வன் வாரிசு இன்றி இறந்துபோகிறான். குரு வம்சம் தொடர பீஷ்மரையே தன் மருமகள்களுக்கு குழந்தை பாக்கியம் தருமாறு சத்தியவதி கெஞ்சுகிறாள். ஆனால் பீஷ்மரோ மறுத்துவிடுகிறார். நியாயப்படியான ஆசைகளே நிறை வேற முடியும். அநியாயமானவை ஏதேனும் ஒரு நொடியில் தூள் தூளாக உடைந்து விடும் என்பதுதான் மகாபாரதம் உணர்த்தும் மகத்தான உண்மை.

வாழ்வைப் பற்றிய சிக்கல்களை முடிச்சுப் போட்டு நம்முன் வைத்து அவற்றை நாம் எப்படி தீர்க்க முயற்சி செய்கிறோம் என்பதை இலக்கியங்கள் பரிசோதிக்கின்றன.

அவற்றில் வரும் திருப்பங்கள் நமக்கான இடைவெளியை கணிசமாக ஏற்படுத்திக் கொடுக்கின்றன. நாம் அந்தச் சிக்கலை தீர்ப்பது குறித்து நம் அளவில் சிந்திப்பதற்கு வாய்ப்பு உண்டு. நாம் அதைப் பயன்படுத்தாமல் போனால், கணக்கைப் போடாமல் விடையை கடைசிப் பக்கத்தில் பார்க்கும் மாணவனைப்போல, இலக்கியத்தின் சுவாரஸ்யம் பிடிபடாமலேயே போய்விடும்.

மேலே... உயரே... உச்சியிலே..! - 24
மரபுக் கிளையில் புதுமைப் பூ!
வெ.இறையன்பு,

இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள், கவிதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், விடுகதைகள், புதிர்கள் போன்ற அனைத்து வடிவங்களும் மனிதனைச் சிந்திக்கச் செய்வதற்காகத்தான்.

ஒரு சிம்பன்சி குரங்கின் மூளையின் அளவு 450 மில்லிமீட்டர் மட்டுமே! மனிதனுக்கோ 1400 மில்லி மீட்டர். உடல்ரீதியாக பலவீனமான மனிதன் அதிகப்படியான ஒத்தாசை, இரண்டு கால்களில் நிற்கப் பழகியது, புதியன கண்டுபிடிக்கும் தன்மை ஆகியவற்றால் வேறுபட்டான். மாமிசத்தைச் சாப்பிடும்போதுதான் தன் ஜீவராசிகளோடு பகிர்ந்துகொள்கிற பழக்கம் ஏற்பட்டது. உலகில் இதுவரை இருக்கிற கண்டுபிடிப்புகள் குறித்து ஓர் ஆய்வு செய்யப்பட்டது. அது, சந்தை சார்ந்த தனி மனிதர்கள் கண்டு பிடித்தவை, சந்தை சார்ந்த பலர் கண்டுபிடித்தவை (கூட்டுக் கண்டுபிடிப்பு), சந்தை சாராத தனி மனிதர்கள் கண்டுபிடித்தவை, சந்தை சாராத பலர் கண்டுபிடித்தவை என்று நான்கு விதமாகப் பொருட்களை பாகுபாடு செய்தது. அவ்வாறு பட்டியலிடப்பட்ட பொருட்களைப் பார்த்தால், கி.பி.1400 முதல் 1600 வரை சந்தை சார்ந்த தனி மனிதக் கண்டுபிடிப்புகளில், அச்சகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

சந்தை சார்ந்த கூட்டுக் கண்டுபிடிப்பில் இரட்டைக் கணக்குப் பதிவு, எடுத்துச் செல்லும் கடிகாரங்கள் ஆகியவை முக்கியமானவை.

சந்தை சாராத தனி மனிதக் கண்டுபிடிப்புகளில் ரத்தச் சுழற்சி, பாராசூட், குவி ஆடிகள் போன்றவை முக்கியமானவை.

சந்தை சாராத கூட்டுக் கண்டுபிடிப்புகளில் பென்சிலின், மைக்ரோஸ்கோப் போன்றவை முக்கியமானவை.

கி.பி. 1400 முதல் 1600 வரை உள்ள காலம் தனி மனிதர்களுடைய காலம். ஆனால், அப்போதுதான் குட்டன்பர்க், அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதனால் வாசிப்பதும், தகவல்களை அறிவதும் பரவலாக விரிய முடிந்தது. பலரும் புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. கி.பி. 1600 முதல் 1800 வரை தனி மனிதர்கள் குக்கர், காந்தம், ஒளியின் வேகம், தெர்மாமீட்டர், இயக்க விதிகள், நுண்ணுயிரிகள் போன்றவற்றைக் கண்டுபிடித்தார்கள். குழுவாக இணைந்தவர்கள் பால் வீதி, பெரிய அம்மைக்குத் தடுப்பு மருந்து, பாராமீட்டர், தொலைநோக்கி, ஆக்ஸிஜன், உஷ்ணவாயு பலூன், நீராவி இயந்திரம் போன்ற பல பொருட்களைக் கண்டுபிடித்தார்கள்.

அறிவு பரவலானதன் காரணமாக தங்களுக்குத் தெரிந்ததை அவர்கள் பகிர்ந்துகொள்ள முடிந்தது. தொடக்கக் காலத்தில் 10 சதவீதத்துக்கும் குறைவான கண்டுபிடிப்புகளே கூட்டத்தால் கண்டுபிடிக்க முடிந்தன. ஆனால் 200க்கும் மேற்பட்டவை கூட்டுச் சூழலில் உருவாயின. அந்தக் கண்டுபிடிப்புகள் ஏதேனும் ஒருமுறையில் சந்தைக்கு வந்தன. அதனால் கிடைத்த பலனும் அதிகமாயின. இங்கிலாந்து போன்ற நாடுகளில் பொருளாதார மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்பட்டன.

கி.பி.1800ம் ஆண்டு முதல் சமீப காலம் வரை பல கண்டுபிடிப்புகள் சந்தை சாராத கூட்டுக் கண்டுபிடிப்புகளாக இருக்கின்றன.

இது எதனால் ஏற்பட்டது என்பது நுட்பமாக சிந்திக்க வேண்டிய ஒன்று. தனி மனிதக் கண்டு பிடிப்புகள் வெகுவாகக் குறைந்து வருகின்றன. எடிசன் மின்சார பல்பை கண்டுபிடித்தார் என்று

நாம் கூறி வந்தாலும், அவருக்கும் அவரோடு போட்டி போட்டவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்துப் பரிமாற்றங்களே அந்தக் கண்டுபிடிப்புக்கு வித்திட்டன என்பதை நாம் உணரவேண்டும். பணத்தைக் குறியாக வைத்து, கண்டுபிடிப்புகளுக்குக் காப்பு உரிமை பெற்றது அவர் ஒருவரே! எனவே அவரே அவற்றைக்ை கண்டுபிடித்ததைப் போன்ற மாயத் தோற்றத்தை அந்தக் காப்புரிமை ஏற்படுத்துகிறது.

பொருளாதாரத் தூண்டுதல் இன்றியே பல கண்டுபிடிப்புகள் இன்று உருவாவதற்கு என்ன காரணம் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். நல்ல ஊதியம், வளமான வாழ்க்கை ஆகியவை பணத்துக்காக ஓடவேண்டிய தேவையைக் குறைத்திருக்கின்றன. ஒரு கருத்தைச் சந்தைக்கு உட்படுத்துவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்கிற அளவுக்கு பலமான வேலிகளை நாம் ஏற்படுத்திவிட்டோம்.

இன்று தகவல் பரிமாற்றம் வெகு எளிதில் நடப்பதுதான் இதற்குக் காரணம். இணைய தளம் மூலமாக தனக்குத் தோன்றிய அத்தனை கருத்துக்களையும் உடனே உலகத்துக்கு அறிவித்துவிடும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. கலீலியோவின் காலத்தில், அவர் அறிந்த கருத்தை வெளியே சொல்ல அனுமதி கிடைத்திருந்தால்கூட, ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்கு மேல் அது சென்றிருக்காது. இன்று கலீலியோ இருந்தால், உடனடியாக அதை ஏதேனும் ஒரு பெயரில் இணைய தளத்தில் வெளியிட்டிருப்பார்.

இன்று, சரியோ தவறோ... பல கருத்துக்கள், புதிய சிந்தனைகள் மோதுவதற்கான இடுகை நமக்குக் கிடைத்திருக்கிறது. தற்செயலாக அவை மோதும்போது சிறந்த விளைவுகள் ஏற்படலாம். சில நேரங்களில் அவதூறான செய்திகளும் இதன் மூலம் பரப்பப்படுவதற்கான வாய்ப்புகளும் நிறையவே உள்ளன. தவறானவர்களின் கைகளில் கிடைக்கிற கத்தியாக இது இருந்துவருகிறது. அதே நேரத்தில் புதிய சிந்தனைகளைப் பரப்புரை செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை என்பதை இவை உறுதி செய்கின்றன.

பலவித கருத்துக்கள் இவ்வாறு உடனடியாக வெளியே வருகிறபோது, அவற்றின் எதிர்வினை புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கு ஆதாரமாக இருந்து வருகிறது.

சீனர்கள் உலகின் நான்கு முக்கியமான பொருட்களைக் கண்டுபிடித்தவர்கள். காகிதம், அச்சு, திசை காட்டும் கருவி, வெடிமருந்து ஆகியவற்றை அவர்களே முதலில் அறிந்தார்கள். காகிதத்தைப் பல நூற்றாண்டுகள் வரையிலும் மிகவும் ரகசியமாக வைத்திருந்தார்கள். அது முதலிலேயே அனைவருக்கும் அகப்பட்டு இருந்தால், நம் பாரம்பரிய அறிவு பாதுகாக்கப்பட்டு இருந்திருக்கும்.

இந்த நான்கு பொருட்களையும் உலகுக்கு அளித்த அறிவாளிகளான சீனர்கள் கணினியையோ, ஆகாய விமானத்தையோ, அலைபேசியையோ, தொலைபேசியையோ, மின்சார விளக்கையோ கண்டுபிடிக்கவில்லை. அவர்கள் ஒரு மூடிய சமூகமாக இருந்ததுதான் இதற்குக் காரணம். கருத்துப் பரிமாற்றம் நிகழவில்லை. சீனத்தில் இருந்த மக்கள் வெளி நாடுகள் செல்வதற்கே கடுமையான தடைகள் இருந்தன. அவற்றை உடைத்துதான் யுவான்சுவாங் போன்றவர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள்.

சீனர்களின் கண்டுபிடிப்பு உறுதியானதிலிருந்து மிக உறுதியானதை நோக்கிப் பயணிக்கும் ஒன்றாக இருந்தது. புதிதாகக் கண்டுபிடிப்பதற்கு, ஆதாரபூர்வமான ஒன்றிலிருந்து கற்பனையான ஒன்றுக்குச் செல்லவேண்டும். அது, நாற்காலியில் இருந்து விட்டத்துக்கு தாவுவதைப்போல... அடைந்தால் விட்டம், விழுந்தால் மரண அடி! ஆனால், அந்த அபாயத்தைச் சந்திக்கும் நிலைக்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

கற்பனை உள்ளவர்களால்தான், மற்றவர்களால் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு கருவியைக் கண்டு பிடிப்பதற்கு யோசிக்கக்கூட முடியும். எல்லா உயர்ந்த கண்டுபிடிப்புகளும் தொடக்கத்தில் முட்டாள்தனமானவை என்று பலரால் நிராகரிக்கப்பட்டவையே! பறப்பது குறித்து சீனர்களால் சிந்திக்கவே முடியவில்லை. இந்தியர்கள் சிந்தித்தார்கள். ஆனால், நாமும் பல நாடுகளோடு கருத்துப் பரிமாற்றம் செய்ய முன்வராமல், நாம் இருக்கும் இடமே சொர்க்கம் என்று இருந்துவிட்டோம். நம்மிடமிருந்து எடுத்துச் சென்றார்களே தவிர, நாம் எதையும் கொண்டுவரவில்லை.

இன்று தனியாக ஒருவர் மிகப் பெரிய கண்டுபிடிப்பை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறு குறைவு. தனிமனிதன் கருவியாக இருக்கலாமே தவிர, அது கூட்டுச் சிந்தனையின் வெளிப்பாடுதான்.

இந்தியர்கள் புத்திசாலித்தனம் மிகுந்தவர்கள். ஆனாலும், குறைந்த அளவே நாம் கண்டுபிடிப்புகளை வழங்கி இருக்கிறோம். ஆரம்பக் காலங்களில் செய்ததைக்கூட இப்போது நம்மால் செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை யோசிக்க வேண்டும்.

நம்முடைய கல்வி பெரும்பாலும் மனத் தயாரிப்பு செய்து, அதை அப்படியே வெளிப்படுத்துவதாக இருக்கிறது. வித்தியாசமான சிந்தனைகளுக்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன. போட்டித் தேர்வுகளுக்குக்கூட யுக்திகளை அறிந்து கொண்டு தயார் செய்தால் வெற்றி பெற்றுவிடலாம் என்கிற எண்ணம் ஏற்படுகிறது. குறிப்பிட்ட படிப்புகளே உயர்ந்தவை என்கிற எண்ணம் கூடாது.

கட்டத்தைத் தாண்டிச் சிந்திக்கிற பழக்கத்தை எல்லாவற்றிலும் நாம் ஏற்படுத்த வேண்டும். புத்தகத்தில் இருப்பதை அப்படியே எழுது பவனுக்கு எந்த மதிப்பெண்ணும் கிடையாது என்கிற நிலை உருவானால்தான், அவன் சுயமாகச் சிந்திப்பான். படிப்பதை எப்படி வாழ்க்கை யோடு தொடர்புபடுத்துவது, அதிலிருந்து அடுத்த கட்டத்துக்கு எப்படிச் செல்வது என்பதைக் காட்சிப்படுத்துவது அவசியம். கற்பனைத் திறனை நசுக்குவதால், விஞ்ஞானிகள் கிடைக்கமாட்டார்கள்; வேண்டுமானால், கணினியைக் கச்சிதமாக இயக்குபவர்கள் மட்டுமே கிடைக்கக்கூடும். எனவே, சிந்தனைகளைக் கடிவாளம் இட்டுக் குறுக்குவதால் பாதுகாப்பான வாழ்க்கை கிடைக்குமே தவிர, மகத்தான சரித்திரம் கிடைக்காது.

இலக்கியங்களையும் இதிகாசங்களையும் நாட்டுப்புறக் கதைகளையும் சொல்லித் தருவது பொழுதுபோக்குவதற்காக அல்ல. பக்கவாட்டிலும் இணைக்கோட்டிலும் மாணவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான். நமது புராணங் களும் இதிகாசங்களும் நம்முடைய படைப்பாக்கத் திறனைக் கிளறிவிடுகின்றன. அந்த ஆற்றலை நாம் கணிதத்துக்கும் பயன்படுத்தலாம்; விஞ்ஞானத்துக்கும் பயன்படுத்தலாம். அவை நம் சிந்தனையையும், யோசிக்கும் திறனையும் கிளறிவிடுகின்றன. அந்தச் சிந்தனை ஓட்டத்தை அனைத்துத் துறைகளிலும் கட்டாயம் நாம் பயன்படுத்தலாம்.

பெரும்பாலான வெளிநாட்டு அறிவியல் புத்தகங்களில் இலக்கிய மேற்கோள்கள் இருக் கின்றன. நாமோ, அறிவியல் வேறு, இலக்கியம் வேறு என்று நினைக்கிறோம். மரபிலிருந்துதான் புதிய சிந்தனைகள் கிளைக்க முடியும். எல்லா புதிய கண்டுபிடிப்புகளும் மரபின் தொடர்ச்சியே! புதுமைப் பூ மரபுக் கிளையில்தான் மலர்கிறது.

மாற்றி யோசித்த சரித்திரச் சம்பவங்களையும், ஞானக் கதைகளையும், புராணப் புதிர்களையும் குழந்தைகளுக்குச் சொல்லித் தருவது அவர்களைக் கண்டுபிடிப்பாளர்களாக மாற்றுகின்ற செயல் பாட்டின் ஒரு பகுதி என்பதை அறிந்தால், அவர் கள் மட்டும் அல்ல; நாமும் மாற்றி யோசிக்கலாம். உலகையே தூக்கி வாசிக்கலாம்! **(நிறைவுற்றது)**